# கல்கி


குடும்பத்துடன் களிக்க...

KALKI 1.1.2006 ரூ.7.00
96 பக்கங்கள்



கூட்டணியைக் காப்பாத்துங்க!





க என்ன
ஸலைட்டுகளா?



க வா...அது என்ன?"


Kosmic Music

# SEASON'S BONANZA

## Kosmic Music


### Proudly Presents

Instrumental Fusion




Kunnakkudi Vaidhyanathan
& V. Balasubramaniam

Instrumental Fusion




S.L. Vaidhyanathan
& E. Gayathri

Classical Vocal





P. Unnikrishnan Live
Part-1 & 2

Instrumental Fusion





Rajhesh Vaidhya

Classical Vocal




Priya Sisters

Classical Instrumental




Prasanna

www.kosmicmusic.com

***Available on Cassettes & Cds at all Leading Music Shops***

**Kosmic Music Pvt. Ltd.** 4th Floor, Rutland Towers, 33, Shafee Mohammed Ro
Chennai - 600 006. India. Tel. +91-44-42142500 (Multi Lines)
Branches at : MUMBAI - Ph : +91-22-39452192    DELHI - Ph: +91-11-5568669.

# ஆறு

ரத்த ஆறு என்று பெயரிடப்பட்டிருக்க வேண்டிய படம். சமீபகாலமாக வந்த தமிழ்ப் படங்களில் வேறெந்தப் படங்களிலாவது வன்முறை இந்தளவுக்குக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்குமா தெரியவில்லை.

நாதன் அண்ட் கோ என்கிற பெயரில் தனது மூன்று சகோதரர்களுடன் ஃபுரபெஷனலாக ரௌடியிஸம் செய்து வருபவர் ஆசிஷ் வித்யார்த்தி. இவரது அடியாள்தான் நம் ஹீரோ சூர்யா. இவரைப் பகடைக் காயாகப் பயன்படுத்தியதோடு ஒரு கட்டத்தில் துரோகமும் இழைத்து விட, வெகுண்டு எழுகிறார் சூர்யா. முடிவு - சுபம்!

சைதாப்பேட்டை பாலத்தின் அடியில் வசிக்கும் சூர்யாவின் ஆண்டான்குப்பம் பகுதியை இயக்குநர் அசாத்தியமாகக் கையாண்டுள்ளார். சேரி மக்களின் பேச்சும் வாழ்க்கை முறையும் படத்தோடு அழகாகப் பின்னிப் பிணைகின்றன. கலை இயக்குநருக்கு ஒரு ஷொட்டு.

த்ரிஷாவுக்குப் பெரிதாகச் சொல்லிக் கொள்ளும்படியான வேடமில்லை. எனினும் சில காட்சிகளில் மட்டுமே தோன்றும் 'அண்ணி' மாளவிகா சூர்யாவின் வளர்ப்பு அக்காவாகவும், ஐஸ்வர்யா, ரெடிமேட் மகளிர் அணி பேச்சாளராகவும் பச்சென்று ஒட்டிக் கொள்கிறார்கள்.

அரசியல்வாதியின் சுயநலம் தெரியாமல் தீக்குளிக்க முன் வரும் ஏழைகளை உருக்கமாகக் காண்பித்து வெற்றியடைகிறார் ஹரி. ஆனால் ஐந்து அப்பாவிகள் தீக்குளித்து இறந்து போனதை அரசோ, மீடியாக்களோ கொஞ்சமும் கண்டு கொள்ளவில்லை என்பது பானை சோற்றுக்குள் ஆனை பூசணிக்காய்!

ஒரு சில இடங்களைத் தவிர வடிவேலு காமெடியில் ஏமாற்றியது எதிர் பாராதது!

சூர்யா ஆந்திராவில் அங்கீகரிக்கப்பட்டதால் அந்த ஊர் ரசிகர்களைத் திருப்திபடுத்துவதற்காக முயற்சித்திருப்பார்கள் போல. இறுதி வரை தொக்கி வந்த சுவாரஸ்யம், வன்முறைக் காட்சிகளால் சலிப்பு நிலைக்கு இறங்கி விடுகிறது.

- லஜ்ஜாவதி



**இந்து முன்னணிக்கு இது வெள்ளி விழா ஆண்டு... மனிதர் பரபரப்பாக இருப்பார் என்று பார்த்தால், மிகவும் அமைதியாக இருக்கிறார் இராம. கோபாலன். ஆனாலும் வார்த்தைகள் அனலாகவே இருக்கின்றன.**

**இந்து முன்னணி போன்ற சமுதாய இயக்கங்களால் மக்களுக்கு என்ன பலன்?**

நாட்டுல மக்களுக்கு ஆசை காட்டி வலுக்கட்டாயமா மதமாற்றம் நடந்துட்டு இருக்கு. அதைத் தட்டிக் கேட்டது நாங்கள் தான். பகுத்தறிவுங்கற பேர்ல இந்துக்களை வரம்புமீறி தி.க.காரங்க கேவலப்படுத்தினாங்க. அந்த பேத்தல்களுக்கு முறையா பதில் கொடுத்ததோட மட்டுமில்லாம மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி இருக்கோம். தீண்டாமைக்கு எதிரா நிறைய பணிகள் செய்றோம். ஆனா இன்னும் முழு வெற்றி கிடைக்கலை.

**இந்து முன்னணி வெள்ளி விழா கொண்டாடுற நேரத்துலயும் திராவிட கட்சிகள் தானே மாறி மாறி ஆட்சியில இருக்காங்க.**

அதையே இப்படிப் பாருங்க. திராவிட கட்சிங்க மாறி மாறி ஆட்சியில இருக்கறப்போதான் நாளுக்கு நாள் திருவண்ணாமலை கிரிவலம் போறவங்க எண்ணிக்கை கூடிக்கிட்டே இருக்கு. மேல்மருவத்தூருக்குக் கூட்டம் கூட்டமா போயிட்டு இருக்காங்க.

சரி.. நீங்க சொல்றது சரின்னே வச்சுக்குவோம். இவங்கல்லாம் பகுத்தறிவுக் கொள்கைகளையா பிரசாரத்துல பயன்படுத்தறாங்க. இல்லையே. ரோடு போட்டேன். பாலம் கட்டினேன்னு சொல்லித் தானே வோட்டு கேட்கறாங்க.

**இந்துக்கள் குடும்பத்துக்கு மூன்று குழந்தைகள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் சுதர்ஷன் கூறியிருப்பது மிகப்பெரிய அபாய அறிகுறி இல்லையா...**

இல்லவே இல்ல.. சுதந்திரம் வாங்கினப்போ மூணு கோடியா இருந்த முஸ்லிம் மக்கள் தொகை இன்னிக்கு கிட்டத்தட்ட பதினாலு கோடி. இப்படியே போனா இருபது வருஷத்துல முஸ்லிம்கள் தாம் நாட்டுல அதிக எண்ணிக்கையில இருப்பாங்க. ஆனா இந்துக்களுக்கு மட்டும் ஒரு குடும்பம் ஒரு வாரிசுன்னு சொல்லிட்டாங்க. எதுக்கு இந்த ஓரவஞ்சனை. அப்புறம் ராணுவத்துலயோ காவல் துறையிலயோ இந்துக்களே இருக்கமாட்டாங்க. முழுக்க முஸ்லீம்கள் தான் இருப்பாங்க. அது மிகப் பெரிய ஆபத்து. அதனாலதான் அப்படி சுதர்ஷன் சொல்லியிருக்கார். அவர் சொன்னது நூத்துக்கு நூறு சரிதான்.

# “நாங்கள்



**நீங்கள் இந்தத் தேர்தலில் யாரை ஆதரிக்கப் போகிறீர்கள்?**

நாங்க இந்து விரோதியையும் ஆதரிக்கப்போற தில்லை. இந்து துரோகிக்கும் ஆதரவு தரப் போற தில்ல. நிச்சயமா மூணாவது அணி வரும். அதுக்கு எங்களோட ஆதரவு இருக்கலாம். பா.ஜ.க. தனித் துப் போட்டியிடுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ரொம்ப ரொம்ப சந்தோஷம். ரெண்டு சீட்டு ஜெயிச்சாலும் இது கருணாநிதி போட்ட பிச்சை. ஜெயலலிதா போட்ட யாசகம்னு சொல்லாம இருக்கலாம்.

**தேர்தல் அரசியலுக்கு வராத இயக்கங்கள் நக்ஸல் இயக்கங்களுக்கு இணையானவை என்கிற கருத்து பற்றி...**

என்னது... எங்களை நக்சலைட்டுன்னு சொல்றீங்களா..! இந்து முன்னணி ஒரு சமுதாய இயக்கம். ஆனா இந்து முன்னணி ஒரு வன்முறை இயக்கம் மாதிரி ஒரு தவறான இமேஜை சில பேர் திட்டமிட்டு ஏற்படுத்தியிருக்காங்க.

**தலித் இயக்கங்களின் வளர்ச்சியை எப்படிப் பார்க்கிறீர்கள்..?**

சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டுவரும் அவர்கள் சுயகௌரவத்தையும் தன்மானத்தையும் எதிர் பார்ப்பதில் என்ன தவறு? அவை வளர்ச்சியடைய வேண்டும் என்பதுதான் எங்களுடைய எண்ணம். உண்மையில் மேல்தட்டு மக்கள் இந்துக்களாக இருப்பதைவிட தலித்துகள் மதம் மாறாமல் இருப் பதே ரொம்ப முக்கியம். அவர்களை மதித்து ஏற்

## “...நக்சலைட்டுகளா..?”
## கொதிக்கிறார் இராம.கோபாலன்

றால்தான் அவர்கள் நம்முடன் இருப்பார்கள்.

**கலைஞர் - ஜெயலலிதா இருவருக்கும் உங் களுடைய அட்வைஸ்..**

கருணாநிதியின் இந்து விரோதமும் ஜெய லலிதாவின் இந்து துரோகமும் இன்னும் தீவிர மாகட்டும்... அப்பொழுதுதான் அவர்கள் இருவரும் புறக்கணிக்கப்பட்டு தமிழகத்துக்கு நல்லது நடக் கும் (பலமாகச் சிரிக்கிறார்).

- இரா.முத்துக்குமார்

படம் : ஸ்ரீஹரி


**கல்கி**

**பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்**
அச்சிட்டு வெளியிடுபவர் :
**கி. ராஜேந்திரன்**

கல்கி பில்டிங்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
**சீதா ரவி**

ஆசிரியர் குழு :
**அனுராதா சேகர்**
**ஆர்.சி. ஜெயந்தன்**
**மு.மாறன்**

வடிவமைப்பு :
**எஸ். ஸ்டீஃபன்**
**பி.ஆர். ராஜன்**

தொலைபேசி :
2225 1522, 2225 0623,
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.390/-
ஆறு மாதம் : ரூ.195/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 63.50யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2060/-

**Bharathan Publications Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

**ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு**



## தம்புரு

# நல்ல காரியம் நடக்குது!

ஃபானூஸ், மாலா மிரட்டல்களுக்கெல்லாம் அஞ்சாமல் மார்கழி இசை விழா நிகழ்ச்சிகளில் எப்போதும்போல் ரசிகர்கள் கூட்டம். ஆனால் கூட்டம் வரும் கச்சேரிகள் எல்லாம் உயர்ந்த கச்சேரிகளா என்று மட்டும் கேட்டுவிடாதீர்கள். பெரும்பான்மையின் ரசனை எப்போதும் தனி ரூட்டில் போகும்.

நாத இன்பம் அமைப்புக்காக ராககதா அரங்கில் டி.கே. கோவிந்த ராவ் பாடியபோது பத்திருபது பேர்தான். ஆனால், ஹமீர் கல்யாணியும் தோடியும் அவருடைய சாரீர இடைஞ்சல்களையெல்லாம் உடைத்தெறிந்து விட்டு பூத்துப் பொலிந்தன. நாதஸ்வர சங்கதிகளும் பிருகாக்களும் இல்லாமலே இப்படி தோடியை அழகு படுத்த முடியும் என்பது நமக்கு ஏறத்தாழ மறந்தே போன நிலையில், அதை அழுத்தமாக நினைவூட்டினார் கோவிந்தராவ்.

அசோக் ரமணியும் தோடி பாடினார். - நுங்கம்பாக்கம் கல்சுரல் அகாடமிக்காக ராமராவ் கலா மண்டபத்தில். (கல்கியில் பட்டியலிட்டிருந்த மாதிரி ஸ்பெஷல் 'தீமாடிக்' கச்சேரியெல்லாம் இல்லை... நார்மல் ரகம் தான்) கோவிந்த ராவுக்கு இருந்த அளவு ரசிகர் கூட்டம்தான் இங்கும். ஆனால் ராககதாவில் தலைகள் ஆடியதுபோல் ராமாராவில் ஆடவில்லை. பிரும்ம பிரயத்தனப்பட்டு தமது குரல் பிரச்னையைச் சீராக்கியிருக்கிறார் அசோக் ரமணி. அதற்காக வாழ்த்தியாக வேண்டும். ஆனால் சங்கீதம் சோபிக்கவில்லை.

காரணம் என்ன என்று அசோக் ரமணி சார்பில் நாம் யோசித்ததில் கண்ட முடிவு :

அவர் ஸ்வர ஸ்தான சுத்தத்துக்காக படாத பாடுபட்டு பெருமுயற்சி எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. கவனமும் சக்தியும் அதிலேயே செலவாகிவிட, பாவமும் ரக்தியும் வெய்ட்டிங் லிஸ்டில் உட்கார்ந்து கொண்டிருக்கின்றன.

குரலையும் தாண்டி கோவிந்த ராவின் சங்கீதம் வெற்றி பெறக் காரணம். ஸ்வர ஸ்தானங்கள் அவருக்குத் தன்வயப்பட்டுவிட்டதால் பாவமும் ரக்தியும் வி.ஐ.பி. பாஸுடன் வலம் வருவதுதான். அசோக் ரமணியின் வெயிட்டிங் லிஸ்ட் ஐட்டங்கள் விரைந்து முன்னேறட்டும்.

சமீப வருடங்களில் இரண்டு மூன்று வித்வான்கள் 'குரல் இழப்பு' பிரச்னையால் வாட்டப்பட்டிருப்பது பரிதாபம்தான். குரல் வளம் என்பது மிக நுணுக்கமான எலக்ட்ரானிக் கருவியைவிட அதிக சூட்சமங்கள் நிரம்பியது. அதைச் சரியாகப் பிரயோகம் செய்வது ரொம்ப முக்கியம். துஷ்பிரயோகம் செய்யாமல் இருப்பது அதைவிட முக்கியம். ஒலிபெருக்கி யுகத்தில், நாபியிலிருந்து பாட வேண்டும் என்ற அடிப்படை அம்சத்

• அக்கறை சுபலக்ஷ்மி



• சாருமதி ரகுராம்



துக்கு அச்சுறுத்தல் எழுந்துவிட்டது. தொண்டையின் அசைவுகள் நகாசு. ஆனால், நெஞ்சும் நாபியும் உந்துசக்தியாக அமையா விட்டால் நகாசு சீக்கிரமே செல்லாக்காசு ஆகிவிடும்.

இன்று பாடிக் கொண்டிருக்கும் சில பல இளசுகள் இதை உணர்ந்ததாகத் தெரிய வில்லை.



• அகாடமி துவக்க விழா

குரலைப் பற்றிய கவலையில்லாமல் கச்சேரிக்கு வருகிறவர்கள் பக்க வாத்தியக் கலைஞர்கள். (சில சமயம் பிரதான பாடகரின் குரல் - சுருதி பற்றிக்கூட இவர்கள் கவலைப்படுவதில்லை என்பது வேறு விஷயம்!)

இவர்களுக்கு இன்னொரு மிகப் பெரிய ஆதாயமும் இருக்கிறது. பல பேருக்கு வாசிக்கும் வாய்ப்பு குறுகிய காலத்தில் கிடைத்துவிடுவதால் நிறைய நல்ல சங்கீதம் கேட்கும் வாய்ப்பு; சீக்கிரமே ஞானமும் அனுபவமும் பெருகி விடுகின்றன. அடிப்படை ஆற்றல் என்னும் அஸ்திவாரத்தின் மேல் இந்த அனுபவ மாளிகையைக் கவனமாக அலங்கரித்துக் காத்துவரும் அக்கறை சுபலக்ஷ்மி சாருமதி ரகுராம் ஆகியோரது வாசிப்பு கச்சேரிக்குக் கச்சேரி மெருகேறி வருவது மகிழ்ச்சியான விஷயம்.


மேற்கத்திய வாத்தியமான வயலினை 'மடிசிஞ்சி' என்று கருதப்படும் கர்நாடக சங்கீத உலகம் மிகச் சுலபமாக ஏற்று, தனதாகவே ஆக்கிக் கொண்டுவிட்ட வரலாறை அகாடமியில் நினைவுகூர்ந்தார் தலைவர் முரளி. இந்த வருடம் சங்கீத கலாநிதி பெறும் எம்.சந்திரசேகரனையும் சேர்த்து பத்து வயலின் வித்வான்கள் இந்த விருதைப் பெற்றுள்ளனராம்.

வயலினுக்கு கிட்டத்தட்ட 12% சதவிகிதம் இட ஒதுக்கீடு அளித்தது அகாடமி செய்த நல்ல காரியம்.

சங்கீத கலாநிதி எம்.எஸ்.எஸ். நினைவாக ஆண்டுதோறும் ஒரு லட்சம் ரூபாய் (அப்பட்டத்தைப் பெறுபவருக்கு) அறிவித்தது. 'தி ஹிந்து' நாளிதழ் செய்த நல்ல காரியம்.



• டி.கே.கோவிந்த ராவ்



• அசோக் ரமணி

'மாலா' புயல் அபாயம்; நிர்வாகத்தை மிரட்டிக் கொண்டிருக்கையில் ''நிர்வாகப் பணிகளை முடுக்கி விட வேண்டும்'' என்று காரணம் கூறி, தமிழக முதல்வர் அகாடமி துவக்க விழாவைத் தவிர்த்தது நல்ல காரியம்.


"அடுத்த ஆண்டு கட்டாயம் வருவேன்" என்று தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார் முதல்வர். "அடுத்த ஆண்டு நான் தான் சங்கீத கலாநிதி" என்று அதே தன்னம்பிக்கையுடன் கூறும் சில குரல்கள் அகாடமி காரிடாரில் கேட்கின்றன.

# ஹஹ் ஹா!

"சென்னை கிரிக்கெட் டெஸ்ட்டுக்கு வந்திருந்த விக்கட் கீப்பர் தோனி ஓய்வு நேரத்துல, ஏதோ படம் பார்க்க விரும்பினாராமே! என்ன படம்?"

"வேறு என்ன? 'ஆறு' தான்!"

- சம்பத்குமாரி



"இது உங்க முதல் கச்சேரின்னு அறிவிச்சதும் சபாவுல பாதி ஜனங்க கைதட்டினாங்க."

"நானும் பார்த்தேனே..."

"இதுவே உங்க கடைசி கச்சேரின்னு அறிவிச்சிட்டீங் கன்னா மீதி ஜனமும் கைதட்டும்."

- அஜித்லால்





"நீங்க இப்பப் பாடினது என்ன ராகம்...?"

"தெரிஞ்சிருந்தா முன்னாடியே சொல்லிட்டுப் பாடமாட்டேனா..?"

- இடைப்பாடி ஜெ.மாணிக்கவாசகம்



"நம்ம தலைவருக்கு 'கேப்டன்'னு பட்டப் பெயர் வச்சது தப்பா போச்சு!"

"ஏன்? என்ன ஆச்சு?"

"கிரிக்கெட் கேப்டன் மாதிரி கட்சி விஷயங்களில் ஏதாவது முடிவு எடுக்கணும்னா டாஸ் போட்டு முடிவு எடுக்கிறாரே!"

- சம்பத்குமாரி




# NEW YEAR
# DISCOUNT SALE
untill 28-12-2005 to 4-1-2006

## DISCOUNT SALE OFFERS

- No MC on most of the items
- No MC on Ruby, Emerald, Antique & Ethnic items
- No MC on Diamond Jewellery
- No MC on most of the Silverwares
- Rs. 2, 000 off per carat in Diamond cost
- 20% off on fancy / 1gm Jewellery
- 10% off on Balaji frames, Tanjore painting & other pictures
- 10% off on Ruby, etc., stone cost
- 10% off on gift items
- 50% off in 1st instalments in chit
- New year Gifts

BUY THE BIRTH STONE; SETTING IS **FREE**

**Swarnalaya Jewellery,** 5, Venkatnarayana Road,
T.Nagar, Chennai - 600 017
Tel: 0091-44-42125353, 42125454, 24358388.
e-mail : a.sugumaran@gmail.com, www.swarnalayajewellery.co.in

SWARNALAYA
**Jewellery**
Gold, Diamond, Ruby, Emerald and
Blue Safire Jewellery Collections

# சினேகா பாதி! பூமிகா பாதி!

தலைப்பிலேயே வர்ணனை, இன்ன பிற வந்தாச்சு என்பதால் நேரடியாக சப்ஜெக்ட்டுக்குப் போலாம்! கீர்த்தி சாவ்லா மும்பையின் புதிய வரவாச்சே!

**புதுமுகம்**

படிப்பு என்னவோ பத்தாவதுதான். ஆனால் அதுக்கப்புறம் நடிப்புப் பயிற்சி, மாடலிங், சினிமான்னு நிறைய கத்துக்கிட்டுதான் தமிழ் சினிமாவுல புதுமுகமா காலடி எடுத்து வைச்சிருக்கேன். வந்த வேகத்துல 'ஆணை', 'உயிரெழுத்து', 'வேட்டை' என மூன்று படங்கள் கிடைச்சுது.

**புதுப் பாராட்டு**

பார்க்கிறவங்க எல்லாம் "ஐய், நீங்க சினேகாவையும் பூமிகாவையும் உரிச்சு வைச்சிருக்கீங்க'ன்னு ஆச்சர்யப்படறாங்க.

**புதுப்படம்**

கஜினி, சிவகாசி பார்த்தேன். 'வடுமாங்கா' பாட்டைக் கேட்ட மாத்திரத்துல அதுக்கு அடிமையாயிட்டேன். விஜய், த்ரிஷா ஜோடிப் பொருத்தம் அமர்க்களம்.

**புது அறிவுரை**

அண்ணாதான் அடிக்கடி தலையில் குட்டி அட்வைஸ் பண்ணுவான். 'தொழில்ல நேர்த்தி வேணும்'னு மூச்சுக்கு முந்நூறு தரம் ஒப்பிப்பான்.

**புதுக் கனவு**

சென்னையில இருக்கிறதாலோ என்னவோ அடிக்கடி மழை, புயல், வெள்ளம் எல்லாமே என் கனவுல வருது. நான் வேற கிரவுண்ட் ஃப்ளோரில குடியிருக்கேன். பயமா இருக்கு.

**புது முயற்சி**

உங்க ஊரு சிவாஜி கணேசன் படங்களை எந்நேரம் டீ.வி.யில போட்டாலும் கொட்டக் கொட்ட முழிச்சுப் பார்க்கறேன். நடிப்பு நூலகம் அவர்!

**புது ஷாப்பிங்!**

பாம்பே பொண்ணுக்கு ஏத்த ஷாப்பிங் மால்கள் இங்கே இல்லை. என்னைத்தான் யாருக்கும் தெரியாதே. சில சமயம் ரங்கநாதன் தெருவுல இறங்கி எனக்குத் தெரிஞ்ச தமிழ்ல பேரம் பேசி வாங்கிடுவேன்.

- ச.ந.கண்ணன்

அட்டை, படம் : **புதூர் சரவணன்**



வம்பாளர்களுக்கு
வாசன் அட்வைஸ்!

# "கூட்டணிக்கு வேட்டு வைக்காதீங்க!"



பச்சை மிளகாய் கேள்விகளுடன் போனாலும் விளக்கெண்ணெய் சாஷேயைக் கொடுத்தனுப்புவதில் வல்லவராகி வருகிறார் ஜி.கே. வாசன். தமது பேச்சோ செயலோ, எவரையும், குறிப்பாகக் கூட்டணிக் கட்சியினரைத் துளிக் கூட பாதிக்கக் கூடாது என்பதால் எக்ஸ்ட்ரா உஷாராக இருக்கும் ஜி.கே. வாசனோடு ஒரு சந்திப்பு.

**நீங்கள் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக நியமிக்கப்பட்டு கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் ஆகின்றன. இருந்தும் உங்களுக்குத் துணையாக மாநில அளவில் நிர்வாகிகள் யாரும் நியமிக்கப்படவில்லையே! இந்த நிலை கட்சியின் செயல்பாடுகளைப் பாதிக்கவில்லையா?**

பாராளுமன்ற தேர்தலுக்கு நான்கு மாதங்களுக்கு முன்பு நான் தலைவராக அறிவிக்கப்பட்டேன். அதிலிருந்து கட்சி ரீதியான, தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளில் தமிழ்நாடு காங்கிரஸ், எந்தவிதத் தொய்வுமில்லாமல் ஈடுபட்டு வருவது தெரியும். பாராளுமன்ற தேர்தல், அது முடிந்து அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் சேர்க்கை, அதைத் தொடர்ந்து அகில இந்திய மற்றும் பிரதேச காங்கிரஸ் உறுப்பினர்கள் நியமனம், பின்னர் மத்திய அரசின் மக்கள் நலத் திட்டங்களை மக்களிடம் விளக்கிக் கூற பொதுக் கூட்டங்கள் என்று தொடர்கின்றன பணிகள். இப்போது வரும் சட்டமன்ற தேர்தலைச் சந்திக்க தமிழகத்தில் கூட்டணியை அமைத்திருக்கிறோம். பாராளுமன்ற தேர்தலுக்கு முன்னர் ஒருங்கிணைப்பு கமிட்டி ஏற்படுத்தி செயல்பட்டது போல இப்போதும் ஓர் ஒருங்கிணைப்பு கமிட்டியை விரைவில் காங்கிரஸ் மேலிடம் அறிவிக்கும்.

**செயல்பாடுகள் தொடர்ந்து கொண்டிருந்தாலும் நீங்கள் ஒற்றைத் தலைவராகத்தான் சுற்றி வருகிறீர்கள். கட்சி வளர்ச்சியில் முழுக் கவனத்தையும் செலுத்த முடிகிறதா?**

நிர்வாகிகள் இல்லாததால் எந்தப் பணியும் பாதிக்கப்படவில்லை. ஆனால் நிர்வாகிகள் போடப்படும்போது, கட்சிப்

பணிகள் மேலும் முனைப்பு பெறும் என்பதில் சந்தேகமில்லை. மேலிடம் இங்குள்ள நிலையை நன்கறிந்து இருக்கிறது. எனவே நிர்வாகிகளைப் போடுவது மேலிடத்தின் கைகளில் தான் இருக்கிறது. சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னமும் சில மாதங்களே இருக்கும் நிலையில், கட்சி வலிவோடும் பொலிவோடும் இருக்க வேண்டிய அவசியமாகிறது. இப்போது எங்கள் முழுக் கவனமும் சட்டமன்ற தேர்தலில்தான் இருக்கிறது.

**நீங்கள் இளைஞராக இருப்பதாலும் கட்சிக்குப் புதிதாக வந்து இந்த நிலைக்கு வந்ததாலும், மற்ற பிரமுகர்களின் ஆதரவு உங்களுக்குக் கிடைக்கவில்லை என்று சொல்லலாமா?**

மூத்த தலைவர்களின் ஆதரவு எனக்கு முழுமையாக இருப்பதாகத்தான் கருதுகிறேன்.

**ஆனால் நடைமுறையில் பலர் தனித்தீவாக அல்லவா செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்?**

தமிழ்நாட்டில் 37 வருட காலமாக கட்சி ஆட்சி பீடத்தில் இல்லை. இருந்தும் உயிரோட்டமாக இருக்கிறதென்றால் அதற்குக் காரணம் பெருந்தலைவர் காமராஜ் போன்ற பல தலைவர்கள் போட்ட அடித்தளம் தான். அந்த அடித்தளத்தை மேலும் பலப்படுத்தி இலட்சியத்தை நோக்கி நடைபோட வேண்டியது தான் தமிழக காங்கிரஸின் கடமை. இதை அனைவரும் உணர்ந்து, கட்சி வளர்ச்சிக்கு ஒட்டுமொத்தமாக எல்லோரும் பாடுபட வேண்டும் என்பது என் வேண்டுகோளும் விருப்பமும் ஆகும்.

**கட்சித் தலைவர் சோனியா காந்தி பிறந்த நாளைக் கூட, தமிழக காங்கிரஸ் சார்பாக பெரிய அளவில் பொது விழாவாகக் கொண்டாட முடியாமல் கோஷ்டி ரீதியாகத் தானே கொண்டாடுகிறீர்கள்!**

பல தலைவர்கள், பல இடங்களில், பரவலாகக் கொண்டாடுவதும் நல்லது தானே. இதன் மூலம் காங்கிரஸின் செல்வாக்கும் பெருமையும் கூடும்தானே.

**நிலைமை வேறு விதமாக அல்லவா இருக்கிறது. இப்போது திண்டிவனம் ராமமூர்த்தி கருத்துகள் கூட்டணிக்கே வேட்டு வைக்கும்படி இருக்கிறதே.**

எல்லா கட்சிகளிலும் கருத்து வேறுபாடு என்பது உண்டு. காங்கிரஸ் மிகப் பெரிய ஜனநாயக இயக்கம். இதில்



எல்லோருக்கும் கருத்து சொல்லும் உரிமை இருக்கிறது. ஆனால் சொல்லப்படும் அந்த கருத்தானது கட்சி வளர்ச்சிக்கு உதவும் என்றால் அது பாஸிடிவ் ஆன விஷயம் ஆக அமையும். பலருக்குப் பலவித கருத்துக்கள் இருந்தாலும், இறுதியில் மேலிடம் எடுக்கும் முடிவுகளுக்குக் கட்டுப்பட்டுச் செயல்படுபவன்தான் காங்கிரஸ்காரன். இப்போது கொள்கை முடிவெடுத்து ஒரு கூட்டணியை மேலிடம் தமிழகத்தில் அமைத்திருக்கிறது. இந்தக் கூட்டணி அப்படியே ஒற்றுமையாகச் செயல்பட்டு வெற்றிக் கனியைப் பறிக்க வேண்டும். கூட்டணிக்கு வேட்டு வைக்கும் விதத்திலோ சங்கடப்படுத்தும் விதத்திலோ யாரும் கருத்துக்களைச் சொல்லக் கூடாது என்பது தான் என் பணிவான வேண்டுகோள்.

**'தமிழக காங்கிரஸ் தி.மு.க.விடம் அடிமைப்பட்டு போகக் கூடாது. சுய கௌரவத்தை நிலைநாட்ட வேண்டும்' என்று சொல்கிறார் திண்டிவனம். தமிழக காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் இது பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

அவரது கருத்துகள் பற்றி மேலிடத்துக்கு எடுத்துக் கூறி விட்டோம். அவர்கள் பரிசீலனை செய்து விளக்கம் பெற்று தேவையான நடவடிக்கை எடுப்பார்கள்.

**'இவர் சொன்னதை அங்கு சொல்லி விட்டேன்' என்பது ஏதோ அஞ்சல் அலுவலகச் செயல்பாடு போலல்லவா இருக்கிறது. உங்களுக்கென்று இது பற்றி கருத்து எதுவும் கிடையாதா?**

இந்தக் கண்ணோட்டமே தவறு. இது போன்ற கருத்துகளுக்கு எந்த அடிப்படையும் கிடையாது. இந்தக் கருத்துகள் கட்சியை நிச்சயம் பாதிக்கும். இது காங்கிரஸுக்கு நல்லது செய்யக் கூடிய விஷயமாகத் தெரியவில்லை.

**நீங்கள் மத்திய அமைச்சர் ஆகப் போகிறீர்கள் என்று தொடர்ந்து பேச்சு அடிபடுகிறதே!**

நான் எதையும் எதிர்பார்க்கவில்லை. இப்போது இருக்கும் நிலையிலேயே மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறேன்.

- ப்ரியன்

படம் : ஸ்ரீஹரி


மீண்டும் வசந்தம்
Since 1990

Temple of Re-marriage
Re-marriage Exclusively for
**Divorcees, Widows, Widowers,** All Caste, Religion, Age/with or without issue

**10000** மறுமணம்... நடத்தி வைத்த மாமனிதர்
திரு. **வசந்த்**



தலை சிறந்த பத்திரிகைகளால் பாராட்டு பெற்ற நிறுவனம்

இந்தியாவின் RE-MARRIAGEக்காக தனிப்பட்ட முறையில் செயல்படும் ஒரே நிறுவனம் Sun TV முதல் Star TV வரை கல்கி முதல் Hindu வரை சேவாரத்னா விருதும், பாராட்டுகளும் பெற்ற நிறுவனம்

குறிப்பு: வாழ்க்கையில் பாதிக்கப்பட்ட ஆண்/பெண், நண்பர்கள் (அ) உறவினர்கள் யாராக இருந்தாலும் மறுவாழ்வு ஏற்பட எங்கள் முகவரி கொடுத்து உதவுங்கள். உங்கள் தோஷம் நிவர்த்தியாகும்.

**VASANTHAM MARRIAGE SERVICE** (Regd)

# 20, Balaji Nagar, 2nd Street,
Royapettah, Chennai - 600 014
Phone : 91-44-52148651/28130103
Cell : 9382141999/09840251110
www.remarriagematrimony.com
www.indiaremarriage.com
E-mail : info@remarriagematrimony.com

# ஆஹா... அதி அற்புதம்!




✉ தங்களது நேர்மையாலும், தூய்மையாலும் சொந்தமாகச் செல்வாக்கைச் சம்பாதித்துக்கொண்டால், அரசியல்வாதிகளுக்கு ஏன் தேவைப்படுகிறது எம்.ஜி.ஆரின் செல்வாக்கு?
**மதுரை, என். பாலகிருஷ்ணன்**

✉ கட்டுரையின் முடிவில் 'மிக எச்சரிக்கையாகச் செயல்பட்டுக் காய்களை நகர்த்துகிறார் முதல்வர் ஜெயலலிதா' என்று குறிப்பிட்டிருந்தாலும், 'எம்.ஜி.ஆர் படமும், இரட்டை இலைச் சின்னமும் மட்டுமே வெற்றியைத் தேடித் தராது' என்று வாஸந்தி கூறியிருப்பதுதான் நிதர்சனம்!
**லோயர் அணைக்கட்டு, பி. இராஜேந்திரன்.**

✉ இசைச் சிறப்பிதழின் முத்தாய்ப்பாக 'சங்கீதக்கடல்' எம்.எஸ் ஸின் அதி அற்புத அட்டைப்படம் அமைந்தது எங்கள் பாக்யம். ஆஹா!
**மதுரை - 16, ஆர். லட்சுமி.**

✉ 'தம்பூரா சோமு' சிகரம் தொட்ட சிறுகதை. இசைக்கு ஆதாரமாக அமைந்த தம்பூரா சுருதி பற்றிய கீழ்கண்ட வர்ணனைகள் ஹைலைட் செய்யப்பட வேண்டிய அழகான வைர வரிகள்.
'சங்கீதத்துக்கு ஆதாரம் தம்பூரா சுருதி... அந்த நாலு தந்தியும் ராம - லக்ஷ்மண - பரத சத்ருக்னனாட்டம் சேர்த்து இழைஞ்சுட்டா அதுவே உலகத்துக்கான சங்கீதம் மாதிரி ஒலிக்கும்...'
**மேற்கு மாம்பலம், ஆர். கோபாலன்.**

✉ முழுக்க முழுக்க சங்கீத சங்கதிகளுடன் மலர்ந்த கல்கி கலைவிழா சிறப்பிதழ் மியூசிக் அகாடமிக்குள் நுழைந்து கச்சேரி கேட்ட மாதிரி களை கட்டியது.
**அயன்புரம், த. சத்தியநாராயணன்.**


✉ 'வாழ்க்கையில் இரு பாலாருக்கும் கிடைத்த சுதந்திரம், உணர்வுகளுக்குப் போடப்பட்ட சங்கிலிகளை அறுத்துவிட்டதே' என்ற பிருந்தா ஜெயராமனின் வரிகள் தூள்!
**சென்னை - 89, பத்மாமணி.**

✉ நான் சிறுவயதில் பள்ளிக்கூடம் புறப்படும்போது என் அம்மாவிடம் 'ஓட்டைக் காலணா'வாகக் கேட்டு வாங்கி இடுப்பில் அரைஞாண் கயிறில் மாட்டி சேர்த்து மகிழ்ந்த ஞாபகம் நெஞ்சில் நிழலாடியது.
**உசிலம்பட்டி, கருணையானந்தம்**

✉ 'அடைமழையால் நஷ்டம் அரசுக்கா பொதுமக்களுக்கா?' என்ற கேள்விக்கு 'தராசு'வின் பதிலில் தொலைநோக்குப் பார்வை இருந்தது.
**மதுரை, என். பாலகிருஷ்ணன்.**

✉ 'ம்... நையாண்டியின் உச்சகட்டம் போட்டுத்தாக்கு பரமுதான்'னு நான் பாராட்டிய நேரம் சரியில்லை போலிருக்கு! ஆள் இந்த வாரம் தலைமறைவாயிட்டாரே
**பெங்களூர், யமுனா ரெங்கநாதன்**

## வட்டமேஜை




## என்ன செய்கிறது காவல்துறை?

செய்த தவறையே மீண்டும் செய்வதில் தமிழக அரசு சாதனை படைத்துவிட்டது! மீண்டும் 42 உயிர்கள் பலியாகியுள்ளன. சென்றமுறை இந்தச் சோகம் நடைபெற்றபோது நடந்த அதே நிகழ்வுகள்தான் இந்த முறையும் நடந்துள்ளன. சென்ற தடவை வேறு ஒரு சம்பவத்தில் ஆறு பேர் இறந்து போயிருக்கிறார்கள். அதன் பின்னராவது தமிழக அரசும் காவல் துறையும் பாடம் கற்றிருக்க வேண்டாமா?

இத்தனைக்கும், துயர சம்பவம் நடந்த டிசம்பர் 18க்கு முன்தினம் மாலையிலிருந்தே எம்.ஜி.ஆர் நகரில் இலேசான பதற்றம் நிலவியிருக்கிறது. மறுநாள் கிடைக்கவிருந்த நிவாரணத்தைப் பெற அதிகாலையிலேயே செல்ல வேண்டும் என்கிற பேச்சு பரவி, பெரும்பாலான மக்கள் நள்ளிரவே கியூ வரிசை அமைக்கச் சென்றுவிட்டனர்.

இப்படியொரு சூழ்நிலை எம்.ஜி.ஆர் நகரில் நிலவுகிறது என்பது காவல் துறைக்கு எப்படி தெரியாமல் போயிருக்க முடியும்? சி.ஐ.டி பிரிவும் காவல் நிலையங்களும் எதற்குத்தான் இருக்கின்றன? அதிலும் தற்போது சென்னையில் இரவு நேரங்களில் ரோந்து போலிசார் தவறாமல் வலம் வருவதாக வேறு பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள்! இப்பகுதியில் முன்கூட்டியே காவல் துறையினரைக் கொண்டு நிறுத்தி, கூட்டத்தைத் திரும்பப் போகச் செய்திருக்க வேண்டும்; அல்லது நெறிப்படுத்தியிருக்க வேண்டும்.


அதைச் செய்ய காவல்துறை ஏன் தவறியது என்பது




கல்கி



2006 ஜனவரி 1
பார்த்திப மார்கழி 17
மலர் : 64
இதழ் : 22




புரியாத புதிர்.


நிவாரணம் பெறும் முயற்சியில் இறந்து போனவர்களின் குடும்பங்களுக்கு, மேலும் ஒரு நிவாரணத் தொகை அறிவித்திருக்கிறது அரசு! இறந்தவர்களின் குடும்பங்களுக்குத் தலா ஒரு லட்சம் ரூபாய்.

மாண்ட உயிர்களின் மதிப்பை ரூபாய் கணக்கில் அளவிட முடியாது எனினும் தலைவனையோ தலைவியையோ இழந்த குடும்பத்துக்கு உடனடியாக உதவுவது முறையே. ஆனால், வெள்ள நிவாரணமாக பணத்தையும் பண்டங்களையும் வினியோகிப்பதென்பது மிக அபத்தமான ஏற்பாடு. அதுவும் ரேஷன் கார்டுகள் தொலைந்துவிட்ட நிலையில், நிவாரண டோக்கன் வாங்கிக் கொண்டு யார் வேண்டுமானாலும் நிவாரணம் பெறலாம் என்பது மிக அபத்தம். இதன் விளைவாகத்தான் தராதரமின்றி, வசதி படைத்த பலரும்கூட 'ஓசி'யில் பெற்றுக் கொள்ள, மெய்யான ஏழைகளுடன் சேர்ந்து முண்டியடித்திருக்கிறார்கள். அவர்களை இனம் பிரிக்க முடியாத சூழல்.

தற்காலிக நிவாரணமாக, மக்களைப் பாதுகாப்பான இடத்தில் (நிவாரண முகாம் அல்லது பள்ளி கட்டிடங்கள், திருமண மண்டபங்கள்) குடியேற்றி, அவர்களுக்குச் சமைத்த உணவு வழங்குவதுதான் வழக்கம். மாநகராட்சியும் அரசும் இணைந்து இந்த ஏற்பாடுகளைச் செய்யும். சில தினங்களுக்குப் பின், வெள்ள அபாயம் நீங்கியதும் மக்கள் வீடு திரும்பிவிடுவார்கள்.

ஆனால், ஜெயலலிதா அரசு, பாதிக்கப்பட்டவர்கள், பாதிக்கப்படாதவர்கள் என அனைவருக்கும் நிவாரணமாக பணமும் பண்டமும் வழங்க முற்பட்டதைப் பார்க்க, அது தேர்தல் நோக்கில், வோட்டுப் பிடிக்கச் செய்யப்படும் காரியமாகவே தோன்றுகிறது.

உள்நோக்குடனான இந்தக் காரியத்தைச் சீராகச் செய்யாமல், விபத்துகளுக்கு மீண்டும் மீண்டும் வழி வகுத்துவிட்டு, பழியை எதிர்கட்சிகள் மீது போடுவதென்பது




வடிகட்டிய அரசியல்! வதந்தியைப் பரப்பியதாகக் குற்றம் சாட்டப்பெற்று கைதாகியுள்ள தி.மு.க கவுன்சிலர் தனசேகரன், உண்மையிலேயே அச்செயலில் ஈடுபட்டார் என்று விவாதத்துக்காக ஏற்றாலும்கூட, அரசு இவ்விஷயத்தில் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முடியாது. எதிர்கட்சியினர் உள்நோக்குடன் வதந்தி பரப்பக்கூடும் என்று எதிர்பார்த்து, இன்னும் அதிக கவனமுடன் அல்லவா பந்தோபஸ்து செய்திருக்க வேண்டும்?

சம்பவத்தின் பின் வழக்கம்போல் விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டுள்ளது.

ஆனால், விசாரணையும் இன்றி, கமிஷனும் இன்றி நாம் அறியக்கூடிய உண்மைகள் சில உள்ளன:

மக்களுக்கு கோடிக்கணக்கான ரூபாய்களை தற்காலிக நிவாரணமாக அளிப்பதன் மூலம் பணப்புழக்கம் திடீரென்று அதிகரித்து, விலைவாசி உயரும்; மாநிலத்தின் பொருளாதாரம் மேலும் பாதிக்கப்படும்.

கோடிக்கணக்கான தொகையை வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளிலும் நீர் நிர்வாகத் திட்டங்களிலும் முதலீடு செய்தால் மக்களுக்கு வேலை வாய்ப்பும் ஊதியமும் கிடைக்கும்.

லஞ்சம் பெற்று நீர் நிலைகள் - ஆற்றங்கரைகளில் குடியிருப்புகளும் கட்டிடங்களும் எழ அனுமதித்துவிட்டு, திடீரென்று அவற்றை இடித்துத் தள்ளி மக்களைத் தெருவில் திண்டாட வைப்பது குரூரம். மாற்று ஏற்பாடுகள் ஏதும் செய்யாத தமிழக அரசை, பாதிக்கப்பட்டோர் எளிதில் மன்னிக்க மாட்டார்கள்.

நடந்த இரு சம்பவங்களுக்கும் பொறுப்பேற்று ஜெயலலிதா ராஜினாமா செய்ய வேண்டும் என்ற எதிர்கட்சிகளின் கோரிக்கையும் அரசியலே என்று தோன்றலாம். ஆனால், காவல்துறை முதல்வர் பொறுப்பில்தான் இருக்கிறது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ○

# நையாண்டி புதுசு!



மேடை நாடகம் என்ற ஊடகமே மெள்ள மறைந்து வரும் நிலையில், நாடகப் பிரியர்களுக்கு மகிழ்ச்சி தரும் விஷயம் ஒன்று அண்மையில் சென்னையில் நடந்துள்ளது.

சோவின் பிரபல மேடை நாடகங்களை டி.வி.டி / சி.டிகளாக ஸ்வாதி சாஃப்ட் சொல்யூஷன்ஸ் நிறுவனம் சிசன் ஸ்பெஷலாக வெளியிட்டுள்ளது.

'சம்பவாமி யுகே.. யுகே...' 'ஜட்ஜ்மெண்ட் ரிஸர்வ்ட்', 'நேர்மை உறங்கும் நேரம்', 'சாத்திரம் சொளனதில்லை' நான்கு மேடை நாடகங்களையும் டிஜிட்டல் துல்லியமாகத் தந்திருக்கிறார்கள்.

"ஏற்கெனவே, பரதம், யோகா போன்ற பழைமை வாய்ந்த இந்தியக் கலைகளை டிவிடி/சிடிகளில் பதித்து, உலகெங்கும் பிரபலப்படுத்தி வருகிறோம். மேடை நாடகங்களை அடுத்த தலைமுறைக்கும் பாதுகாத்துக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியதும், எங்கள் எல்லாருடைய சாய்ஸும் சோவின் நையாண்டி நாடகங்களாகத்தான் இருந்தன.

சோ சாரைச் சந்தித்து விஷயத்தைச் சொன்னதும், "ஓ! எடுத்துச் செய்யுங்களேன்!" என்று உடனே சம்மதம் தெரிவித்துவிட்டார்.

நாடகங்களின் பீட்டா டேப்புகளை வாங்கி, நேர்த்தியாக எடிட் செய்து டிஜிட்டல் முறையில் பதிவு செய்து காட்டினோம். "நல்லா வந்திருக்கு" என்று பாராட்டினார்.

"எங்களுக்கு ஒரு ஆச்சரியம் என்னவென்றால், கிட்டத்தட்ட முப்பது வருஷங்களுக்கு முன் எழுதப்பட்ட நாடகங்கள் அவை. ஆனால் இன்றைய அரசியல் சூழ்நிலைக்கும் சமுதாய நிகழ்வுகளுக்கும் கூட மிகப் பொருத்தமாக இருப்பதுதான். 'சோ'வுக்கே உரிய நக்கலும், நையாண்டியும் புதிய நாடகங்களைப் போலவே ரசிக்க வைக்கின்றன" என்கிறார் 'ஸ்வாதி'யின் தலைமை நிர்வாக அதிகாரி சுதாகர்.

சில வருடங்களுக்கு முன் மௌலியின் 'ஃபிளைட் 172' மேடை நாடகத்தை டி.வி.டி / வி.சி.டியாகக் கொண்டு வந்தபோது கிடைத்த மிகப் பெரிய வரவேற்பில் அகமகிழ்ந்து இந்தப் புதிய முயற்சியை மேற்கொண்டிருக்கும் இந்நிறுவனம், பிரபல பழைய தமிழ் நாடகங்களை எல்லாம் தேடி புதுசாக்கப் போகிறதாம்!


**- மினி**

• வெளியீட்டு விழாவில்...



# அவரா இவர்?

அழகிய தமிழ்மகன்



வந்தார். வாசலில் நின்று, 'வட்டாட்சியர் அலுவலகம்' என்ற அரைவட்ட பெயர்ப்பலகையைப் பார்த்த மாத்திரத்திலேயே எரிச்சல் பீறிட்டது.

வேண்டா வெறுப்பாக உள்ளே நுழைந்தார்.

பள்ளிப் பிள்ளைகளுக்கு சாதிச்சான்று வழங்கும் சமயமானதால் பெற்றோரும் பிள்ளைகளுமாய் அலுவலகத்தின் தரை தெரியாதபடி கூட்டம்.

அந்தக் கூட்டத்தில் அவருக்கு வேண்டியவர்களும் உறவினர்களும்கூட இருக்கத்தான் செய்தனர். என்றாலும், வேடனின் கண்கள் குருவியின் தலையை மட்டுமே குறி வைப்பதுபோல் தனக்குக் காரியம் ஆக வேண்டிய சீட் மீது பார்வையைப் பாய்ச்சினார். சீட் தான் இருந்தது. ஆளைக் காணோம். ஆத்திரம் மேவிட, "எங்க சார் இவரு?" என்றார் பக்கத்து சீட் காரரிடம்.

போனவர் சொல்லிவிட்டுப் போயிருப்பார் போலும்.

"வாங்க சார்... உங்களுக்கு சர்டிஃபிகேட் எழுதி தாசில்தார் கையெழுத்துக்கும் வைச்சிட்டார். நீங்க வந்ததுமே வாங்கிட்டுப் போயிருக்கலாம். திடீர்னு இன்னிக்குக் காலையிலே பக்கத்துக் கிராமத்தில் புதையல் எடுத்ததா தகவல் வந்தது. தாசில்தாரோட போயிருக்கார்... இப்ப வந்துடுவார்..."

"நான் அந்த புங்கமரத்துக்கிட்ட இருக்கேன்" - சற்றே அடர்த்தியான வார்த்தைகளால் வெறுப்பைக் காட்டிவிட்டு வெளியே வந்தார்.

புங்கமரத்தடி சிமெண்ட் பெஞ்சில் இவரைவிட பத்துவயது பெரியவர், உட்கார்ந்திருந்தார்.

"விடியாது... இந்த ஆபீசுக்கும் விடியாது... ஆளுங்களுக்கும் விடியாது"

என்ற புலம்பலுடன் பெஞ்சின் மற்றொரு முனையைத் தூசி தட்டியவரை பெரியவர் தடவலாகக் கேட்டார்.

"என்ன காரியம் ஆகணும் உங்களுக்கு?"

"பாருங்க! துபாயில் இருக்கிற அண்ணன் பையனுக்கு பிறந்த தேதி மாத்தணும். அதுக்கு கோர்ட்டில் கேஸ் போட்டு ஜட்ஜ்மெண்டை வாங்கிக்கிட்டு வந்து கொடுத்துட்டு அலையறேன் பாருங்க. என்ன ஆபிசு? என்ன நிர்வாகம்... சே!"

"அது அப்படித்தான்... உட்காருங்க! கோவப்பட்டா நம்ம உடம்புக்குத்தான் கேடு"

வேகம் குறையாமலும் வியர்வை அடங்காமலும் உட்கார்ந்தார்.

"உங்கள போன மாசம் கூட இந்தப் பக்கம் பார்த்த ஞாபகமா இருக்கே?"

"ஆமா! எங்க சிங்கப்பூர் சித்தப்பா ஊருக்கு வந்து ஓவர்ஸ்டே ஆகிப்போச்சு. அதுக்கு ஒரு அலைச்சல்... நடையா நடந்தேன். நானும் இந்த ஆபிஸ் பக்கமே வரக் கூடாதுன்னுதான் நினைக்கிறேன். ஆனா தொட்ட தொன்னூறுக்கும் இங்கதான் வந்து நிற்கும்படி ஆகுது"

அவர் சொல்லி முடித்த வினாடியில் ஓட்டமாய் வந்து ஒரு கடித உறையைக் கொடுத்தான் ஒரு சிறுவன். "அண்ணனுக்கு லெட்டர் வந்திருக்குப்பா" என்று.

அரசு முத்திரை பொறித்த அந்தக் கடித உறையை ஆவலுடன் பிரித்தவருக்கு அடக்க முடியாத ஆனந்தம்.

"என் பையனுக்கு வேலை கிடைச்சுருக்கு... அதுவும் ரெவின்யூ டிபார்ட்மெண்டிலே" மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தார்.

"ரெவின்யூ டிபார்ட்மெண்ட்டுன்னா?" கடிதத்தைக் கொண்டு வந்த பையன் கேட்க -

"என்னடா இப்படிக் கேட்கிறே! தாலுக்கா ஆபிசிலடா, இந்த தாலுக்கா ஆபிசில்!" - கூத்தாடாத குறை.

"கொஞ்ச முந்தி இங்கே உட்கார்ந்து பேசிக்கிட்டிருந்தாரே அவர் தானா இவரு?" சிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந்திருந்த பெரியவர் குத்தலாகக் கேட்டு குறும்பாய்ச் சிரித்தார்.

# புள்ளி விவரப் புலி!

சென்னையில் கடந்த ஆண்டு முழுவதும் பெய்த மழையின் அளவு 1298 மில்லி மீட்டர். இந்த ஆண்டு ஜனவரி 1 முதல் நவம்பர் 6 வரை பெய்த மழையின் அளவு மட்டுமே 1434 மில்லி மீட்டர். சென்னையில் சுமார் 40 விழுக்காடு வீடுகளில் தான் முறையான மழைநீர் சேகரிப்பு வசதிகள் செய்யப் பட்டிருக்கின்றன.



பலராலும் பாராட்டப் பெற்ற - நீண்ட நாட்களாக பதிப்பில் இல்லாத - பலரும் எதிர்பார்க்கும்

வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியாரின் உரையுடன்

# கம்ப ராமாயணம்

முழுவதும் ஏழு தொகுதிகளாக

உயர்ந்த தரமுள்ள பதிப்பாக வெளிவருகிறது.

- **ஓர் அரிய இலக்கியப் பொக்கிஷம்**
- **வாசகர்களின் நெடுநாளைய எதிர்பார்ப்பு**
- **அழகான வடிவமைப்பு; அருமையான அச்சு**
- **உயர்தர மேப்லித்தோ பேப்பரில் நல்ல, நேர்த்தியான கெட்டி அட்டை பைண்டிங்**
- **ஒவ்வொரு தொகுதியும் டெம்மி அளவில் சுமார் 900 பக்கங்கள் கொண்டது**

**ஏழு தொகுதிகளும் சேர்த்து விலை ரூ. 2,500/-**

**முன் வெளியீட்டு விலை ரூ. 2,000/- மட்டும்**

**M.O.**அல்லது **D.D., 'UMA PATHIPPAGAM, CHENNAI-1'**
என்ற பெயருக்கு அனுப்பவும்.

புத்தகங்களை அனுப்ப பதிவுத் தபால் / கூரியர் கட்டணம் சுமார் ரூ. 100/- ஆகும். முன் பதிவு செய்வோருக்கு மட்டும் புத்தகம் அனுப்பும் செலவைப் (உள் நாட்டிற்கு மட்டும்) பதிப்பகமே ஏற்றுக்கொள்கிறது. தாங்கள் அனுப்ப வேண்டிய தொகை ரூ. 2000/- மட்டுமே.

**முன்பதிவு செய்யக் கடைசி நாள் 30-1-2006**

**M.O.** அல்லது **D.D.** அனுப்பியவர்களுக்குப் பணம் பெற்ற வரிசைப்படி 30-3-2006 முதல் நூல்கள் அனுப்பப்படும்.

தொடர்புகொள்க :

## உமா பதிப்பகம்

தரமான புத்தகங்கள் வெளியிடுவோர்

18/171, பவளக்காரத் தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

✆ : 2521 5363, 2525 0092

# என்னுயிர்த் தோழி!

**நாராயணி அம்மாள்**

"இவா யார் தெரியுமோ? சின்னாணி மாமி! என் ஆம்படையாளோட அத்யந்த சிநேகிதி!" என்று என்னை அறிமுகப்படுத்தி வைப்பதில் சதாசிவம் மாமாவுக்கு அவ்வளவு குஷி! அதுவும் அத்யந்தங்கிற வார்த்தைக்கு ஏகப்பட்ட அழுத்தம் கொடுத்து, நீட்டி, முழக்கிச் சொல்லும்போது குஞ்சாவின் முகத்தைப் பார்க்கணுமே! வெட்கமும் பெருமையும் மினுமினுக்கும்.

அது 1940வது வருஷம். நாங்க



* உயிர்த்தோழிகள்...

கல்கத்தாவுல இருந்தோம். எங்க ஆத்துக்காரர் மகாதேவ அய்யருக்கு அங்கே பத்திரிகை ஆசிரியராக உத்தியோகம். அப்போதான் 'சாவித்திரி' பட ஷூட்டிங்குக்காக எம்.எஸ், அவ ஆத்துக்காரர் இரண்டு பேரும் அஞ்சு வயசுக் குழந்தை ராதாவோட வந்திருந்தா. அவா தங்கியிருந்த வீட்டுக்குக் கீழே என் சிநேகிதி மீனாட்சி இருந்தா. ஒருநாள் அவளைப் பார்க்கப் போயிருந்தேன். அப்போ, ஷூட்டிங் முடிஞ்சு, எம்.எஸ். வந்தா. என்னோட புடைவைக்கட்டைப் பார்த்ததும், "நீங்க தமிழா?"னு கேட்டுட்டு, "வாங்களேன். கொஞ்ச நேரம் பேசிண்டு இருக்கலாம்"னு கையைப் பிடிச்சுண்டா. அந்தக் கையின் மெத்தென்ற இளம் கதகதப்பு இன்னமும் எனக்கு நினைவிருக்கு. அப்ப ஆரம்பிச்ச நட்பு, கிட்டத்தட்ட அறுபத்தைஞ்சு வருஷங்கள் தொடர்ந்தது.

அப்புறம் கொஞ்ச நாள் கழிச்சு, "நாங்க ஷூட்டிங்குல இருந்து திரும்பி வர்றவரைக்கும் கொழந்த உங்க ஆத்துல இருக்கட்டுமா?"னு கேட்டா "தாராளமா இருக்கட்டும்"னேன். என்னோட இரண்டு குழந்தைகளுடன் ராதா விளையாடிண்டு இருப்பா. சில நாட்களில் ராத்திரி ஷூட்டிங் முடிஞ்சு வரும்போது ராதா தூங்கிண்டிருப்பா. "குழந்தையை எதுக்கு எழுப்பணும்? அவளை எப்படியும் நாளைக்குக் காலை இங்கேதானே கொண்டு வந்துவிடுவேன். இங்கேயே தூங்கட்டுமே?"னு சொல்வேன். ஆனா குஞ்சா ஒத்துக்கவே மாட்டா. ஒருமுறை ராதா அசந்து தூங்குவதைப் பார்த்த சதா



* நாராயணி அம்மாள் - எம்.எஸ் - ஜானகி சிவராமகிருஷ்ணன் (பம்பாய் சிநேகிதிகள்)

சிவம் மாமா, அரை மனசோட போய் விட்டார். ஆனால் போன இரண்டாவது நிமிஷமே வந்து நின்னார். குழந்தையைத் தூக்கிண்டு வரச் சொல்லி மாமாவை வற்புறுத்தி அனுப்பி வைச்சுட்டா குஞ்சா. அவள் பியூட்டிஃபுல் ஆர்டிஸ்ட் மட்டுமல்ல, ட்யூட்டிஃபுல் மதரும் கூட.

அவ என்னைவிட மூணு வயசு பெரியவ. என்னைக் கடைசிவரை 'வாங்கோ, போங்கோ'னு தான் கூப்பிட்டிண்டிருந்தா. ரோம், லண்டன், அமெரிக்கானு உலகத்துல எந்தப் பாகத்துல இருந்தாலும் வாரத்துக்கு எப்படியும் மூணு லெட்டர் போட்டுடுவா. 'என் பிரியமுள்ள சின்னாணி மாமிக்கு'னு ஆரம்பிச்சு, என்னவோ நேரிலேயே பேசறது மாதிரி அவ்வளவு பிரியமா எழுதுவா. எல்லா கடிதத்திலயும் 'உங்களைப் பார்க்கப் போறேன்னு நினைச்சாலே சந்தோஷமா இருக்கு'. 'உங்ககூட இருந்தது மாதிரியே இல்ல'. 'ரயிலடியில் பிரியாவிடை கொடுத்தப்போ ரொம்ப கஷ்டமா இருந்தது. உங்களுக்கும் அப்படியே இருந்திருக்கும்' 'நான் உங்களை மறக்கவே இல்லை'னு அன்பைக் கொட்டியிருப்பாள். அந்தக் கடுதாசிகளை எல்லாம் பத்திரமா லாமினேட் பண்ணி வெச்சிருக்கேன்.

அவள் எவ்ளோ பெரிய ஆர்டிஸ்ட். நான் ரொம்ப ரொம்ப சாதாரணமானவ. என்கிட்டே அவ பிரியம் வைச்சிருந்தான்னா, நான் எவ்வளவு புண்ணியம் பண்ணியிருக்கணும்? அதுவும் அவ்வளவு எமோஷனலான



எங்கள் எம்.எஸ்.

அன்பு!

கல்கத்தாவுக்கு அப்புறம் நாங்க பாம்பேல இருந்தோம். அப்போ, எப்படியும் மாசம் இரண்டு தடவையாவது கச்சேரி, கல்யாணம்னு பாம்பே வந்துடுவா. சதாசிவம் மாமா கிண்டல் பண்ணுவாராம்.

"ஒனக்கு சின்னாணியைப் பார்க்கணும்னு சொல்லேன் குஞ்சம்மா. அத விட்டுட்டு பாம்பேல ஏதாவது கச்சேரி இருக்கானு ஏன் சும்மா நச்சரிக்கறே?"னு. ரயில்வண்டி மாதுங்காவைக் கடந்தால் "நீங்கள் உங்காத்து பால்கனியில் நின்னுண்டு இருப்பேளோனு நான் கையை அசைச்சேன். நீங்க அந்த நேரத்துல அங்கே இருந்தேளா?"னு சின்னக் குழந்தையாட்டம் கேட்பா.

பாம்பேல, இருந்தப்ப ஒரு விபத்துல சிக்கி எனக்கு இடுப்பு எலும்பு நொறுங்கிடுத்து. ஆறு மாசம் படுத்த படுக்கையா இருந்தேன். நான் ஆஸ்பத்திரியில இருந்தப்போ, குறைஞ்சது பத்து தடவையாவது வந்திருப்பா. என் கூடவே என் கட்டில் பக்கத்துலேயே இருந்துட்டு, பிரிய மனசே இல்லாம போவா. 'கடவுளே.. இதென்ன பந்தம்!'னு கண் கலங்குவேன். அதுவும் அவளுக்குத் தெரியாமல்.

அந்தச் சமயத்துலதான் குஞ்சாவுக்கு 'சங்கீத கலாநிதி' விருது கொடுக்கப்பட இருந்தது. என்னைப் பார்க்க வந்த குஞ்சா, டாக்டர் பக்தாகிட்டே போய், "நான் அவார்டு வாங்கறச்சே சின்னாணி மாமி இருந்தே ஆகணும். அவளை வீல் சேர் வச்சு, அலுங்காம, குலுங்காம ஃபிளைட்ல அழைச்சுண்டு போய் பத்திரமா கொண்டு வந்து விடுறேன்'னு ரொம்ப நேரம் விவாதம் பண்ணினாள். ஆனால் டாக்டரோ முடியவே முடியாதுன்னுட்டார்.

குஞ்சாவுக்கு முகமே வாடிப் போச்சு. ஆஸ்பத்திரியை விட்டுக் கிளம்பும்போது, "குஞ்சம்மா... சின்னாணி வரலைனு நன்னா தீர்மானம் பண்ணிண்டு. அப்புறம் 'சின்னாணி மாமி இல்லாம விருது வாங்க மாட்டேனு' மேடையில சொன்னியோ என் மானமே போயிடும்"னு சதாசிவம் மாமா தமாஷா பேசி, குஞ்சாவை சகஜமாக்க முயற்சி செய்தார்.

ஒரு முறை தியாகையர் உத்சவத்துக்கு குஞ்சாவுடன் திருவையாறு போற வாய்ப்புக் கிடைச்சுது. சதாசிவம் மாமா வெளியே கிளம்பினால் குறைஞ்சது பத்துப் பேரோட கும்பலாதான் கிளம்புவார். அதனால் யார் யாருக்கு எப்படி ரிஸர்வேஷன்னு சரியா தெரியலை.

"ஏன் ஆத்மா? எனக்கு எதுல ரிஸர்வேஷன் பண்ணியிருக்க?"ன்னு கேட்டார்.

"உங்களுக்கும் அம்மாவுக்கும் தனியா ஏ.ஸி. கூப்பே ரிஸர்வ் பண்ணி யிருக்கு"னு சொன்னார் ஆத்மா.

"அடே! எங்களுக்கு எதுக்குடா

பாடகி சித்ரா வருடந்தோறும் ஜனவரி முதல் தேதி அன்று தனது அருமை மகள் நந்தாவுடன் வேளாங்கண்ணி சென்று வருகிறார்.



ஏஸி கூபே? வாய் மூடாம, தொடர் கதையா பேசிண்டே வரப் போறவாளை ஏத்தி விடு''னு சொல்லி எங்க இரண்டு பேரை அனுப்பி வைச்சுட்டார்.

எங்க மனுஷாள்ளாம் கேட்பா... 'அப்படி என்னதான் பேசிக்குவீங்க?'னு... நான் என் வீட்டைப் பத்தி, குழந்தைகளைப் பத்திச் சொல்வேன். அவ, அவ வீட்டைப் பத்தி, குடும்பத்தைப் பத்திப் பேசுவா. சங்கீதம், சமையல்னு பேசுவோம். மத்தவாளைப் பத்தி பேசறதே கிடையாது. அப்படி அவளுக்குப் பேசவும் தெரியாது. அவளுக்குத் தெரிஞ்சது எல்லாம் பிரியமான, ஹிதமான பேச்சு மட்டுமே!



* நாராயணி அம்மாளுடைய பேத்தியின் திருமண வரவேற்பில்... எம்.எஸ்.

தமிழிசை சங்கத்தில் குஞ்சம்மா முதன்முதலா பாடறா. அதுக்காக முசிறி சுப்ரமணிய ஐயரிடம் தமிழ்ப் பாடல்கள் சிலவற்றைக் கற்றுக் கொண்டிருந்தாள். ஒரு சமயம், போன் செய்த போது, முசிறி கற்றுத் தந்து கொண்டிருந்தார். உதவியாளர் விசாலம்தான் போனை எடுத்தாள். தொந்தரவு செய்ய வேணாம்னு சொன்னேன். ஆனால் விசாலம், அவசரப்பட்டுச் சொல்லி விட்டாள்.

''குஞ்சம்மா, இன்னிக்குப் பாடம் அவ்வளவுதான். சின்னாணி போன் பண்ணிட்டாளோன்னோ. இனி உன்னைப் பிடிச்சு வைக்க முடியாது''னு முசிறி கிளம்பிட்டார்!

''இல்ல மாமா. நீங்க உட்காருங்க''னு குஞ்சா எவ்வளவோ கேட்டுண்டும் முசிறியார் கிளம்பியே போயிட்டாராம்.

''உங்களோட விஷயம் முசிறி வரைக்கும் போயாச்சா? பேஷ்... பேஷ்''னு சதாசிவம் மாமா செஞ்ச கிண்டல் ஆயுசுக்கும் மறக்காது.

முன்னெல்லாம் எங்காத்துக்கு அடிக்கடி வருவா. அவளுக்குப் பிடிக்கும்னு ஒக்காரை பண்ணி வைப்பேன். மாமா போனப்புறம் குஞ்சா, வீட்டை விட்டு வெளியே வரவே இல்ல. அவ வர்றதை நிறுத்தினதும்தான் நான் அடிக்கடி போக ஆரம்பிச்சேன். இறுதி நாட்கள்ல, ரொம்ப கலங்கலாதான் அவளுக்கு நினைவு இருந்தது. கடைசியா நான் அவளைப் பார்க்கப் போனப்போ, அவளோட உறவுக்காரர்கள் இருந்தா. பொண்ணு விஜயா ராஜேந்திரன், ''அம்மா.. இவா யாரு தெரியறதா?''னு ஒவ்வொருத்தரையா எதிர்ல நிக்க வைச்சு கேட்டா.

களைப்பாய் இருந்ததால எதுக்குமே அவள் சரியாக பதில் சொல்லலை. கடைசியா என்னைக் காட்டிக் கேட்டதும், ''இவளைத் தெரியாதா? சின்னாணி மாமி. சின்னாணியைத் தவிர வேறே யாரையும் எனக்குத் தெரியாது''னு என் கையைப் பிடிச்சண்டா. நான் அப்படியே உருகிப் போயிட்டேன்.

அந்த மெலிந்த கையின் இளம் கதகதப்பு, அதில் தெரிந்த பிரியம்... இனம் புரியாத பாசம்... அது என் அத்யந்த சிநேகிதிக்கே உரியது.

"ராமா ஷாமா பாமா....' சமீபத்தில் வெளியான கன்னட திரைப்படம். அதிரடி ஹிட்! தமிழ் சதி லீலாவதியின் ரீமேக்! கமல்ஹாசன், ஊர்வசி, ஸ்ருதி... போன்ற பல நட்சத்திரங்களை இயக்கி வெற்றி இயக்குநர்களின் பட்டியலில் புதிதாக இடம் பிடித்திருக்கிறார் அட, நம்ம ரமேஷ் அர்விந்த்!

கமலை இயக்கியது பற்றி கேட்டால், கமல், கமல்ஜி... என உருகுகிறார்.

"என்னை இயக்குநராக்கியதே கமல்தான். 'முதல்படம் கமர்ஷியல் ஹிட்டா இருக்கணும். சதி லீலாவதியை எடு' என்று சொன்னார். பிறகு அவர் எனக்குக் கொடுத்த ஒத்துழைப்பு இருக்கிறதே... மறக்கவே மாட்டேன். தமிழில் கொங்குத் தமிழ் பேசி நடித்த கமல் கன்னடத்தில் தார்வாடா பாஷையில் வெளுத்து வாங்கியிருக்கிறார். இதற்காக அவர் நிறைய டிராமா பார்த்தார். ஹூப்ளியிலிருந்து நாடகக்காரர் ஒருவரை அழைத்து செட்டில் எந்நேரமும் இருக்கும்படி செய்தோம். கன்னட சினிமாவுக்குக் கிட்டத்தட்ட 20 வருடங்களுக்குப் பிறகு கமல் திரும்பியிருக்கிறார். அதுவும் பிரஸ் கிளப்பில் கமலுக்கு ஒரு வரவேற்பு கிடைச்சது பாருங்க, தரம்சிங், மன்மோகன்சிங்குக்குகூட கிடைக்காத ஒன்று... அவர் ஒரு கலை மேதை... நா படிச்சது, தெரிந்துகொண்டது எல்லாமே ராஜ்கமல் என்கிற இன்ஸ்டிடியூட்லதான்..."

ராமா ஷாமா பாமா- இந்த காமெடி தர்பார் கன்னட மக்களுக்கு புதுசு. அடிதடி, அரிவாள் அல்லது தாய், தாலி சென்டிமெண்டையே பார்த்து அலுத்துப் போனவர்களை, மூன்று மணி நேரம் வயிறு நோக சிரிக்க வைக்கும் சினிமாவைப் பார்க்க வைத்து ஒரு புது டிரெண்டை உருவாக்கியிருக்கிறார் ரமேஷ்.

"முதலில் பாலுமகேந்திரா ஸாரிடம் ஆசி வாங்கினேன். பிறகு கிரேஸி

# கமலின் புதிய சதி!

மோகன் ஸார் மனதார வாழ்த்தினார். ஊர்வசி, ஸ்ருதி இவங்கல்லாம் பின்னியிருக்காங்க. கதை அதேதான். ஆனால் ட்ரீட்மெண்ட் புதுசு. ஹீரா ரோலில் டெய்ஸி. நல்ல ப்ரேக் டெய்ஸிக்கு!

"இதுவரை நான் என் வாழ்க்கையில் இப்படிச் சிரிச்சதேயில்லை. ஒவ்வொரு தம்பதியும் கண்டிப்பா பார்க்கணும்" என சான்றிதழ் கொடுத்தாராம் ஞானபீட விருது பெற்ற கன்னட எழுத்தாளர் டாக்டர் யு.ஆர். அனந்தமூர்த்தி.

பல திரையுலக விருதுகள் பெற்றிருக்கும் ரமேஷ், திரைக்கதை எழுதுவதில் மன்னன்! இவர் எழுதிய 'ஹூமழே' என்ற படத்துக்குச் சிறந்த கன்னடப்பட விருது கிடைத்துள்ளது. சமீபத்தில் வெளியாகியிருக்கும் 'அம்ருத தாரே' சினிமாவின் கதையும் இவர் எழுதியதுதானாம்.

சரி... தமிழ் சினிமா இயக்குவாரா? "ஐடியா இருக்குங்க. கைவசம் ஏகப்பட்ட ஸ்கிரிப்ட். கமலை வைத்தே கன்னடத்தில் 'கேஜி' என்றொரு க்ரைம் சப்ஜெக்ட் பண்ண இருக்கேன். தமிழில் கண்டிப்பா இயக்குவேன். ஆனா தற்சமயம் 'கௌன் பனேகா க்ரோர்பதி' ரேஞ்சில் ஒரு ஷோ நடத்தலாம்னு திட்டம் வச்சிருக்கேன். இல்லைன்னா ஒரு டாக் ஷோ... எல்லாம் தமிழ் சேனல்களுக்கு தான். விரைவில் பார்க்கலாம்...' சதி பொதிந்த புன்னகை செய்தார்!

- லதா சேகர்


"பிரஸ் கிளப்பில்
கமலுக்கு
ஒரு வரவேற்பு
கிடைச்சது
பாருங்க..."

# உலகம் இவ்வளவுதான்!

அமெரிக்காவிடம் நல்ல பெயர் வாங்கும் எண்ணத்தில் பெர்வேஸ் முஷாரஃப் ஒரு அதிரடி உத்தரவைப் பிறப்பித்துள்ளார். அநேகமாக அடுத்த வாரமோ அல்லது அதற்கு அடுத்த வாரமோ புஷ், முஷாரஃப்பை அழைத்து உச்சி முகர்வார் என்று எதிர்பார்க்கலாம்.

முஷாரஃப் போட்ட உத்தரவு இதுதான். 'பாகிஸ்தானிலுள்ள மதரசாக்கள், அதாவது இஸ்லாமியப் பள்ளிகள் இனி மதவாதக் கருத்துக்களையும் தீவிரவாதத்தையும் தூண்டும் வகையில் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கக்கூடாது'. இந்த உத்தரவு பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தும் உண்மை என்ன தெரியுமா? மதரசாக்கள் இத்தனை காலமும் தங்களது மாணவர்களுக்கு துப்பாக்கி பிடிப்பது பற்றியும், வெடிகுண்டு வீசுவது பற்றியும், கட்டடங்களைத் தகர்ப்பது குறித்தும் தான் டைம்டேபிள் போட்டு வகுப்புகள் எடுத்து வந்திருக்கின்றன.

முஷாரஃப் சொல்வதற்கு முன்பே அமெரிக்கா மதரசாக்களை இப்படித்தான் பார்த்து வந்தது. அதிலும் 9/11க்குப் பிறகு 'மதரசா' எனும் பெயரைக் கேட்டாலே அமெரிக்காவுக்குப் பற்றிக்கொண்டு வரும். யாராவது தப்பித் தவறி கொஞ்சூண்டு தாடி வளர்த்தால்கூட அவர் முஸ்லீம் தீவிரவாதியாக இருக்குமோ என்று கண்களைச் சுருக்கிப் பார்ப்பது அமெரிக்காவின் வழக்கம். இந்நிலையில் இப்படியொரு அரைகுறை உத்தரவு வேறு. கேட்க வேண்டுமா?

அது சரி உண்மையில் மதரசாக்களின் ஆசிரியர்கள் என்ன சொல்லிக் கொடுக்கிறார்கள்? இதற்கு விடை காண இண்டர்நேஷனல் ட்ரிப்யூன் பத்திரிகையிலிருந்து ஜோனாத்தன் பவர் என்பவர் லாகூருக்குச் சென்றிருந்தார்.



முதலில் அவர் தேர்ந்தெடுத்த மதரசாவின் பெயர் ஜமீரா அஷ்னாஃபியா, மொத்தம் 1200 சிறுவர்கள் படிக்கிறார்கள். பத்து வயது பூர்த்தியானவுடன் இங்கு சேரலாம். இரண்டு வருடப் படிப்பு. பெரும்பாலும் குரான். மனப்பாடச் செய்யுள்போல கண்களை மூடி உதடுகளை உருட்டி



உருப் போடுகிறார்கள். உரு முடிந்தவுடன் வெளியேறி வேறொரு அரசாங்க பள்ளிக்குச் செல்வார்கள். மீண்டும் குரான். மீண்டும் மனப்பாடச் செய்யுள். மீண்டும் உரு. செய்யுளின் எண்ணிக்கை மட்டும் அதிகமாகயிருக்கும். இதுவும் முடிந்தபின், 16 அல்லது 18 வயதில் இஸ்லாமிய மதம் குறித்து ஆழமாக அகலமாக வாசிப்பார்கள். இதைக் கல்லூரி - படிப்புக்கு இணையாகச் சொல்லலாம். மேலும் -

புஷ் : 'அதெல்லாம் சரி, க்ளாஸ்ரூம்ல பசங்க என்ன பண்றாங்க?'

விடை - 'ஓடிப்பிடித்து விளையாடுகிறார்கள். பாடம்

நடத்தும்பொழுது தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு கிசுகிசுக்கிறார்கள். எதையாவது சொல்லி சத்தம் போட்டுச் சிரிக்கிறார்கள். அடம் பிடிக்கிறார்கள். குறும்பு செய்கிறார்கள். கரும்பலகை இருக் கிறது. சாக்பீஸ் இருக்கிறது. பெரிய பெரிய



# பள்ளிகளில் துப்பாக்கிப் பயிற்சி!

பலகைகளில் சில காகிதங்களைக் குண் டூசி போட்டு குத்தி வைத்திருக்கிறார்கள். பெரும்பாலும் உருது பொன்மொழிகள். மேலும்...'

புஷ்: 'ஆஹா பார்த்தீங்களா, உருதுல ஏதோ ரகசியமா எழுதி வைச்சிருக்காங்க. நான்தான் அப்பவே சொன்னேனே'

மதரசா ஆசிரியர்: 'யோவ், அது உல கப் பொன்மொழிகள். முடிஞ்சா நீயே படிச்சுக்கோ, சாம்பிளுக்கு ஒண்ணு சொல் றேன். சிரிப்பதுகூட ஒரு வகையில் உப காரம் செய்வதுபோல்தான். நிறையச் சிரிக்கவும்.

புஷ்: 'ஹிஹி...ஹிஹி...'

மதரசா ஆசிரியர்களிடம் பேச்சு கொடுத்திருக்கிறார் ஜோனாத்தன். சந்தேகமேயில்லை. எந்த மாணவனும் வன்முறையில் ஈடுபட்டதில்லை. "மாண வர்களிடம் இதமாகவே நடந்து கொள் கிறோம். கடுமையாக நடந்துகொள்ள எங்களுக்கு அனுமதியில்லை."


இதுதான் பெரும்பான்மையான மதரசாக்களின் நிலைமை. புஷ் முஷாரஃப் அலறுவதைப் போன்ற குழுக் களும் உள்ளன. ஹகீனா போல. வில் லியம் டால்ரிம்பிள் தி நியூயார்க் ரிவ் யூவில் ஹகீனாவைப் பற்றி எழுதியுள்ளார். தாலிபான் படைகள் எப்பொழுதெல் லாம் ஆட்கள் வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறார்களோ அப் பொழுதெல்லாம் ஹகீ னாவின் தலைவர் பள்ளியை இழுத்து மூடி விட்டு மாணவர்களைப் போர்க்களத்துக்கு அனுப்பி விடுவாராம். ஆனால் இவை போன்ற குழுக்கள் விதிவிலக்கானவை.

மதரசா ஆசிரியர்: 'அது சரி, உங்க நாட்டுல 'ஏன்டா ஹோம்வொர்க் பண்ணலே?'ன்னு கேட்டாக்கூட பசங்க டொப்புன்னு துப்பாக்கியை எடுத்து சுட்டுடுவாங்களாமே. க்ளாஸ்ரூம்ல துப்பாக்கி, ரிவால்வர், பிச்சுவா எல்லாம் கொண்டு வருவாங்களாமே...?

புஷ்: 'ஹிஹி...ஹிஹி...'

- மருதன்

விஜயகாந்த் பேசுகிறேன்! 10



# "காமராஜரிடம் ஆசி பெற்றேன்!"

அப்பாவுக்குக் கோபம் கோபமாக வந்தது. ''எவ்வளவுதான் அடிச்சாலும் நீ திருந்த மாட்டே, தேவகோட்டையில இருந்த வரை யாவது ஒழுங்காயிருந்தே. நல்லா படிச்சே. இங்கே வந்து எல்லாம் தலை கீழா யிடுச்சு. உன்னை இங்கே விட்டா உருப்படாம போயிடுவே''னு சொல்லி என்னை விக்கிரமசிங்கபுரத்தில் இருக்கிற செயின்ட் மேரீஸ் ஹைஸ்கூலில் பத்தாம் வகுப்புல சேர்த்துவிட்டார்.

அங்கே ஹாஸ்டலில் தங்கிப் படிச்சேன். ஒரு இரண்டு மாசம் நல்ல பிள்ளையா படிப்புல, விளையாட்டில கவனம் செலுத்தினேன். அப்புறம் வழக்கம் போல மதுரைக்காரன் குசும்பும் சேட்டையும் ஆரம்பம். அங்கே தான் நான் சினிமா பார்ப்பதில அதிக ஆர்வம் காட்டத்தொடங்கியது. முன்வேலியைத் தாண்டி தினமும் செகண்ட்ஷோவுக்குப் போயிருவேன்.

அப்பா பார்த்தார். 'நீ படிச்சது போதும்'னு கீரைத்துறை ரைஸ்மில்லில் கொண்டு போய் அந்த ரைஸ் மில் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார். புதிய சூழ்நிலையில, அதே பழைய நண்பர்களுடன் மீசை முளைத்த என் வாழ்க்கை ஆரம்பமானது.

அப்போ நான் கொஞ்சம் குண்டா யிருப்பேன். கதர் வேட்டி, ஜிப்பாதான் போடுவேன். ஒருநாள் ரைஸ் மில் பக்கத்துல இருக்கிற டீக்கடையில் உட்கார்ந்து டீ குடிக்கிறேன். எதிரில் இருந்த ஒரு மாடிவீட்டு ஜன்னல்ல இருந்து யாரோ என்னையே பார்த்துக் கொண்டிருப் பது போலிருந்தது. அது யார், என்னன்னு யோசிக்காம வந்துட்டேன். மறுநாள், அதே போல் யாரோ என்னைக் கவனிப்பது போலத் தெரிய, சட்டென்று திரும்பிப் பார்த்தேன். ஒரு பெண்ணின் கண்கள் என் மேல் இருந்தன. கண்களே இத்தனை அழகுன்னா அவள் எவ்ளோ அழகாயிருப்பாள்? என் கண்களில், மனத்தில் தேடல் ஆரம்பமானது.

எங்கள் கண்களின் கண்ணாமூச்சி சிலநாட்கள் தொடர்ந்தன. பார்வை பரிமாற்றம் சைகையாக மாறியது. சைகை யாலேயே பேசிக்கொண்டோம். ஒருநாள் அவள் அழகு முகம் பார்த்துப் பரவசமானேன். 'உங்களுக்கு இந்த உடை நல்லாயில்லை, பேண்ட் ஷர்ட் போடுங்க. சூப்பராயிருக்கும்'னு ஒரு காகிதத்தில் எழுதி என் மேல் வீசினாள். மறுநாளே புதிதாக பேண்ட் ஷர்ட் தைத்துப் போட்டுக் கொண்டு அவள் பார்க்கும் திசையில் நின்னேன், 'சூப்பர்' என்று சொன்னதோடு காற்றில் ஒரு முத்தம் பறக்கவிட்டாள். ''இந்த டிரஸ் தான் தலைவா உங்களுக்கு சூப்பரா யிருக்கு''னு நண்பர் குழுவும் ஆமோதித்தது.

பார்வையில ஆரம்பிச்ச எங்கள்

காதல், சினிமா, பார்க் எனத் தொடராமலேயே போனது. ஒருநாள் அவள் திடீரென்று காணாமல் போனாள். விசாரிச்சதுல, அந்த வீட்டில் தங்கிப் படித்தவள் பரீட்சை முடிந்ததும் ஊருக்குப் போய்விட்டாள் என அறிந்தேன். இது காதல்தானா என்று புரியாத போது காத்திருப்பதில் பயனென்ன... ரைஸ் மில் தொழிலில் முழுக் கவனம் செலுத்த ஆரம்பித்தேன்.

**ம**துரையில் அரசியல் கூட்டங்கள் அதிகமாய் நடப்பது எங்க வீதியில்தான். பல பெரிய பெரிய தலைவர்கள் எல்லாம் இங்கு வந்து சொற்போர் நடத்தி இருக்கிறார்கள். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, மூதறிஞர் ராஜாஜி, இந்திரா காந்தி, பசும்பொன் முத்துராமலிங்க தேவர், காமராஜர், எம்.ஜி.ஆர்., கலைஞர் என்று பல தலைவர்களின் பேச்சையும், எங்க வீட்டு மாடியிலிருந்து பார்த்திருக்கேன்.

நான் ரொம்ப நெருக்கமாகப் பக்கத்தில் நின்று பார்த்தது அன்னை இந்திரா, பெருந்தலைவர் காமராஜர் ஆகியோரைத்தான். காமராஜர் அய்யா எப்போ மதுரைக்கு வந்தாலும் எங்கப்பா அவரைப் பார்க்கப் போய்விடுவார். தலைவரைப் பார்க்கப் போகும் போது வெறும் கையோடு போகக் கூடாதுன்னு அன்பளிப்பு ஏதேனும் வாங்கிட்டுப் போனால் தலைவர் வாங்க மாட்டார், கோபிப்பார். அதனால எங்க வீட்ல செஞ்ச மல்லிகைப் பூ மாதிரி இட்லி, புதினா சட்னி, சாம்பார்னு எடுத்துட்டுப் போவார். அப்போ என்னையும் கூட வரச் சொல்வாரு. நான் நழுவிடுவேன்.



காரணம், அப்போ நான் எம்.ஜி.ஆர். கட்சிக்காரனாக என்னை நினைத்துக் கொண்டதுதான்.

ஒரு சமயம் தவிர்க்க முடியாமல் கையில் இட்லி கேரியருடன் அப்பாவும் நானும் காமராஜர் அய்யாவைப் பார்க்கப்போனோம். அவ்வளவு பெரிய தலைவரான அவர் சாதாரண பிளாஸ்டிக் சேரில் உட்கார்ந்திருந்தார். அவரது எளிமை எனக்கு ரொம்பப் பிடிச்சுருந்தது.

அப்பா கைகூப்பி வணக்கம் சொல்ல, பதிலுக்குக் கைகூப்பி வரவேற்றார். கதர் வேட்டி - சட்டையில் பளிச்சென்று சிரித்தார், கள்ளம் கபடமில்லாத குழந்தைத்தனம் இருந்தது.

"உன் பையனா...?" - அப்பாவிடம் கேட்டார்.

"ஆமா! சின்னவன்" என்றார் அப்பா பெருமையாக.

என்னைப் பக்கத்துல அழைத்து உட்கார வைத்துக்கொண்டார். முதுகில் தட்டிக்கொடுத்தார், பெயரைக் கேட்டார்.

"நல்லா படிக்கணும். இந்த நாட்டுக்கும், உன் வீட்டுக்கும் நல்லவனாயிரு" என்று என்னைத் தட்டிக்கொடுத்தார். நான் தலையை ஆட்டி வைத்தேன். அப்போ அந்தத் தலைவரின் அருமை, பெருமை எனக்குத் தெரியாது. விவரம் தெரியாத வயசு. அந்த நிகழ்ச்சியை இப்ப நெனைச்சுப் பார்த்தால் ரொம்பப் பெருமையாக இருக்கு.

இந்திராகாந்தியம்மாவை பார்க்கப் போகும்போதும் இப்படித்தான் நான் வேடிக்கை பார்த்துட்டு நின்றிருந்தேன், கண்ணில் நிற்கும் இந்த மறக்க முடியாத காட்சிகளை நிழல்படமாக எடுத்து வைக்கணும் என்கிற அந்த விவரம் எங்கப்பாவுக்குத் தெரியலை.

**எ**ங்கப்பா எங்களைப் பார்த்து அடிக்கடி சொல்வாரு; 'அந்த கறுப்பு கட்சிக்காரங்க (தி.மு.க.வை தான் அவர் அப்படிச் சொல்வார்) பின்னால போய் வீணா போயிடாதிங்கடா'னு.

நானும், நாகராஜ் அண்ணனும் எம்.ஜி.ஆர். ரசிகர்கள்; ரசிகர்கள்னு சொல்றதை விட எம்.ஜி.ஆர். வெறியர்கள்னுதான் சொல்லணும். அதனால எம்.ஜி.ஆர். சார்ந்திருந்த தி.மு.க.வின் வெற்றிக்காக தேர்தல் வேலைகள் செய்வோம். அவ்வளவு ஏன் தி.மு.க.வை உன்



"**சே**துபதி ஐபிஎஸ். படத்துக்காக கிளாக் டவர் செட் அடையாறு சானிட்டோரியத்துக்கு மேல் போட்டு இருந்தோம். அந்த மணிக்கூண்டின் மீது விஜயகாந்த் ஏற வேண்டும். நான் கீழே நின்று கொண்டு மெகாபோனில், "இன்னும் ஏறுங்கள், ஏறுங்கள்" எனச் சத்தம் போட்டுக் கொண்டிருந்தேன்; அவரும் சிரித்துக்கொண்டே ஏறிக் கொண்டிருந்தார்.

அந்தக் காட்சியை ஷூட் செய்து முடித்து விட்டு, நான் மேலே ஏறினேன். அந்த கிளாக்குக்கு கீழ் ஒரு பலகை போட்டு இருந்தார்கள். அதில் கூட என்னால் நிற்க முடியவில்லை. காற்று சுழன்று அடிக்கும்போது அவ்வளவு உயரத்தில் ஏற விஜயகாந்த் எவ்வளவு ரிஸ்க் எடுத்திருக்கிறார் என்று அப்போது தான் தெரிந்தது.

விஜயகாந்தின் பெரிய ப்ளஸ் பாயிண்ட், அவரது சண்டைக் காட்சிகள். உயரே கிளம்பி இரண்டு கால்

ளாட்சித் தேர்தலில் எதிர்த்து நின்ற காங்கிரஸ்காரரான அப்பாவையே தோற்கடித்தோம். அத்தனை விசுவாசம் எம்.ஜி.ஆர். மேலே, தி.மு.க. மேலே எங்களுக்கு.

அதே போல எம்.ஜி.ஆர். அந்தக் கட்சியை விட்டு வெளியே வந்து தனியாக ஒரு அரசியல் கட்சி ஆரம்பித்த போது, நாங்க எங்க வீட்டு மாடி மேலே அ.தி.மு.க. கொடியை ஏத்தினோம். அப்பா திட்டினார். அதே போல ஒருநாள் அண்ணன் கையில் எம்.ஜி.ஆர். படம் பச்சை குத்திட்டு வர, அண்ணனைப் புரட்டி எடுத்துவிட்டார்.

அப்போ நாங்க இந்தி எதிர்ப்புல கலந்துட்டது ஏன்னு இப்ப உங்களுக்குப் புரிஞ்சிருக்கும்னு நெனைக்கிறேன். அது மட்டுமில்லே எல்லா மொழியும் அன்னைக்கி ஏன் கத்துக்காம போனோம்னு இப்ப ஃபீல் பண்றேன்.


முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விஸ்வநாதன் அய்யா இது பற்றி சொல்லியிருந்தார். "தாய்மொழி நமக்கு அவசியம், அரண் மாதிரி இருக்கணும். தொடர்பு மொழி ஆங்கிலம் இருக்கணும். வியாபாரரீதியா எந்த மொழியையும் கத்துக்கலாம்"னு அவர் சொல்லியிருந்தது எங்களுக்குத் தெரியலை.

எல்லோரும் எல்லா மொழியும் கத்துக்கணும். யாரும் யாருக்கும் சோறு போடுறதில்லே, இன்னிக்கி இருக்கிறவங்க நாளைக்கு இல்லேங்கறோம். இன்னிக்கு இருக்கிற கட்சிங்க நாளைக்கு இருக்குமா? ஆனா மக்கள் இருப்பாங்க. அந்த மக்களுக்காக நாம என்ன செய்யணும், அதைப் பார்க்கணும்.

குண்டு சட்டிக்குள்ளே குதிரை ஓட்டுவதை விட்டு பல மொழிகள் கத்துக்கறதுல தப்பில்லே. வெள்ளையன் அதிக்கத்தாலேயே, அழிக்க முடியாத தமிழ் மொழியை, இனி யாராலும் மாத்த முடியாது. தமிழ் என்றைக்கும் தமிழாகவே இருக்கும், அதை விட்டு ஏழைங்க பிள்ளைகள் மட்டும் தமிழ் படித்தால் போதுமா? இதைப் பற்றி அப்புறம் பேசுவோம்.

ஒரு சமயம் நாங்க கேரளா போயிருக்கும்போது, அங்கே...

(சொல்றேன்)



படம்: ஸ்ரீஹரி

'தி பாஸ்' - சிவாஜி, உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் ஜனவரி 1ம் தேதி ஐஸ்வர்யா தனுஷுடன் தொடர்பு கொண்டு, வாழ்த்துத் தெரிவித்து விடுவார். ரஜினியின் செல்லமகள் புத்தாண்டு அன்று பிறந்தவராச்சே!

## விஜயகாந்த் பற்றி வி.ஐ.பி!

களை உயர்த்தி எதிராளியை உதைத்துத் திரும்புகிற ஸ்டைலைப் பார்த்து, சக நடிகர்களே மனம் விட்டுப் பாராட்டுவதை நான் கேட்டிருக்கிறேன். நடிகர்களே அவரது சண்டைக்காட்சிகளை ரசிக்கிறார்கள் என்றால் ரசிகர்கள் எந்த அளவுக்கு ரசிப்பார்கள் நினைத்துப் பாருங்கள்,


இன்றைக்கு விஜயகாந்த் எவ்வளவு பெரிய நடிகராக இருந்தாலும் அன்று.... நான் 'தூரத்து இடிமுழக்க'த்தில் முதன் முதலாகப் பார்த்தபோது எப்படி எளிமையாக இருந்தாரோ அப்படியே இப்போதும் இருக்கிறார்"

- டைரக்டர் பி. வாசு.

# கோகுலம்


ஜனவரி 2006 ◆ ரூ.5/-

குழந்தைகளின் குதூகலம்!



## மார்ஸிலிருந்து நிமோ!

– அறிவியல் புனைகதை



## கிரீட்டிங் கார்டு பிறந்த கதை!

## வண்ண காலண்டர் 2006



## நீந்தாமலே நீச்சல்!

– விளையாட்டு

## 1000/– ரூபாய் பரிசுப் போட்டி

ஜனவரி 2006

இந்த இதழுடன்
புத்தாண்டுப் பரிசாக
பாரம்பர்யமிக்க



# பரமபத சோபான படம்

– இலவச இணைப்பு

என் இனிய இல்லம்
ஜெயிக்கப் போவது யாரு?
KGEYES – இறுதிப் போட்டி

சுவையான பொங்கல்!
குழம்பு வகைகள்!



இப்போது விற்பனையில்...

என்றும் உங்களுடன்

# மங்கையர் மலர்

# சின்னான் செய்திகள்



## எலிகளின் கவனத்துக்கு

இப்போ தெற்கு ரயில்வேயோட பெரிய பிரச்னை இன்னான்னா, அது கிச்.. கிச்! அதாம்பா நீங்கதானாம்! ரயிலு பெட்டி களில ரொம்பவே ஆட்டம் போடுறீங் களாம். எப்படியாவது உங்களை ஒழிச்சுக் கட்டணும்னு டேஸ்டான மருந்து தடவப் பட்ட காகித வலைகளைக் கண்டுபிடிச்சுருக் காங்களாம்! நெறைய பேரு இதுல வசமா மாட்டி வாயைப் பொழந்துடுறீங்களாம்! சொல்லுறத சொல்லிப்புட்டேன். செய்யுறத செஞ்சிக்கோங்க!

## எருமைகளின் கவனத்துக்கு

கவுகாத்தி காமகயா கோயில்ல அமிதாப் பச்சன் குணமடையணும்னு வேண்டி, எருமைகளைப் பலி கொடுத்தாங் களாம் அவரோட ரசிகர்கள். ஆனா இப் படிச் செஞ்சது அமிதாப்போட ரசிகர் கள் இல்ல. அவிங்க சமாஜ்வாதி கட்சிக் காரய்ங்க, முலாயம் சிங் பிரதமராகணும்னு வேண்டித்தான் இப்படிப் பண்ணியிருக் காய்ங்கன்னு ஒரு செய்தி கௌம்பிருக்கு. எப்படி இருந்தாலும் நீங்க 'அந்நியன்' ஸ்டைல்ல ஏதாவது பண்ணுனாத்தான் இவிங்க சரிப்படுவாங்க.

## யானைகளின் கவனத்துக்கு

ஜெருசலேம்ல உள்ள வன விலங்குப் பூங்காவுல உங்க தாமர் தங்கச்சி யானை (வயசு 20) செயற்கை முறையில கருத் தரிச்சு, ஆரோக்கியமா 90 கிலோவில ஒரு குட்டி போட்டிருக்காங்களாம். ஆசியாவில இப்படிப் பொறந்த பதினோராவது குட்டி இது! உயிரணு கொடுத்த அப்பா யானை எம் மெட் இங்கி லாந்துல இருக் காம். இப்படிப் பொறந்த யானைங்க நாலஞ்சு ஒரு வருசத்துக்குள் ளேயே இறந்து போயிருக்காம். அதான் இந்த யானைக் குட்டி நீண்ட ஆயுளோட வாழ உங்க குலதெய் வங்கள்கிட்ட வேண்டிக்கோங் கன்னு மத்த யானைங்களை கேட்டுக்கிறேன்.

## குரங்குகளின் கவனத்துக்கு

'கிங்காங்' படம் உலகம் முழுக்கும் ரிலீசாகி ஓப்பனிங் கலெக்சனா 49 கோடிகளை அள்ளியிருக்காம். படத்துக்கு மொத்த செலவு ஆயிரம் கோடி ரூபா யாம். போகப் போக இன்னும் அள்ளு அள்ளுன்னு அள்ளுமாம். டியர் குரங்குகளே, உங்க 'பெரியப்பா'வை வைச்சு படம் எடுத்து எவனோ துட்டு சம்பாதிக்கிறான். அதுல உங்களுக்கு பங்கு வேண்டாமா! சட்டுபுட் டுன்னு பேசி ஒரு முடிவுக்கு வாங்க. 'இராம நாராயணன்' சார் ஹெல்ப் பண்ணுவாரு! ஏதாவது கேசு கீசைப் போட்டு லாபத்துல பங்கை வாங்கிருங்க, சரியா!



# ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை – 63. போன் : 22760612.
City Office No.7, முதல் மாடி, வேலு தெரு, மேற்கு மாம்பலம்,
(அயோத்யா மண்டபம் அருகில்) சென்னை – 33.போன் 23714942.
கிளை நிறுவனம் : புதிய எண். 16, பழைய எண். 19, முதல் மாடி, 30வது தெரு,
தில்லைகங்கா நகர், நங்கநல்லூர், சென்னை – 600 061. போன் : 22333214

## புத்தாண்டு - பொங்கல் நல்வாழ்த்துக்கள்

## ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர், வணக்கம்!

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 18 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, திக்கற்ற மற்றும் வறுமை கோட்டின் கீழ் வாழும் 200 மாணவ மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன், உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு, நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| • காலை சிற்றுண்டி (200 பேருக்கு) | ரூ. | 1,000/- |
| • மதிய உணவு | ரூ. | 2,000/- |
| • இரவு சிற்றுண்டி | ரூ. | 1,000/- |
| • இனிப்பு மற்றும் பால் வழங்குதல் | ரூ. | 1,000/- |
| • ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித்தொகை | ரூ. | 1,000/- |
| • ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி) | ரூ. | 12,000/- |
| • குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு | ரூ. | 2,00,000/- |

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி வருமானவரி விலக்கு உண்டு.

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில்/வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை **ஸ்ரீ சாரதா சக்தி பீடம்** என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர் நல்லாசியுடன்
நிர்வாகம்

# புதிய பரிசு!

இறக்கைகள் இல்லாமலேயே பறக்க முடியுமா? சந்தேகந்தான். ஆனால் திருச்சி, பாரதிதாசன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மேனேஜ்மென்ட் மாணவர்களான அனிதா பார்த்தசாரதி, ஆனந்த் வெங்கட்ராமன், சந்தோஷ் ராம்தாஸ் மற்றும் தீபக்குமார் பட்டர், 'சிறகு விரித்தேன். வானம் இடித்தது' என்று பாடியதோடு ஆகாயத்தில் மிதந்தும் கொண்டிருந்தார்கள். "என்ன விஷயம்?" என்று கேட்டால், "கம்ப்யூட்டர் மகான் பில்கேட்ஸ் கம்பெனி வைச்ச சர்வதேசப் போட்டியில் முதல் பரிசான 'இமேஜின் கப்' கோப்பையை ஜெயிச்சுருக்கோமே!" என்று கீழே இறங்கி வந்து பதில் சொன்னார்கள். இனி, ஓவர் டு 'பிம்' சக்ஸஸ் டீம்!

• எம்.சங்கரன் • லட்சுமண்குமார்





"தமிழ்நாட்டுக்குள் மட்டுமல்ல, அகில இந்திய அளவிலும் எம்.பி.ஏ. நிர்வாகவியல் படிப்புக்கு என இயங்கி வரும் கலா சாலைகளில் மிகச் சிறந்தது எங்க திருச்சி பிம்! தொழில்நுட்பம், கலை, விளையாட்டுன்னு எங்கே எந்தப் போட்டி வைச்சாலும் அசத்தாமல் விட மாட்டோம். மைக்ரோசாஃப்ட் நிறுவனம் நடத்திய இந்தப் போட்டியிலும் ஆர்வத்துடன் பேர் கொடுத்தோம். முதல்ல பத்து, பன்னிரண்டு பிரிவுகள்ல போட்டி வைப்பாங்க. ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடம் பிடிக்கிறவங்களுக்கு, கவர்ச்சிகரமான பரிசுகள் கொடுத்து கௌரவிப்பாங்க. போக வர்ற செலவு, டீ, சாப்பாடு எல்லா செலவுமே அவங்களோடதுதான். இமேஜின் கப், ஜெயிச்சுட்டா, உங்க இமேஜை நீங்க இமேஜினே பண்ண முடியாது. அதனால போட்டியும் பலமா இருக்கும். இந்த வருஷம் இந்தியாவிலிருந்து தேர்வு செய்யப்பட்ட குழுக்களிலேயே எங்க 'பிம்' மட்டுமே தகுதி நிலை கிடைச்சு, கோப்பையையும் ஜெயிச்சுருக்கு" என்று சின்ன முன்னுரை தந்தார் சந்தோஷ்.

ஜப்பானில் தான் பட்ட அவஸ்தைகளை நினைவுகூர்ந்தார் ஆனந்த் வெங்கட்ராமன். "இந்த முறை 'இமேஜின் கப்' போட்டிகள் ஜப்பானில் யோகோஹாமா நகரில் நடந்தன. நான் மட்டும் சென்னையிலிருந்து கோலாலம்பூர் வழியாக டோக்கியோ போறதுன்னும் மத்தவங்க மும்பையிலிருந்து சிங்கப்பூர் வழியாக டோக்கியோ போறதுன்னும் முடிவாச்சு. ஆனா, எனக்குக் கிளம்புற அன்னிக்குக் காலையிலகூட பாஸ்போர்ட் வந்து சேரலை. டென்ஷன்னா.. டென்ஷன்! மத்த மூணு பேர் கூட டெலிபோன்ல பேசலாம்னா, அன்னிக்குன்னு பார்த்து அங்க பேய் மழை! ஒரு வழியா, பிளேன் ஏறுவதற்கு சரியா நாலு மணி நேரத்துக்கு முன்னால பாஸ்போர்ட் கிடைச்சு 'அப்பாடா'ன்னு ஆச்சு! அப்புறம் ஊரும் புரியாம, பாஷையும் தெரியாம, டோக்கியோ விமான நிலையம் போய்ச் சேர்ந்தா, இன்னொரு அதிர்ச்சி! எனக்கு முன்னாடியே வந்திருக்க வேண்டிய இந்த மூணு பேரையும் காணோம். எங்க போட்டியில கலந்துக்க முடியாம போயிடுமோன்னு ஒரே படபடப்பு. எட்டுமணி நேரத் தவிப்புக்குப் பின்னால, ஒரு வழியா வந்து சேர்ந்தாங்க! மறுபடி 'அப்பாடா!'ன்னு இருந்தது" என்று முடித்தவரை, வாயில்

பிளாஸ்டர் ஒட்டாத குறையாக அடக்கிவிட்டுத் தொடர்ந்தார் அனிதா.

''யோகோஹாமாவுல இருக்கிற 'பேன் பசிஃபிக் இன்டர்நேஷனல்' என்கிற ஏழு நட்சத்திர ஹோட்டல்ல தான் எங்களைத் தங்க வெச்சிருந்தாங்க. எண்பது மாடிகள் கொண்ட அந்த ஹோட்டல்ல ஐம்பதாவது மாடியில எங்களுக்கு அறைகள் ஒதுக்கியிருந்தாங்க. இரண்டு மணி நேரம் கழிச்சு எங்க அறைக்கு வந்த ஹோட்டல் சிப்பந்தி ஒருவர், 'உங்களுடைய பொருள் ஒன்றை விட்டுட்டு வந்திட்டீங்க அதுஎன்னன்னு சொல்ல முடியுமா?'னு கேட்டாரு. 'என்னடா... இந்த 'பிம்' குழுவுக்குத் தொடர்ந்து வரும் சோதனை!'னு கத்தணும் போல இருந்தது. நாங்க 'திருதிரு'னு விழிச்சுக்கிட்டே நின்னோம்! ஹோட்டலின் இன்னொரு சிப்பந்தி, ஒரு பெட்டியை நீட்டினார். திறந்து பார்த்தா... எங்களுடைய லேப்டாப்! அதுலதான் எங்க டீமோட ஒட்டு மொத்த திட்டமும் பதிவு பண்ணியிருந்தோம். அது மட்டும் தொலைஞ்சுருந்தா, டப்பா டான்ஸாடியிருக்கும். மூணாவது முறையா 'அப்பாடா!''னு இருந்தது!'' என்றார் அனிதா.

''டெக்னாலஜி பிஸினஸ் பிளான்' பிரிவுல கலந்துகிட்டோம் தகவல் தொழில்நுட்பத் திறனை, கிராமங்களுக்குக் கொண்டு செல்வது எப்படி என்ற யோசனைகளோடு, அதை பயனுள்ளதாகவும் லாபகரமாகவும் செயல்படுத்துவது எப்படின்னும் முறைப்படுத்திக் காட்டினோம். இந்தப் போட்டியில எங்களோட மோதறதுக்குன்னே, உலகின் பல நாடுகள்லேயிருந்து மொத்தம் முந்நூறு குழுக்கள் வந்திருந்தன. ''முதல் பரிசு திருச்சி பிம்'னு அறிவிச்சதும் 'ஓ!'னு அலறிட்டோம்ல. இமேஜின் கோப்பையோட, எட்டாயிரம் டாலர் பணமும் கொடுத்தாங்க. எங்களுக்கு அடுத்த இடத்தைப் பிடிச்சது யார் தெரியுமா? உலகப் புகழ் பெற்ற அமெரிக்காவின் யூனிவர்சிட்டி ஆஃப் கலிபோர்னியா குழு. இப்ப ஒத்துக்கறிங்களா, நாங்க பறந்தது ஒண்ணும் தப்பில்லன்னு!'' என்றார் தீபக்குமார்.



* ஜெயித்த மகிழ்ச்சியில்...

''செல்லுமிடமெல்லாம் வெற்றி வாகை சூடுவதற்கு, எங்க கல்லூரியின் நவீன இன்ஃப்ராஸ்ட்ரக்சரும் உற்சாகத்துடன் ஒத்துழைப்பு தரும் ஆசிரியர்களும்தான் காரணம்'' என்றனர் கோரஸாக.


''இந்திய அளவில் இது புதிய சாதனை'' என்று பெருமிதப்பட்ட 'பிம்' இயக்குனர் எம்.சங்கரன், ''தங்கள் மாணவர்கள் சமூக விழிப்புணர்வு திட்டங்களிலும் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருவதாக மனமகிழ்ந்தார்.

''போட்டிகளில் மட்டுமல்ல, நிர்வாகவியல் கல்வித் திறனிலும் எப்போதும் முதலிடத்திலிருக்கிறது பிம் 2004 - 06 எம்.பி.ஏ. மாணவர்கள் 116 பேருக்கும் கேம்பஸ் செலக்ஷன் ஆகி, பெரிய பெரிய நிறுவனங்களில் வேலை கிடைத்துள்ளது இது நூறு சதவிகித வேலை வாய்ப்பு'' என்று கூறினார். 'பிம்'மின் பிளேஸ்மெண்ட் சேர்மன் டாக்டர் லக்ஷ்மண்குமார்.

அடுத்த போட்டி எங்கேப்பா?

- ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

# அருள்வாக்கு



ஸங்கீதத்தால் சாந்தம் வரும். அதே போல சாந்தரஸத்திலே ஸங்கீதம் தானாக நிறைந்துவிடும். இதனால்தான் ஸதாசிவ ப்ரம்மேந்திராள் போன்ற மஹாஞானிகள்கூடப் பாடியிருக்கிறார்கள். ஸங்கீதத்துக்காகவே ஸங்கீதம், அல்லது ஆத்மாவுக்காக ஸங்கீதம் என்று பாடிக் கொண்டிருந்தால்தான் நிறைந்த சாந்தம் அதிலேயே ஏற்படும். 'ஸங்கீதம் அப்யஸித்தும் அசாந்தமாயிருக்கிறதே' என்றால் மனஸ் வேறு எதையோ ஆசைப்படுகிறது என்று அர்த்தம். ஸங்கீதத்தைக் கொண்டு திரவியமோ புகழோ வேண்டும் என்று ஆசையிருந்தால் பூர்ணபலன், அதாவது நிறைந்த சாந்தம் ஏற்படாது. அப்போதுங்கூட சில ஸமயங்களில் சாந்தம் உண்டாகும். தேன் எடுத்தவன் புறங்கையை நக்கிக் கொண்டு ஏதோ கொஞ்சம் ருசி பார்ப்பது மாதிரி. பாக்கி தேனை அவன் ரஸாஸ்வாதம் பண்ணுவதில்லை. அது கடைக்கு விலைக்குப் போகிறது. இப்படி ஸங்கீதத்தை விலை பண்ணுவது, அதனால் புகழ் எடுப்பது என்கிறபோதுகூட வித்வான்கள் அவ்வப்போது தன்னை மறந்து பாடுகிறார்கள்; நம்மையும் 'தன்னை மறக்க'ப் பண்ணுகிறார்கள். இதிலே கொஞ்சம் சாந்தம், ஸந்தோஷம் அடைகிறோம்.

தியாகையர் மாதிரி ஹ்ருதய பூர்வமாக அதிலேயே ஈடுபட்டு வேறு பிரயோஜனம் வேண்டாமென்று இருந்துவிட்டால் நிறைந்த சாந்தம், பேரானந்தம் எல்லையில்லாமல் கிடைத்துவிடும். நல்ல நாதோபாஸனங்களானால் ஹ்ருதயம் புஷ்பம் போல் மிருதுவாகிவிடும். தியாகையர், கோபாலகிருஷ்ணபாரதி போன்றவர்களிடம் பழகினவர்கள், அவர்களுடைய ஹ்ருதயம் கருணையோடு மிருதுவாக இருந்தது என்று எழுதியிருக்கிறார்கள். இன்றைக்கும் உத்தமமான பாகவதர்களிடம் பழகுகிறவர்கள் அவர்களுடைய மென்மையான மனஸைப் பற்றிச் சொல்கிறார்கள்.

Music therapy - ஸங்கீதத்தால் வியாதி குணமாகிறது, பாடினால் பயிர் விளைச்சல் ஜாஸ்தியாகிறது என்றால் அதிலே அம்பாளின் ப்ரேமாம்ருதம் கலந்திருப்பதுதான் காரணம்.

- ஜகத்குரு
காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர
சரஸ்வதி சங்கராச்சார்ய
சுவாமிகள்

*Gurunathar Charanam*

# PRASHANTI

***(House of Silk Cottons)***



extends Warm Greetings to their esteemed customers for

**A MERRY 'X' MAS & HAPPY NEW YEAR !!**

தனிச்சிறப்பு பெற்ற **பிரசாந்தி**யின் படைப்புகளோடு புதிய
ஆண்டைத் துவங்க உளமார வாழ்த்துகிறோம்!!

திருமணங்களுக்கு : **விவாஹம்**
இதர விசேஷங்கள் மற்றும் பார்டிகளுக்கு : **வைபோகம்**
தினம் உடுத்த : **நித்யம்**

மற்றும் மங்கையர் மனம் கவரும் சல்வார்கள் எனப் பலப் பல கலெக்ஷன்ஸ்

ஆம் **"சில்க் காட்டன் என்றாலே பிரசாந்தி"**

| | |
|---|---|
| **PRASHANTI**<br>16, 6th Cross St, C.I.T. Colony,<br>(Behind Chettiar Hall),<br>Mylapore, Chennai - 4.<br>Ph: 24991850 / 24997636.<br>Sunday Holiday | **PRASHANTI'S PARIPURNA,**<br>No. 52, 4th Main, 17th Cross,<br>Malleswaram, Bangalore.<br>Ph: 23341632. Tuesday Holiday |

Timing: 10 AM to 7 PM

* Major Credit cards Accepted E-mail: prashanti_sarees@yahoo.com.



ஓம் ஸ்ரீ குருப்யோ நம

# வேண்டுகோள்

சமூகத்தின் வேதங்கள் வளர்ச்சிக்கும், ஆன்மீக உயர்வுக்கும் அருந்தொண்டாற்றிய பண்டிதர்களுள் புகழ்பெற்றவர் நடுக்காவேரி ப்ரம்மஸ்ரீ சீனிவாச சாஸ்திரிகள். சமூகத்தின் அமைதிக்காக ஆன்மீக ரீதியாக சிறந்த பல யாகங்கள் செய்துவரும், ஆஸ்திகர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் புகழ்பெற்ற ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதரின் தர்மசாஸ்திர க்ரந்த நூல்களை வர்ணாச்சிரம தர்ம காண்டம் போன்ற ஆறு காண்டங்களை தமிழ் மொழியில் மொழிபெயர்த்து அச்சிட்டு ஆஸ்திக உலகிற்கு சிறந்த உபகாரம் செய்துள்ளார்கள். வேதம், ஆன்மீகம், பண்பாடு கலாச்சாரங்களை பேணிக்காத்து வரும் ஸ்ரீ காஞ்சி காமகோடி சர்வக்ஞ பீடம், சிருங்கேரி ஸ்ரீ சாரதாபீடம் சமஸ்தானங்களுக்கு உறுதுணையாகச் செயல்பட்டும் புகழ்பெற்ற ஆஸ்தான பண்டிதராகவும் இருந்து வந்துள்ளார்.

இப்பெருமையுடைய சாஸ்திரிகள் கி.பி.19ம் நூற்றாண்டில் தென்இந்தியாவில் தஞ்சாவூர் மாவட்டம் நடுக்காவேரி என்ற கிராமத்தில் வாழ்ந்து வந்துள்ளார்கள். வேதம் மற்றும் ஆன்மீக வளர்சசிக்கும் உயர்வுக்கும் தனது வாழ்நாளை அர்ப்பணித்த மகான் ப்ரம்ம ஸ்ரீ சீனிவாச சாஸ்திரிகளின் ஞாபகார்த்தமாக அவரது புராதன கிரஹத்தில் சாஸ்வத வேதபாடசாலை மற்றும் ஆன்மீக பள்ளி தொடங்குவதற்கு கலியுக தெய்வம் காஞ்சி ஸ்ரீஸ்ரீஸ்ரீ மஹாஸ்வாமிகள் ஆக்ஞை அனுக்கிரகப்படி, நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கட்டட பணிக்காக சுமார் பத்து இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆஸ்திகர்கள் அனைவரும் இப்புனித பணிக்கு பெருமளவில் நன்கொடை வழங்கி ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஆசாரியார் அனுக்கிரஹத்துக்கும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ வேதமாதா கிருபா கடாக்ஷத்திற்கும் பாத்திரர்களாகும்படி கேட்டுக் கொள்கிறோம்.

நன்கொடைகள் கேட்பு வரைவோலை / செக் காக ஸ்ரீ ஸ்ரீனிவாசா வேதபாடசாலை டிரஸ்டு என எடுத்து கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்.

**மேனேஜிங் டிரஸ்டி,**
**ஸ்ரீ ஸ்ரீனிவாசா வேதபாடசாலை டிரஸ்ட்,**
**எண் 12 காமாக்ஷி அம்மன் மேற்கு மாட தெரு,**
**காஞ்சிபுரம் - 631 502. தமிழ்நாடு, இந்தியா**
**போன்: 27234230**

॥ शुभम् ॥

**எஸ்.ராமச்சந்திரன்,**
**நிறுவனர் டிரஸ்டி,**
**மற்றும் டிரஸ்டிகள்**

# புது கெட்டப்!

'ஆதி'யில் முதல் முறையாக விஜய் தோற்றத்தை மாற்றிக்கொண்டு நடிக்கிறார். 'திருப்பாச்சி'யில் முகம் முழுவதும் சந்தனத்தைப் பூசிக்கொண்டு, குங்குமப் பொட்டுடன் வில்லனை வேட்டையாடப் புறப்பட்ட விஜய்யின் தோற்றம் ரசிகர்களுக்கு ரொம்பப் பிடித்துப் போய் விட்டதாம். இந்த முறை முகம் முழுவதும், கறுப்பு, நீலம், பச்சை, சிவப்பு என்று காட்சிக்கு ஒன்று விதம்ஆறு வண்ணங்களை முகம் முழுவதும் பூசிக்கொண்டு பயமுறுத்தப் போகிறார்.

தமக்கு ஒரு படம் நடித்துத் தர வேண்டும் என விஜய்யின் அப்பா பல கதைகளைத் தயார் செய்து சொல்லியும், எல்லாவற்றையும் நிராகரித்து விட்டாராம் விஜய். இறுதியாக 'அத்தன் ஒக்கடே' என்ற தெலுங்குப் படத்தை பெங்களூரில் பார்த்த சந்திரசேகரன், அப்படியே ஹைதராபாத் சென்று படத்தின் தமிழ் உரிமையைக் கையோடு வாங்கிக்கொண்டு, கூடவே படத்தின் பிரதியையும் எடுத்து வந்து அன்று மாலையே விஜய்க்கு போட்டுக் காட்டியிருக்கிறார். படத்தைப் பார்த்து 'ஓகே' சொன்ன விஜய், படத்தின் இயக்குனரைப் பார்த்து, அதைவிட அசந்து போனாராம். சுரேந்தர் ரெட்டிக்கு இருபத்தொரு வயது! 'படத்தில் நீங்கள் செய்த தவறுகளை ஒரு பட்டியல் போட்டுத் தாருங்கள்' என்று கேட்க, ரெட்டியும் தவறுகளை அடுக்க... ஆதி தமிழில் அடுத்த இல்லியாகத் தயாராகி விட்டது.





# புது வேகம்!

• 'பரமசிவன்' படத்தில் இதுவரை பார்த்திராத புதிய அஜித் என அடித்துச் சொல்லலாம். அவர் ஏற்றிருக்கும் தூக்குத்தண்டனை கைதி பாத்திரமே இதற்கு சாட்சி!

• இந்த கேரக்டருக்காக, சிறைத் துறையிடம் சிறப்பு அனுமதி பெற்று, இயக்குநர் வாசுவுடன் வேலூர் மத்திய சிறைக்கு ரகசிய விசிட் அடித்திருக்கிறார் அஜித். அங்கே தூக்குத் தண்டனை கைதிகளை நேரில் சந்தித்து, அவர்களோடு ஒரு பகல் முழுவதும் செல்லில் தங்கி, அவர்களுக்குத் தரப்படும் உணவையே சாப்பிட்டு, அவர்களது உணர்வுகளைப் பகிர்ந்துகொண்டு திரும்பியிருப்பதாகத் தகவல்.

• அஜித், அடிப்படையில் மோட்டார் பைக் பந்தய வீரர். அவரது பைக் ஓட்டும் திறனை முதல் முறையாக அவரது ரசிகர்கள் பார்த்து அசரப் போகிறார்கள். அறுநூற்று ஐம்பது சிசி இறக்குமதி ரேஸ் பைக்கில் நூற்று நாற்பது கிலோ மீட்டர் வேகத்துக்கு அஜித் பைக்கில் பறக்கும் காட்சியை, ஹெலிகாப்டரில் பின்தொடர்ந்து படம்பிடித்திருக்கிறார்கள். இந்த பைக் ரேஸை படம்பிடிப்பதற்கென்றே ஆஸ்திரேலியாவிலிருந்து ரேஸிங் எக்ஸ்பர்ட்டுகளை வரவழைத்திருக்கிறார்கள்.

• சண்டைக்காட்சிகளை படமாக்கும் போது அஜித் டூப் போட மறுத்து விட்டதோடு பதினெட்டு மில்லி மீட்டர் தடிமன் கொண்ட கண்ணாடி ஜன்னல்களை கைமுட்டியால் அடித்து உடைத்திருக்கிறாராம்.

- ஸ்ரீ

# புதிய பிளான்!



**ரொ**ம்பவே குஷியாக இருக்கிறார் பிரஷாந்த். பின்னே இருக்காதா... திருமணமான பிறகு தொடர்ந்து புதுசு புதுசாகப் படங்கள் கமிட்டான வண்ணம் இருந்தால் யாருக்குத்தான் குஷியாக இருக்காது?

''அவங்களுக்கு ஷாப்பிங் அது இதுன்னு வெளில போறதில் இஷ்டமில்ல. நானும் வெளில சுத்தாத பார்ட்டி... மேட் ஃபார் ஈச் அதர்.

"அப்போ ஹனி மூன்...?"

"அட... அது இல்லாமலா... ஆஸ்திரேலியா போயிட்டு வந்தோம்'' என்றவர் சட்டென்று தன்னுடைய புதுப் படங்களுக்கு டிராக் மாறினார்.

''முதல்ல 'பெட்ரோல்...' ஹலோ, படம் பேரே அதாங்க. பார்க்கறதுக்கு தண்ணி மாதிரி, பத்த வச்சா நெருப்பு. அப்படிப் பட்ட இளைஞனோட கதை. ஏ.வெங்கடேஷ்தான் டைரக்டர். மிகப் பெரிய மிரட்டலா வரப்போகுது.

புலன் விசாரணை பார்ட் டூ. விஜயகாந்த் சார் செய்த மிரட்டல் சப்ஜெக்டோட செகண்ட் பார்ட். இதுல ஏ.எஸ்.பி கேரக்டர். மூணு புதுமுக ஹீரோயின்கள். இதை ஆர்.கே.செல்வமணி சாரோட அடுத்த பிளாக் பஸ்டர்னே சொல்லலாம்.

**'ஜா**ம்பவான்' என்னோட இன்னொரு படம். என்கூட நிலா மற்றும் மேக்னா நாயுடு நடிக்கிறாங்க. ஜாலியா சுத்திட்டு இருக்கற பையன் செயல்வீரனா மாறுவதுதான் கதை. தென்னவன் படத்தை டைரக்ட் பண்ணின நந்தகுமார்தான் டைரக்டர். பரத்வாஜ் மியூசிக்ல ஒவ்வொரு பாட்டும் அசத்தலா வந்திருக்கு. பேருக்கேத்த மாதிரியே படமும் இருக்கும்.


**ர**ன்வே. ஒரு விஷுவல் மிரட்டல். ஏகப்பட்ட செலவு பண்ணி எடுக்கப் போறோம். போட்டோ செஷனுக்கே ஷூட்டிங் ரேஞ்சுக்கு செலவாகியிருக்கு. குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக தியாகங்கள் செய்யும் கேரக்டர் எனக்கு. டைரக்டர் ரமேஷ்.

**அ**து சரி பிரஷாந்த். அது என்ன இப்போ புலன் விசாரணை 2 - தென்னவன் நந்தகுமார் - உளவுத்துறை ரமேஷ்னு உங்ககிட்ட கேப்டன் வாடை தூக்கலா இருக்கு. ஏதாவது ரகசிய பிளான் இருக்கா?

**- முத்து**

படம் : **ஸ்ரீஹரி**

ஸ்ரீ ராமஜெயம்



# ஸ்ரீ மாருதி டிராவல்ஸ்

**10/1, ராஜேஸ்வரி தெரு, பெரம்பூர், சென்னை — 600 011**
**தொலைபேசி எண் 25511786 மொபைல் : 9444035876**

(நாம சங்கீர்த்தனத்துடன் ஆன்மீக அன்பர்களை அழைத்துச் செல்லும் சுற்றுலா குழு அமைப்பாளர்கள்)

① **19.01.06** முதல் **2.2.06** வரை **சப்த ஜோதிர் லிங்கங்கள், பண்டரிபுரம், ஷீரடி, கொல்லாப்பூர் மஹாலக்ஷ்மி** ஆகியவை. கட்டணம் ரூ. **7400/-** (குறைந்த இருக்கைகள் உள்ளன. உடன் தொடர்பு கொள்ளவும்)

② **08.2.06** முதல் **14.2.06** வரை 5 நாட்கள் கொண்ட பஞ்ச ஆராம க்ஷேத்ரங்கள் (சிவஸ்தலம்) அமராவதி, பீமாவரம், சாமல கோட்டா, பால்கோலு, தாக்ஷாவரம் மற்றும் விஜயவாடா, கனகதுர்கா, பானக நரசிம்மர், சிம்ஹாசலம், பத்ராசலம், அன்னாவரம் ஆகிய கோவில்கள். இரயில், பஸ், சாப்பாடு, இரவு தங்குதல் உட்பட கட்டணம் நபர் ஒருவருக்கு ரூ. **2800/-**

③ **18.2.06** முதல் **25.2.06** வரை 7 நாட்கள் கொண்ட கர்நாடக மாநில யாத்திரை: மேல்கோட்டை நரசிம்மர், தலைகாவேரி, ஸ்ரீரங்கப்பட்டணம், சுப்ரமண்யா, தர்மஸ்தலா, உடுப்பி, மூகாம்பிகை, கடில் துர்கா பரமேஸ்வரி, கோகர்ணம், சிருங்கேரி, கலசா அன்னபூர்ணா, முருடேஸ்வரர், பேலூர், ஹளபேடு ஆகியவை இரயில், பஸ், இரவு தங்குதல் உட்பட கட்டணம் நபர் ஒருவருக்கு ரூ. **3400/-**

④ **28.2.06** முதல் **6.3.06** வரை 4 நாட்கள் கொண்ட நெல்லூர், ஸ்ரீசைலம், அஹோபிலம் மந்த்ராலயம், டிலக்ஸ் பஸ் கட்டணம், சாப்பாடு, இரவு தங்குதல் உட்பட கட்டணம் ரூ. **1650/-**

⑤ **20.3.06** முதல் **31.3.06** வரை 12 நாட்கள் கொண்ட காசி, கயா, அயோத்தியா, அலகாபாத், நைமிசாரண்யம்- கட்டணம் நபர் ஒருவருக்கு ரூ. **5150/-**

⑥ **20.3.06** முதல் **10.4.06** வரை 22 நாட்கள் கொண்ட காசி, கயா, அயோத்தியா, அலகாபாத், நைமிசாரண்யம் மற்றும் நேபாள பசுபதிநாத், முக்திநாத் சாளக்கிராம யாத்திரை

⑦ **27.3.06** முதல் **10.4.06** வரை 15 நாட்கள் நேபாள யாத்திரை, பசுபதிநாத், முக்திநாத் சாளக்கிராம யாத்திரை (முக்திநாத் யாத்திரை ஹெலிகாப்டர் மூலமாக கட்டணம் ரூ. **9000/-** தனி) நேபாளத்தில் ஜனகபுரி சிறப்பு தரிசனம்.

⑧ **31.3.06** முதல் **7.4.06** வரை 7 நாட்கள் முக்திநாத் சாளக்கிராம தரிசனம் விமானம் மற்றும் ஹெலிகாப்டர் மூலமாக - ஜூலை 2006ல் கைலாய - மானசரோவர் யாத்திரை

**V.சீனிவாசன்**
**(அமைப்பாளர்)**

பங்கு பெறுவீர்! பாக்கியவான்களாவீர்! மாருதி யாத்திரை பக்தியுடன் பகவத் அனுக்ரஹத்தைப் பெறுவதற்கே- பிருந்த சௌகர்யத்திற்கும், வசதிக்கும் அல்ல.

மேற்படி யாத்திரையின் கட்டணம் மற்றும் விபரம் அறிய சுய விலாசமிட்ட ரூ. 5/- ஸ்டாம்ப் கவருடன் விண்ணப்பிக்கவும்.

**Visit our Website: www.srimaruthitravels.net www.srimaruthitravels.com**

---

## சகல தோஷங்களும் நீங்க சுப மாங்கல்ய திருமாங்கல்யம் பூஜை!

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமியன்று **ஜோதிட சிம்மம் ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா** அவர்கள் யோக ஆஞ்சநேய சக்தி பீடத்தில் வரும் பிப்ரவரி 12.02.2006 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 4 மணி முதல் 7.30க்குள் சென்னையில் திருவிளக்கு சுமங்கல திருமாங்கல்ய பூஜை நடைபெறுகிறது.

ராகு, கேது மாங்கல்ய தோஷம் நீங்க, கால சர்ப்ப தோஷம், ராகுவுடன் கேது சேர்ந்த தோஷம், செவ்வாய் தோஷம், 7ம், 8ம் இடத்தில் பாவ கிரக தோஷம் போன்ற அனைத்து தோஷங்களும் நீங்கி, விரைவில் திருமணம் நடைபெற (ஆண்/பெண்) அனைவரும் திருமாங்கல்யம் சுப மாங்கல்ய பூஜையில் கலந்து கொள்வதற்கு ரூ.400/- மட்டும். பிரிந்த தம்பதியர் ஒன்று சேர, விவாகம் விரைவில் நடக்க, பொருட் செல்வம் மற்றும் கல்வி செல்வம் பெருக, குழந்தை பாக்கியம் பெற, ஸ்ரீவைபவ லக்ஷ்மி பூஜைக்கு ரூ.250/- மட்டும். கடன், வியாதி, தடைகள் நீங்க, நவக்கிரக தோஷங்கள் நீங்க, அமைதி பெருக சத்திய நாராயண பூஜைக்கு ரூ.250/- மட்டும். இத்துடன் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் சஹஸ்ரநாம பாராயணமும் நடைபெறும்.

திருவிளக்கு சுமாங்கல்ய பூஜையில் கலந்து கொள்ளும் அன்பர்களுக்கு பிரசாதமாக பூஜையில் வைக்கப்பட்ட தாலிக் கயிறு, சிறிய லக்ஷ்மி ஃபோட்டோ, மஞ்சள், குங்குமம், வளையல், பூ, அட்சதை, தாம்பூலம், சிறிய லக்ஷ்மி விளக்கு, ஜாக்கெட் பிட், பிரசாதமாக வழங்கப்படும். பூஜையில் கலந்து கொள்ளும் அன்பர்கள், தங்களுடைய நட்சத்திரம், பெயர், பிறந்த தேதி, ராசி, கோத்திரம், (என்ன தோஷம்) என்று தெளிவாக எழுதி அனுப்பினால், அதற்கேற்றாற்போல் மந்திரம், சொல்லி, பரிகாரம் செய்து, பூஜை நடைபெறும். நேரில் கலந்து கொள்ள முடியாதவர்களுக்கு தபால் மூலம் பிரசாதம் அனுப்பி வைக்கப்படும். சுமாங்கல்ய திருவிளக்கு பூஜையில் கலந்து கொள்ளும் ஆண் / பெண் அனைவருக்கும் மாங்கல்ய பாக்யம் பெற்று, தங்களுடைய பிரச்னைகள் அனைத்தும் நிவர்த்தி பெற்று, சகல செல்வங்களையும் பெற வேண்டும் என்பதே மேற்கூறிய மூன்று பூஜைகளின் நோக்கமாகும். அனைவரும் ஒன்று சேர்ந்து கூட்டுப் பிரார்த்தனை செய்வது நிச்சய பலனைத் தரும். ரூ.900/- கட்டி மூன்று பூஜைகளிலும் கலந்து கொள்ளும் அன்பர்களுக்கு திருமாங்கல்யம் சுபமுகூர்த்தம் மாத இதழ் 6 மாதங்களுக்கு அனுப்பி தருகின்றோம். இத்துடன் பூஜையில் பங்கேற்கும் அன்பர்களின் புகைப்படங்கள் அந்தந்த மாத இதழில் வெளியிடப்படும். (மணமகன்/மணமகள் ஜாதகங்களும் பெட்டி விளம்பரமாக வெளியிடப்படும்) மற்றும் **ஜோதிட சிம்மம் ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா** அவர்கள் கோகுலம் கதிர் இதழிலும், ஜெயா டீவியிலும் வியாழன் தோறும் 11.40 p.m **'இனிய இல்லம்'** நிகழ்ச்சியில் ஜோதிட சம்பந்தமான கேள்விகளுக்கு பதில் அளிக்கின்றார்.



பூஜைக் கட்டணத்தை DD/Cheque/MO 'Thirumangalyam Publication' என்ற பெயரில் எடுத்து கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**'THIRUMANGALYAM PUBLICATION'**

No:69, North Usman Road, T.Nagar, Chennai - 600 017
Ph: 28340663 Cell:9840557745. Email:thirumangalyam_chnnai@yahoo.com

# சபதம் 2006!


**புது வருடம் பிறந்தாலே தீர்மானமும் ஒன்று புதிதாகப் பிறக்கும். நம் பிரபலங்கள் சிலரிடம் நாம் கேட்டபோது (கனவில் தான்.. ஹி.. ஹி...) போட்டுடைத்தார்கள் தீர்மானத்தை!**

**குஷ்பு :** "முதலில் தமிலை நா உர்ப்டியா கத்துக்ணும். இனி தமில் நாட்டுப் பெண்கள் என்ன, ஆப்ரிக்கா, ஹவாய், சோமாலியா நாட்டு பொம்பளங்களை பத்திக் கூட கர்த்து தெர்விக்கல்ல. நா உண்டு என் ஜாக்கெட்... ஸாரி ஜாக்பாட் உண்டு. அன்னிக்குத் தமில் பெண்கள் கறுப்புன்னு தான் சொன்னேன், கற்பு அப்டி இப்படின்னு பேசவேயில்லை. கற்புன்னா என்னா?"

**விஜய்காந்த் :** மக்களுக்கு நல்லது செய்யணும்னு முருகன் இட்லி, ஜிகர்தண்டா எல்லாத்தையும் தியாகம் பண்ணிட்டு வந்தவன் இந்தத் தவசி.. இங்கே நா முன்னுக்கு வரக்கூடாதுன்னு நெனைக்கறவங்க ஒரு லச்சத்து பத்து பேரு. அரசியல்ல வந்து என்னாத்த கிளிக்கப் போறாருன்னு கெக்கலிக்கறவங்க நாப்பது லச்சத்து மூணு பேரு, தமிலு, தமிளனுக்காக என்ன செஞ்சான்னு கேட்டுக்கிட்டு ஒரு கோடியே இருபது பேரு. எங்கிட்டே எல்லா கணக்கும் இருக்கு. உறுதியா கண்கள் செவக்க ஒண்ணு சொல்றேன். புது வருச திர்மானம் மக்களுக்கு நல்லது செய்யணும். பம்பரம் விடற வேலைக்கு வேற ஆளப் பாருங்க.




**எஸ்.ஜே.சூர்யா :** இந்தப் புது வருடத்தில நா எடுக்கும் படத்தைப் பார்த்துவிட்டு சென்ஸார் அதிகாரிகளே, "ஸார், அப்படி இப்படி ஸீன் எதுவுமே இல்லையே, போராயிருக்கேன்னு" வெறுத்து என் மீது செல்போன் தூக்கியெறியற மாதிரி பண்றேனா இல்லையா பாருங்க... கட். என் புதுப் படத்தோட கதையே ரொம்ப வித்யாசமுங்க. ஹீரோவும் ஹீரோயினும் ஒருத்தருக்காக ஒருத்தர் லோலோன்னு அலையறதுதான். நா பொறந்து புண்யா வசன தொட்டில்ல இருக்கறச்சே மாட்டின ஐடியா இது. ஹீரோவும் ஹீரோயினும் டெஸ்ட் டியூபிலேயே லேபி விருந்து காணாம பிரிஞ்சு போயிட






நாங்க. 'லோலோ' ரிலீஸானவுடன் ரசிகர்களும் தியேட்டருக்கு இப்படித்தான் அலையப் போறாங்க.

**கமல் :** புது வருட தீர்மானம்... யா தட்ஸ் ரிஸொல்யூஷன் ரைட்? ம்ம்ம்... மருத நாயகத்தை எப்படியாவது முடிச்சுடணும். முத்தக் காட்சிக்கு ஜீலியா ராபர்ட்ஸ், அஞ்சலினா ஜோலி, ஜெலோ... இப்படி வெளிநாட்டுத் தாரகைகளை புக் பண்ணலாம்னு இருக்கேன். உலக வங்கிக்கு லோன் அப்ளை பண்ணியிருக்கேன். வெளிநாட்டு நடிகைகள் நடிச்சா கிருஷ்ணசாமி ஏதேனும் ஆர்ப்பாட்டம் பண்ணுவாரோன்னு... ஐ வாஸ் லிட்டில் வொரீட்.. பட் நௌ, அவரே போன் போட்டு "கமல் போட்டுத் தாக்குங்க.. சும்மா சேரன், தங்கரு சினிமால்லாம் பாத்து ரொம்ப வெறுத்துப் போயிட்டோம். என் ஆதரவு உங்களுக்கு..."ன்னு சொல்லிட்டாரு.



**வைரமுத்து :** கருவாச்சி பிரசவ எபிஸோட் எழுதினாலும் எழுதினேன் ஏகப்பட்ட பாராட்டுகள். லேடி டாக்டர்களிடமிருந்து 'எப்டி இப்படி தத்ரூபமா எழுதியிருக்கீங்க எங்களிடம் வரும் பெண்களுக்கே இது பொய் வலியா பிள்ளை வலியான்னு சொல்லத் தெரியல்ல. இப்டி புட்டு புட்டு வச்சிட்டீங்களே'ன்னு ரொம்ப பாராட்டிட்டாங்க. இனி பெண்களைப் பற்றி பரிபூரணமாகச் சொல்லும் 'இல்லறத்தில் இருவாச்சி' என்கிற இதிகாசம் வெகு சீக்கிரத்தில் வெளியாகும். 'ஒரு பெண் இடியாப்பம் செய்வது எப்படி, இஞ்சி ஊறுகாய் செய்வது எப்படி...' இப்படி நிறைய எழுதுவேன்.



**- எல்.எஸ்.**

# நாடகக்காரி

சென்ற ஆண்டில் சோழ நாட்டில் கடும் புயலுடன் சேர்ந்து வந்த பெருமழையைப் பற்றி நேயர்களுக்கு நினைவிருக்கலாம். சிலர் அதைக் 'கடவுளின் கருணை மழை' என்றனர். வேறு சிலர், "இப்படிப் பயங்கரமான புயலில் ஏறிக்கொண்டுதானா வர வேண்டும்? இனிய செந்தமிழையொத்த மெல்லிய தென்றல் காற்றிலே மிதந்து வரக்கூடாதா?" என்றனர். அவரவர்களுக்கு நேர்ந்த சௌகரிய - அசௌகரியங்களைப் பொறுத்து எதையும் முடிவு செய்வதுதான் மானிட இயற்கை. எனக்கு அச்சமயம் கடவுளின் கருணையின் பேரில் வந்த கோபம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. ஏனெனில், அக்கருணையின் காரணமாக நான் நள்ளிரவில் மாயவரத்துக்கும் சீர்காழிக்கும் நடுவில் அகப்பட்டுக்கொண்டு திண்டாடும்படி நேர்ந்தது.

கதையோ, கட்டுரையோ, விறுவிறுப்பாக ஓட வேண்டும் என்றால் அதை ரெயிலிலே ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்வதுண்டு. இந்தக் கதை என்னமோ ரெயிலிலேதான் ஆரம்பமாகிறது. அதிலும் ஸிலோன் போட்மெயிலில் ஆரம்பமாகிறது. ஆனாலும் என்ன பயன்? அதிவிரைவாகச் செல்ல வேண்டிய அந்த ரெயில் சீர்காழிக்கும் வைத்தீசுவரன் கோயிலுக்கும் நடுவில் சுமார் மூன்று மணி நேரம் ஸ்தம்பித்து நின்றுவிட்டது.

'ஸ்தம்பித்து நின்றது' என்றா சொன்னேன்? அர்த்தமில்லாத வழக்கச் சொற்கள் அப்படியாக நம்மை அடிமைப்படுத்தி விடுகின்றன: நான் ஏறியிருந்த போட்மெயில் முன்னாலும் போகாமல் பின்னாலும் போகாமல் நின்றதே தவிர ஸ்தம்பித்து நிற்கவில்லை. மணிக்கு எண்பது மைல் வேகத்தில் அடித்த புயற்காற்று அதைத் தாக்கிக் கொண்டிருக்கும்போது ரெயில் எப்படி ஸ்தம்பித்து நிற்க முடியும்? பூமிக்குள்ளே நெடுந்தூரம் வேர் விட்டு நிலை பெற்றிருந்த பெரிய பெரிய மரங்கள் எல்லாம் 'தடால் தடால்' என்று கீழே விழுந்துகொண்டிருந்தபோது ரெயில் மட்டும் எப்படி அசையாமல் இருக்க முடியும்? ரெயில் இப்படியும் அப்படியும் ஆடிக்கொண்டுதான் இருந்தது. ரெயிலுக்குள் இருந்தவர்களின் உயிர்களும் ஊசலாடிக் கொண்டிருந்தன. இப்படி மூன்று யுகம் போலக்கழிந்த மூன்று மணி நேரத்துக்குப் பிறகு ரெயில் பின்னோக்கிச் செல்லத் தொடங்கியது. மிக மிக மெதுவாக ஊர்ந்து சென்று காலை ஐந்து மணிக்கு மாயவரம் ரெயில் நிலையத்தை அடைந்தது.

சீர்காழிக்கும் கொள்ளிடத்துக்கும் நடுவில் ரெயில் பாதை மிகவும் சேதமாகி விட்டபடியால், இனி மூன்று நாள் அந்தப் பக்கம் ரெயில் போவதற்கில்லையென்றும், சென்னைக்குப் போகிறவர்கள் திருச்சிக்கு திரும்பிப் போய் அங்கிருந்து விருத்தாசலம் வழியாகப் போக வேண்டும் என்றும் மாயவரத்தில் சொன்னார்கள். இதனால் எனக்கு ஏற்பட்ட மனச்சோர்வுக்கு அளவில்லை. ஆண்டவன் கருணை இப்படியா நம்மைச் சோதிக்க வேண்டும் என்று கிலேசப்பட்டுக் கொண்டு திருச்சிக்குத் திரும்பிப்போன முதல் ரெயிலில் ஏறினேன்.

அற்ப அறிவு படைத்தவர்களாகிய மானிடர்கள் நன்மை என்று குதூகலிக்கிற காரியங்கள் பெருந்தீமையாக முடிகின்றன. அவர்கள் தீமை என்று நினைத்து வருந்தும்



**அமரர் கல்கி**

காரியங்களிலிருந்து எதிர்பாராத நன்மைகள் விளைகின்றன. ஏற்கெனவே பலமுறை இந்த உண்மையை வாழ்க்கை அனுபவத்தில் கண்டிருந்தும் அச்சமயத்தில் மறந்து போனேன். அய்யம்பேட்டை ரயில் நிலையத்தை அடைந்தபோதுதான் இருள் நீங்கி ஒளி உண்டாயிற்று. அய்யம்பேட்டை கந்தப்பபிள்ளையும் அவருடைய தவுல் வாத்தியமும் என் வண்டியில் ஏறி அமர்ந்ததும், அவருடைய தவுல் வாத்தியத்தின் இடி முழக்க நாதத்தைப் போலவே, இறைவன் கருணையின் உண்மை இயல்பு என் உள்ளத்தில் வெடித்துக் கொண்டு உதயமாயிற்று.

"வருக! வருக! அகில பூமண்டல தவுல் வாத்திய ஏக சக்ராதிபதியே! வருக!" என்று முகமன் கூறி கந்தப்ப பிள்ளையை வரவேற்றேன்.

''திருவழுந்தூர் சிவக்கொழுந்து', 'வீணை பவானி' போன்ற அருமையான கதைகளைச் சொன்னவரை இம்மாதிரி சந்தர்ப்பங்களில் பார்த்தால், உற்சாகம் பீறிக்கொண்டு கிளம்புவதற்குக் கேட்பானேன்! - ரெயிலும் உற்சாகமாக ஊதிக் கொண்டு கிளம்பியது.

அய்யம்பேட்டை கந்தப்பனும் சென்னைக்குத்தான் வருகிறார் என்று அறிந்ததும் என் மனச் சோர்வெல்லாம் பறந்துவிட்டது. நான் சீர்காழி வரையில் போய்த் திண்டாடிவிட்டுத் திரும்பியதைப் பற்றிச் சொன்னேன். அவர் புயலினால் அந்தப் பக்கத்திற்கு, விளைந்த சேதங்களைப் பற்றிச் சொன்னார். பிறகு,

"இன்னல் கூட்டி இன்பம் ஊட்டி இந்திர ஜால வித்தை காட்டி"

என்று முனகும் குரலில் பாடி நிரவல் செய்யத் தொடங்கினார். திடீரென்று நிரவலை நிறுத்தி "ஆமாம்; ஆண்டவனுக்கு இதெல்லாம் இந்திர ஜால வித்தை; அநுபவிக்கிற நமக்கோ சொல்ல முடியாத அவஸ்தை!" என்று சொன்னார்.

ஏதோ ஒரு கதையை மனத்தில் வைத்துக்கொண்டுதான் அவர் இப்படிப் பேசுகிறார் என்று ஊகித்துக்கொண்டேன். (அய்யம்பேட்டை கந்தப்பன் தம் வாழ்க்கையில் கண்டு கேட்ட வரலாற்றைத்தான் சொல்லுவார். ஆனால் அந்த வரலாறு கதையைக் காட்டிலும் அதிசயமாக இருப்பது வழக்கம். அதனாலேயே கதை என்று குறிப்பிடுகிறேன்.)

அவருடைய மனத்தில் உள்ளதை எப்படி வெளியே கொண்டு வருவது என்று யோசித்தேன்.

"பிள்ளைவாள்! நீங்கள் முன்னொரு தடவை சொன்ன 'வீணை பவானி' கதையை ரேடியோவில் நாடகமாகப் போட்டார்களே கேட்டீர்களா?'' என்றேன்.

"உலக வாழ்க்கையே நாடகம். அதிலே சிலர் அரங்க மேடையில் ஏறி நாடகம் ஆடுகிறார்கள். அப்படி ஆடும் நாடகக்காரர்கள் - நாடகக்காரிகள் வாழ்க்கையிலும் எத்தனையோ நாடகங்கள்!'' என்றார் கந்தப்பன்.

''எத்தனையோ நாடகக்காரர்கள்



# கந்தப்ப பிள்ளை சொன்ன கதைகள் - 10

நாடகக்காரிகளை உங்களுக்குத் தெரிந்திருக்கும்'' என்றேன்.

"பாலாமணி என்ற பிரசித்தமான நாடகக்காரியைப் பற்றி ஐயா கேள்விப் பட்டிருப்பாரே?'' என்றார் கந்தப்பப் பிள்ளை.

"கேள்விப்பட்டிருக்கிறேன்; ஆனால் பார்த்ததில்லை.''

"ஆனால் சின்ன பாலாமணி என்று கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள்!''

"கேள்விப்பட்டதில்லை, அப்படி ஒரு நாடகக்காரி இருந்தாளா, என்ன?''

"ஆமாம்; இரண்டு வருஷம் மிகப் பிரசித்தியாக இருந்தாள். பிறகு தெய்வத்துக்கே பொறுக்காமல் போய்விட்டது! ஆனால் தெய்வத்தைச் சொல்லி என்ன பயன்? மனிதர்களுடைய அறிவீனத்துக்குத் தெய்வம் என்ன செய்யும்?''

"மனிதர்களை ஏன் இவ்வளவு மூடர்களாகவும் துஷ்டர்களாகவும் கடவுள் படைக்கிறார் என்று அவர் பேரில் குற்றம் சொல்லலாம் அல்லவா? - அது போகட்டும். யாரோ சின்ன பாலாமணி என்கிறீர்களே? அது யார்? உங்களுக்குத் தெரியுமா?''

"ஏழு வயது முதல் எடுத்து வளர்த்தவன் ஆயிற்றே? எனக்குத் தெரியாமல் எப்படியிருக்கும்?'' என்றார் கந்தப்பபிள்ளை.

இன்னும் சில கேள்விகள் அவரைக் கேட்டுத் தூண்டிய பிறகு கந்தப்பன் கதையைக் கூறலானார்.

கும்பகோணத்தில் திருமருகல் நாதஸ்வரக்காரரின் கச்சேரிக்கு நான் தவுல் வாசித்துக்கொண்டிருந்தபோது முதன்முதலில் அந்தக் குழந்தையைப் பார்த்தேன். விஜயதசமித் திருநாள் அன்று ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி சூர சம்ஹாரத்துக்காக வீதிவலம் புறப்பட்டுப் போய்க் கொண்டிருந்தார். ஒவ்வொரு கோயிலிலிருந்



தும் அன்றைக்குச் சுவாமி புறப்பாடு நடப்பது வழக்கம். ஆனாலும் சின்னக் கடைத் தெரு வியாபாரிகள் அந்தக் கடைத் தெருவில் இருந்த சிறிய கோயிலில் நடத்தி வைத்த உற்வசந்தான் ஊரிலே பிரமாதப் படும். நவராத்திரி ஒன்பது நாளும் உற்சவம் நடத்துவார்கள். ஒவ்வொரு தினமும் சங்கீதக் கச்சேரிகளும் நாதஸ்வரக் கச்சேரிகளும் நடைபெறும். விஜயதசமிக்கு ஒவ்வொரு வருஷமும் நமது தமிழ்நாட்டிலே மிகப் பிரசித்தியடைந்த நாதஸ்வரக் கோஷ்டியைப் பல மாதங்களுக்கு முன்பே ஏற்பாடு செய்து விடுவார்கள். சின்னக் கடைத் தெரு வியாபாரிகள் அழைத்து விட்டால், நாதஸ்வர வித்வான்களும் அதை ஒரு பெருமையாகக் கருதுவார்கள். வேறு யார் அதிகப் பணம் கொடுத்துக் கூப்பிட்டாலும் போக மாட்டார்கள். கடைத்தெரு முழுவதும் அன்று அமோகமாக அலங்கரிக்கப்பட்டுக் காட்சி அளிக்கும். பல இடங்களில் பந்தல் போட்டிருப்பார்கள். ஒவ்வொரு பந்தலிலும் நாதஸ்வரக் கோஷ்டியார் நின்று வாசிக்க வேண்டும். அந்நாளில் கும்பகோணத்தாரின் சங்கீத ரஸனைக்கு இணையே கிடையாது போங்கள்! எவ்வளவோ அற்புதமாக முன்னலங்காரமும் பின்னலங்காரமும் செய்து முருகனை எழுந்தருளப் பண்ணுவார்கள். ஆனாலும், சுவாமி தரிசனம் செய்யும் கூட்டத்தைக் காட்டிலும் நாதஸ்வர கோஷ்டியைச் சூழ்ந்து நிற்கும் ஜனக் கூட்டந்தான் அதிகமாயிருக்கும்.

அன்றைக்கு இவ்வாறு ஒவ்வொரு பந்தலிலும் நின்று நின்று நாதஸ்வரக் கச்சேரி நடந்துகொண்டிருந்தபோது, கச்சேரியைத் தொடர்ந்து வந்து



கேட்டுக் கொண்டிருந்தவர்களில் ஒரு சிறிய பெண் குழந்தையைப் பார்த்தேன். அந்த சிறு குழந்தை கூட்டத்தில் எப்படியோ புகுந்து அடித்துக் கொண்டு வந்து எல்லாருக்கும் முன்னால் வந்து நின்றது. இது என் கவனத்தைக் கவர்ந்தது. நாதஸ்வர இசையைக் கேட்டுக் கொண்டு, அந்தக் குழந்தை சில சமயம் பூரித்த மலர்ந்த முகத்துடனே காணப்படும். சில சமயம் தவுல் வாத்தியத்தில் கவனம் செலுத்திக் கையினால் தாளம் போட்டுக் கொண்டிருக்கும். இன்னும் சில சமயம் மகுடி வாத்தியத்தைக் கேட்டு பாம்பு படம் எடுத்து ஆடுமே, அம்மாதிரி கண்களைப் பாதி மூடிக்கொண்டு, தலையை இலேசாக ஆட்டிக் கொண்டு நிற்கும். சில சமயங்களில் அதன் உடம்பு முழுவதுமே ஆடும். தாமரைக் குளத்தில் இலேசாகக் காற்றடிக்கும்போது பாதி மலர்ந்தும் மலராமலும் இருக்கும் தாமரை புஷ்பம் அதன் நீண்டு உயர்ந்த தண்டுடன் ஆடுமே, அந்தக் காட்சி எனக்கு நினைவுக்கு வரும். திருமருகல் நாதஸ்வரக்காரர் அன்றைக்கு அபாரமாகத்தான் வாசித்துக் கொண்டிருந்தார். ஆனால் என்னுடைய நினைவு முழுதும் அந்தச் சிறு பெண் குழந்தையின் பேரிலேயே இருந்தது. ஒவ்வொரு பந்தலுக்கும் நாதஸ்வர கோஷ்டி வந்து நின்றவுடனே, நான் அந்தக் குழந்தை வந்துவிட்டதா என்று பார்த்துக் கொண்டிருப்பேன். கூட்டத்தை விலக்கிக்கொண்டு, அந்தக் குழந்தை முன்னால் வந்து நின்ற பிறகுதான் எனக்கு என்னுடைய வாசிப்பில் கவனம் செல்லும். அப்போது அந்தப் பெண்ணின் பரவசமான முகத் தோற்றத்தைப் பார்த்துக்கொண்டு நான் வாசிப்பேன்.

ஊர்வலம் முடிந்து சுப்பிரமணியசுவாமி சூரசம்ஹாரம் செய்யும் இடத்துக்கு வந்து சேர்ந்துவிட்ட பிறகு, நான் என் தவுல் வாத்தியத்தை சிஷ்யப் பிள்ளையிடம் எடுத்துக்கொடுத்துவிட்டு, அந்தக் குழந்தையை அருகில் அழைத்து, "உன் பெயர் என்ன, குழந்தை?'' என்று விசாரித்தேன்.

"என் பெயர் நீலா மணி'' என்றது அந்தக் குழந்தை. "உன் அப்பா, அம்மா யார்?'' என்று கேட்டேன். "அப்பா இல்லை. அம்மா மட்டுந்தான் இருக்கிறாள். எங்கள் வீட்டுக்கு வருகிறீர்களா, மாமா! அழைத்துப் போகிறேன்! அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. நீங்கள் வந்து பார்த்தால் ரொம்ப சந்தோஷப்படுவாள்!'' என்றது அந்தக் குழந்தை.

''ஆகட்டும், அம்மா, வருகிறேன்'' என்று வாக்குக் கொடுத்துவிட்டேன். அப்படிப்பட்ட சங்கீத ரஸனையுள்ள குழந்தையைப் பெற்ற தாயாரைப் பார்க்க எனக்கும் ஆவல் உண்டாகி இருந்தது.

என்னுடைய பதிலைக் கேட்டுவிட்டு அந்தக் குழந்தை குதூகலமாகக் குதித்துக் கொண்டு ஓடிப் போய்விட்டது.

பிறகு பக்கத்திலிருந்தவர்களை விசாரித்ததில் நான் 'வருகிறேன்' என்று வாக்குக் கொடுத்தது அவ்வளவு உசிதமான காரியம் அல்ல என்று தெரிந்தது.

அந்தக் குழந்தையின் தாயாருக்கு மரகதமணி என்று பெயர். சங்கீதத்தில் கொஞ்சம் பயிற்சி உண்டு. சில காலம் கச்சேரிகள் கூடச் செய்து கொண்டிருந்தாள். தனிகர் ஒருவர் சிநேகமானார். கலியாணம் செய்து கொண்ட மனைவியைப் போலவே அவளை வைத்துப் பராமரிப்பதாகச் சொன்னார். மரகதமணி சங்கீதக் கச்சேரி செய்வதை விட்டுவிட்டாள். சில காலம் அந்யோந்யமாகத்தான் இருந்தார்கள்.



இந்த மாதிரிச் சிநேகமெல்லாம் அநேகமாக எப்படி முடியும் என்பது தெரிந்த விஷயமேயல்லவா? சில வருஷங்களுக்கெல்லாம் ஏதோ காரணத்தினால் ஒருவருக்கொருவர் பிடிக்காமல் போய்விட்டது. தனிகர் மரகதமணியின் வீட்டுக்கு வருவதை நிறுத்தி விட்டார். பெரிய ஆஸ்தி படைத்த செல்வர். அந்த பெரிய ஆஸ்தியிலிருந்து ஏதோ கொஞ்சம் மரகத மணிக்கு எழுதி வைத்து விடுவதாகச் சொல்லிக் கொண்டிருந்தார். சொல்லிக் கொண்டிருந்தாரே தவிர, காரியத்தில் நடை பெறவில்லை. கடைசியாக அவர் இம்மாதிரித்

தொல்லைகளுக்கு இடமில்லாத மறு உலகத்துக்குப் போய்விட்டார்.

மரகதமணி தன் சின்னஞ்சிறு குழந்தையுடன் வறுமை வாழ்க்கை நடத்தி வந்தாள். எப்படியோ காலம் போய்க்கொண்டிருந்தது. மனக்கவலையினால் உடம்பிலும் நோய் வந்துவிட்டது. படுத்த படுக்கையாகிவிட்டாள். தாயும் பெண்ணும் இப்போது நிராதரவாக இருக்கிறார்கள்.

இந்த வேதனை தரும் வரலாற்றை அறிந்தபிறகு "இப்போது அவர்களுக்கு ஜீவனம் எப்படித்தான் நடக்கிறது?" என்று கேட்டேன்.

"தாயாரிடம் இருந்த நகை நட்டுக்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்துப்போய் வருகின்றன. அந்தக் குழந்தைக்கு நல்ல குரல், எங்கேயாவது பாட்டுக் கச்சேரி, நாதஸ்வரக் கச்சேரி என்றால் போய்விடும். கேட்ட பாட்டுக்களை பாடம் பண்ணிவிடும். ரெயிலிலே ஏறிப் பாட்டுப்பாடி பிச்சை எடுத்துத் தினம் எட்டணா பத்தணா சம்பாதித்துக் கொண்டு வரும். அந்தக் குழந்தையின் குரல் இனிமையையும் முகக் களையையும் பார்த்து ரெயில் அதிகாரிகள் சும்மா விட்டுவிடுவார்கள். சில சமயம் இம்மாதிரி உற்சவ காலங்களில் முச்சந்திகளில் நின்று பாட்டுப் பாடுவதும் உண்டு. சங்கீத ரஸனையும் தாராள உள்ளமும் படைத்தவர்கள் ஓர் அணா - இரண்டு அணாகூட கொடுத்து விட்டுப் போவார்கள்" என்று பதில் கிடைத்தது.

இதையெல்லாம் கேட்டு எனக்கு மிகவும் வருத்தமாயிருந்தது. அந்தக் குழந்தையின் நிலைமை இப்படியா இருக்க வேண்டுமென்று இரங்கினேன். ஆனாலும், இம்மாதிரி இடங்களுக்கு உதவி செய்வதாக எண்ணிப் போனாலும் ஏதாவது சங்கடத்தில் வந்து முடியும் என்று நினைத்து அங்கே போகும் எண்ணத்தை விட்டுவிட்டேன். உள்ளூரிலும் சரி வெளியூரிலும் சரி, கடவுள் அருளால் எனக்கு நல்ல அந்தஸ்து ஏற்பட்டிருந்தது. கௌரவம் வாய்ந்த பெரிய மனிதர்களின் சிநேகமெல்லாம் கிடைத்திருக்கிறது. அசட்டுத்தனமாக எங்கேயாவது போய்க் காலை விட்டுக் கொண்டு வீண் தொல்லைக்கு ஆளாகக்கூடாது என்று மனத்தை உறுதிப்படுத்திக் கொண்டேன்.


இந்த உறுதியில் நிலைத்திருந்தேனானால் பின்னால் எவ்வளவோ சங்கடங்களுக்கு உள்ளாகாமல் தப்பித்துக் கொண்டிருப்பேன். அந்தச் சின்னஞ் சிறு குழந்தை ஒரு நிமிஷத்தில் என் மன உறுதியைக் குலைத்துவிட்டது. நான் தங்கியிருந்த ஜாகைக்கே அது வந்துவிட்டது. "மாமா! எங்கள் வீட்டுக்கு வருவதாகச் சொன்னீர்களே, எப்போது வருகிறீர்கள்? அம்மா ரொம்பச் சந்தோஷப்பட்டாள். கேட்டு வரச் சொன்னார்கள்!" என்றது.



அந்தக் குழந்தையின் உள்ளத்தைப் புண்படுத்த நான் விரும்பவில்லை. "அதற்கென்ன, சாயந்திரம் வருகிறேன் குழந்தை!" என்றேன். பக்கத்திலே இருந்த இரண்டொருவர் சிரித்ததைக் கேட்டதும் எனக்கு முனைப்பு அதிகமாகிவிட்டது. என் சுபாவந்தான் ஐயாவுக்குத் தெரியுமே? நல்லது, கெட்டது என்று என் பகுத்தறிவுக்குப் பட்டபடிதான் செய்வேனே தவிர, நாலு பேர் ஏதாவது சொல்லி விடுவார்களே என்று பயந்து எதுவும் செய்ய மாட்டேன். ஊருக்குப் பால் குடிக்கிற வழக்கமே என்னிடம் கிடையாது. யாராவது வம்பு பேசுகிறார்கள். அவதூறு சொல்கிறார்கள் என்று அறிந்தால், அந்தக் காரியத்தில் எனக்கு இன்னும் அதிக ஊக்கம் உண்டாகிவிடும்.

பக்கத்திலிருந்தவர்களின் சிரிப்பையும் அதைக் கேட்டு குழந்தையின் முகத்தில் தோன்றிய ஏமாற்றத்தையும் பார்த்ததும், "சாயங்கலாம் என்ன? இப்போதே உன்னுடன் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு எழுந்து போனேன்.

(தொடரும்)



• டிஸ்டிராக்டர் பொருத்தப்படுகிறது

# புதிய எலும்பு; அழகிய முகம்!

உலகில் பிறக்கும் குழந்தைகளில் பதினொரு நிமிடங்களுக்கு ஒரு குழந்தை உதடு பிளவு, குன்றிய தாடை, அண்ணப் பிளவு போன்ற முகவளர்ச்சிக் குறைபாடுகளோடு பிறக்கிறது என்கிறது மருத்துவ ஆராய்ச்சி.

வெளிநாட்டில் மட்டுமே சாத்தியம் என்றிருந்த முகச் சீரமைப்புச் சிகிச்சை இப்பொழுது இந்தியாவிலும் வெற்றிகரமாக நடத்தப்படுகின்றது. முகக் குறைபாடுகள் பற்றிய பல சர்வதேச மாநாடுகளில் கலந்து விரிவுரையாற்றியுள்ள டாக்டர் எஸ்.எம். பாலாஜி முகச் சீரமைப்புத் துறையில் கையாளப்படும் அதிநவீன சிகிச்சை முறையான எலும்பு டிஸ்டிராக்டர் பற்றிக் கூறுகிறார்.



• சிகிச்சைக்கு முன்...



• சிகிச்சைக்குப் பின்...

டிஸ்டிராக்டர் எனும் புதிய அறுவை சிகிச்சை முறை மருத்துவ உலகுக்கு முகக் குறைபாடுகளை நீக்கும் வழிமுறைகளை அளித்துள்ளது. வாயினுள் பொருத்தப்படும் சில வகையான டிஸ்டிராக்டர் கருவிகள் முதன் முதலில் பிரான்சு நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டு பின்னர் இதர நாடுகளுக்கு அறிமுகமானது.

முகக் குறைபாடுகளில் பல வகைகள் உள்ளன. தாடை மூட்டு நோய், கபால எலும்புக் குறைபாடு, கீழ் தாடை எலும்புகளின் குறை வளர்ச்சி, உதிர்ந்த பற்கள் வளராமை... இதுபோன்ற குறைபாடுகளால் அவலட்சணமான முக அமைப்பு சிலருக்கு நேர்ந்து விடுகிறது.

இந்தக் குறைபாடுகளுக்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. தாடை மற்றும் அண்ணப் பிளவு, தாடை மூட்டு நோயினால் குன்றிய கீழ்த்தாடை, பிறவிக் குறைபாட்டினால் குன்றிய தாடை எலும்புகள்... போன்ற வளர்ச்சிக் குறைபாடுகள் கொண்ட எலும்புகளில் டிஸ்டிராக்டர் கருவியைப் பொருத்தித் தூண்டும்போது அது எலும்புகளின் வளரும் திறனை அதிகரித்து குறைகளை நீக்குகிறது.

உடைந்த எலும்பின் இரு பாகங்களை சற்று விலக்கி வைக்கும்போது அதனிடையே எலும்பு உருவாகி அந்த இரண்டு பாகங்களும் ஒன்றாக இணைந்து விடுகின்றன. இதை ஆதாரமாகக் கொண்டு செய்யப்படும் சிகிச்சை முறைதான் டிஸ்டிராக்டர் சிகிச்சை.

டாக்டர் எஸ்.எம்.பாலாஜி



டிஸ்டிராக்டர் என்பது எலும்பில் பொருத்தப்படும் ஒரு கருவி. உடைந்து போன எலும்புத் துண்டுகளுக்கு நடுவில் இந்தக் கருவியைப் பொருத்தி திருகினால் உடைந்த பாகங்கள் சற்று விலகி விடும். இந்த இடைவெளியில் புதிய எலும்புகள்






• கோணவாய்... • சீராய்...

உருவாகி வளர்ந்து ஒன்றுடன் ஒன்று இணையும். இதை மேலும் திருகத் திருக எலும்பு வளர்ச்சி ஊக்குவிக்கப்பட்டு எலும்பு பாகங்கள் விரிவடைந்து கொண்டே வரும்.


முக எலும்புகளின் வளர்ச்சி மற்றும் அமைப்புகள் பாதிக்கப்பட்டுள்ள பகுதியில் ஒரு சிறிய அறுவை சிகிச்சை மூலம் இடைவெளியை உண்டாக்கி டிஸ்டிராக்டர் கருவியைப் பொருத்தி விட்டால் போதும். எலும்பு வளர்ச்சி ஏற்பட்டு குறைபாடு நீங்கும்.

நவீன டிஸ்டிராக்டர் கருவியை உபயோகிக்கும் முன்பு நோயாளியின் உடல் நிலை, குறைபாட்டின் தீவிரம், எலும்பின் வளரும் திறன், நோயாளியின் மனப் பக்குவம் போன்றவற்றை பரிசீலிக்க வேண்டும். அறுவை சிகிச்சையின் பொழுது வாயினுள் டிஸ்டிராக்டர் பொருத்த வேண்டிய இடத்தைக் குறித்துக் கொண்டு எலும்பை வெட்டும் உளி போன்ற கருவியால் தாடையில் மெலிதாகக் கோடிட்டுக் கொள்ள வேண்டும். பின்பு டிஸ்டிராக்டரை பொருத்தி கோடிட்ட இடத்தில் ஆழமாக வெட்டி எலும்பைப் பிரிக்க வேண்டும். இரு துண்டாக்கப்பட்ட எலும்பின் பாகங்களை டிஸ்டிராக்டர் கருவியிலுள்ள திருகாணிகளால் திடமாக இணைத்து வைக்க வேண்டும். சில நாட்களில் புதிய எலும்பு முளைத்து, முகத்தில் புதிய அழகை, பரிணாமத்தை உண்டாக்கும். தேவையான எலும்பு வளர்ந்தவுடன் அந்த எலும்பை நிலை நிறுத்த சிறிது காலம் கருவியை அப்படியே வைத்திருப்பார்கள். பின்பு அதை நீக்கி விடுவார்கள்.

முன்பெல்லாம் 'எலும்புப் பதியம்' முறையில் விலா அல்லது தொடை, மண்டை ஓடு போன்ற ஏதேனும் ஓரிடத்திலிருந்து எலும்பை வெட்டி எடுத்து, எலும்புக் குறைபாடு உள்ள இடத்தில் பதியம் செய்யப்படும். ஆனால், டிஸ்டிராக்டர் முறையில் அத்தகைய சிரமம் எதுவுமில்லாமல், டிஸ்டிராக்டர் கருவி மூலமே எலும்பு வளர்ச்சி ஏற்பட்டு விடும்.



• எடுப்பான பல்...



... அழகானது

டிஸ்டிராக்டர் கருவியைப் பொருத்தவும் அகற்றவும் எளிமையான அறுவைச் சிகிச்சைகளே மேற்கொள்ளப் படுகின்றன. இக் கருவியின் மூலம் சிகிச்சை பெறும்போது எலும்பு வளர்ச்சியடைவதற்காக நேரம் ஒதுக்கிக் காத்திருக்கவோ மருத்துவமனையில் தங்கியிருக்கவோ தேவையில்லை.

டிஸ்டிராக்டர் திருகுகளை மருத்துவர் சொல்லிக் கொடுத்தபடி திருகிக் கொண்டு நமது வேலைகளைக் கவனிக்கலாம்.

தாடையும் உதடமைப்பும் நேராகி விட்டால், முகமே அழகாய் மாறி தன்னம்பிக்கையும் மகிழ்ச்சியும் மலரும்!" என்கிறார் டாக்டர் பாலாஜி.

• எழில்

ஜெட் ஏர் வேஸ், சென்னையிலிருந்து, சிங்கப்பூருக்கு, தினசரி விமான சேவையை அண்மையில் துவக்கியது. முதல் நாள் விமானத்தில், சென்னையிலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட பத்திரிகையாளர்களுடன், சென்னை பள்ளிக்கூடங்களில் படிக்கும் ஆறு சாதனைச் சிறுவர், சிறுமியரும் பயணம் செய்தனர். சிங்கப்பூர் ஜனாதிபதி என்.ஆர். நாதனை, சாதனை வாண்டுகள் சந்தித்து உரையாட சிங்கப்பூர் சுற்றுலா கழகம் ஏற்பாடு செய்திருந்தது.

சிவநரேன் சீனிவாசன் (கால்ஃப்), ஆர்த்தி (ஐஸ் ஸ்கேட்டிங்), நர்மதா (டேபிள் டென்னிஸ்), வெங்கடேஸ்வரன், சரத் (நீச்சல்) அக்ஷய் (சிங்கப்பூரின் ராபின்ஸ் இன்ஸ்டிடியூட்டில் நாலு வருடம், ஸ்காலர்ஷிப்பில் படிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர்) என்று ஆறு பேரும், ஜனாதிபதிக்கு அளிப்பதற்காக சென்னையிலிருந்து தனித் தனியே பரிசுப் பொருட்களை எடுத்துச் சென்றிருந்தார்

சிஷ்யா பள்ளியில் படிக்கும் எட்டு வயது சிவநரேன், நாலு வயதில் கால்ஃப் விளையாடக் கற்றுக் கொண்டவன். "சிங்கப்பூர் ஜனாதிபதி, 'கால்ஃப் ஸ்டிக்கின் உயரம் கூட நீ இருக்க மாட்டாய் போல இருக்கிறதே!' என்று சிரித்தபடி என்னைக் கேட்டார். 'எனக்கு ஏற்றபடி, பிரத்யேகமாக ஒரு கால்ஃப் ஸ்டிக்கை அமெரிக்காவிலிருந்து வரவழைத்து நான் பயன்படுத்துகிறேன்' என்றேன். சிங்கப்பூர் ஜனாதிபதி உருவத்தை ஒரு கண்ணாடியில் வரைந்து, அவருக்குப் பரிசளித்தேன். படத்தைப் பார்த்துவிட்டு, 'வாவ்! ரொம்ப நன்றாக வரைந்திருக்கிறாயே!' என்று பாராட்டினார். தொடர்ந்து, கால்ஃப் விளையாட்டுப் பற்றி என்னோடு நிறையப் பேசினார்" என்கிறான் சிவநரேன்.

சரத் மற்றும் வெங்கடேஸ்வரனிடம்



• ஆட்டோகிராஃப் வேட்டை


"நீங்கள் நீச்சலில் எந்தப் பிரிவில் சாம்பியன்? உங்கள் ரெக்கார்டு என்ன? தினம் எவ்வளவு நேரம், எங்கே பயிற்சி செய்வீர்கள்?" என்றெல்லாம் கேட்டுக் கொண்ட ஜனாதிபதி, சில விநாடிகள் வித்தியாசத்தில், கடந்த ஒலிம்பிக்கில் பதக்கத்தை இழந்த சிங்கப்பூர் நீச்சல் வீரரைப் பற்றியும் சொன்னார். "இந்தியா சார்பில், உலக அளவிலான போட்டிகளில் கலந்துகொண்டு ஜெயிப்பது எங்கள் லட்சியம்" என்று இவர்கள்

# கண்டோம் நாதனை!

சொன்னபோது, ஜனாதிபதி நாதன் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

டேபிள் டென்னிஸ் சாம்பியனான நர்மதா, "உன் பேரில் இந்தியாவில் ஒரு நதி இருக்கிறதே! தெரியுமா?' என்று கேட்டார்.

'சிங்கப்பூர் விஸிட் எப்படி இருக்கிறது?' என்ற அவரது கேள்விக்கு, 'ஜாலியாக ஊர் சுற்றுவதற்காக சிங்கப்பூருக்கு வந்ததில் எனக்கு மகிழ்ச்சி. போட்டிகளில் பங்கேற்பதற்காகவும், சிங்கப்பூருக்கு ஒருநாள் நான் நிச்சயம் வருவேன்!' என்றபோது, 'கடுமையாகப் பயிற்சி செய்! தீவிரமாகக் கவனம் செலுத்து; சிங்கப்பூருக்கு கண்டிப்பாக வரலாம்! ஆல் தி பெஸ்ட்!' சொன்னவர் ஜனாதிபதி" என்று பூரிப்புடன் கூறுகிறார்.



* சாதனை டீம்...

ஆர்த்தி ஒரு ஐஸ் ஸ்கேட்டிங் சாம்பியன். "நீ ஐஸ் ஸ்கேட்டிங் சாம்பியனா? சென்னையில் ஐஸ் ஸ்கேட்டிங் பழக வசதி இருக்கிறதா?" என்று என்னிடம் சிங்கப்பூர் ஜனாதிபதி கேட்டார். "சென்னையில் ஐஸ் ஸ்கேட்டிங் ரிங் இல்லாததால், மாதா மாதம் டெல்லி சென்று அங்கே பயிற்சி செய்கிறேன்" என்றேன். ஊர் விட்டு ஊர் சென்று பயிற்சி செய்து, பல்வேறு போட்டிகளிலும் கலந்துகொண்டு, வெற்றி பெற்றதற்காக என்னைப் பாராட்டினார்.

சிங்கப்பூரில் ஸ்காலர்ஷிப் பெற்று படிப்பதற்குச் செல்லவிருக்கும் அக்ஷய் இப்போது சென்னை சங்கரா சீனியர் செகண்டரி பள்ளி மாணவன். 'ஸ்காலர்ஷிப்பில், ஒன்பது முதல் பன்னிரண்டு வகுப்பு வரை படிக்கப் போகிறான். "என்னிடம் 'வெல்கம் டு சிங்கப்பூர்' என்று சொல்லி வாழ்த்தினார் ஜனாதிபதி. 'எப்போது வரப் போகிறாய்?' என்று அவர் கேட்டார். "சிங்கப்பூரில் கல்வி ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரை என்பதால், 'இந்த மாத இறுதியில் வந்து விடுவேன்' என்றேன்.

'இங்கே படிப்பை முடித்தபின், மேலே படிக்க இந்தியா சென்று விடுவாயா?' என்றதற்கு 'அநேகமாக இங்கேதான் மேற்படிப்பைத் தொடருவேன்' என்று பதில் சொன்னேன்."

ஜெட் ஏர்வேஸ், அனைத்து சிறுவர், சிறுமியருக்கும் சிங்கப்பூர் குறித்த வண்ணப் படங்கள் அடங்கிய புத்தகம் ஒன்றை அளித்தனர். அதில், ஜனாதிபதியிடம் ஆட்டோகிராப் வாங்கிக் கொண்டனர். ஜனாதிபதி மாளிகையை விட்டு வெளியே வந்து, எங்கள் பஸ்ஸில் அமர்ந்தபோது, எல்லாமே கனவு போல இருந்தது" என்றார் ஆர்த்தி.

- எஸ்.சந்திர மௌலி

# "பா.ஜ.க வால் டெபாசிட் வாங்க முடியுமா?"

-வீரமணி சவால்

**திராவிட இயக்கங்கள் பகுத்தறிவுக் கொள்கையை விட்டுவிட்டு ரோடு போட்டேன் - பாலம் கட்டினேன் என்றுதானே வாக்குக் கேட்கிறார்கள். பகுத்தறிவுக் கொள்கைகள் இனி வாக்குகளைப் பெற்றுத்தராதா?**

1971 தேர்தலில் பகுத்தறிவுதான் முக்கியப் பிரச்னையாக இருந்தது. இன்னும் சொல்லப்போனால் தி.மு.க. அமைச்சர்கள் மீது முதன் முறையாக ஊழல் குற்றச்சாட்டு வைக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த தேர்தலில் தி.மு.கவுக்குத்தான் வெற்றி கிடைத்தது. ஆனாலும் பகுத்தறிவுக் கொள்கைகளை மக்களிடம் எடுத்துப்போனால் வாக்குகள் விழாதோ என்ற அச்சம் காரணமாக அவற்றை இப்போது முன் வைப்பதில்லை. கொள்கை உறுதியும் நாணயமும் இருந்தால் நிச்சயம் மக்கள் ஆதரவு கிடைக்கும். அதற்கு ஒரு துணிச்சல் வேண்டும்.

**தேர்தல்-வாக்கு என்று வந்துவிட்ட பிறகு உங்களைப் போன்ற சமுதாய இயக்கங்களால் மக்களுக்கு என்ன செய்துவிட முடியும்...**

மக்களுக்குத் தேவையான காரியங்களை அரசியலுக்குப் போகாமல் பிரஷர் குரூப் என்ற அளவில் வெளியில் இருந்தே சாதித்துத் தரக்கூடிய வலிமை தி.க.வுக்கு இருக்கிறது. ஆகவே யார் ஆட்சியாளராக இருந்தாலும்... அது ஜெயலலிதாவாக இருந்தாலும் எங்களால் சாதிக்க முடியும்.

**ஆர்.எஸ்.எஸ்ஸின் வாக்கு வங்கியை பா.ஜ.க நம்பியிருப்பது போல தி.மு.கவோ அ.தி.மு.க.வோ நீங்கள் பெற்றுத் தரக்கூடிய வோட்டுகளை நம்பி இல்லையே... அப்படியிருக்க நீங்கள் சொல்வதை அவர்கள் எப்படிக் கேட்பார்கள்?**

தி.கவின் ஆதரவு தேவையில்லாமலா 'நெய்வேலி தீர்மானம் நெய் மணக்கும் தீர்மானம்' என்று எழுதுகிறார்கள். எங்களுடைய ஆதரவை நாடுகிறார்கள். எங்களுக்கென்று ஒரு வலுவான வாக்கு வங்கி இருக்கிறது. உப்பு சிறியதுதான்... ஆனால் சாப்பாட்டுக்கு அது ரொம்ப முக்கியம்... மிளகும் சிறியதுதான். ஆனால் அதற்கு காரம் அதிகம்.

**தமிழகத்தில் இருக்கும் தி.மு.க- அ.தி.மு.கவில் எது உண்மையான திராவிட கட்சி?**

இவை எதுவுமே அல்ல... திராவிடர் கழகம் மட்டும்தான் உண்மையான திராவிடர் இயக்கம். மற்றவை எல்லாம் திராவிட நாட்டில் இருக்கும் இயக்கங்கள் என்று சொல்லலாமே ஒழிய பெரியாரைப் பின்பற்றும் திராவிடர் இயக்கங்கள் என்று கூற முடியாது. எங்களிடமிருந்து பிரிந்தவை என்பதால் தொப்புள்கொடி உறவு உண்டு...

**உங்களுக்கு நேரெதிர் கொள்கை கொண்ட பா.ஜ.கவின் வளர்ச்சியை எப்படிப் பார்க்கிறீர்கள்...!**

தமிழகத்தில் பா.ஜ.க. இருக்கிறதா...? ஒரு வேளை இருந்தால் அது வளர்ந்துள்ளதா இல்லையா என்று சொல்லலாம். அ.தி.மு.க.வும், தி.மு.கவும் மாறிமாறி தோளில் சுமந்து அவர்களுக்கு ஓர் அடையாளத்தை ஏற்படுத்திவிட்டன. இப்பொழுது இருவராலும் கழற்றிவிடப்பட்டுள்ளது. வரும் தேர்தலில் எங்கேயாவது தனித்து நின்று-ஜெயிக்க வேண்டாம்... டெபாசிட்டாவது வாங்க முடியுமா...?

**சென்ற தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவாகச் செயல்பட்டீர்கள்.**

**வரும் தேர்தலில் தி.க.வின் ஆதரவு யாருக்கு இருக்கும்... ஏனென்றால் மாறி மாறி தானே ஆதரவளிக்கிறீர்கள்?**

ராட்டினத்தில் சுற்றும்போது வரும் மயக்கம் காரணமாக யார் சுற்றுகிறார்கள் என்பதில் சிலருக்குக் குழப்பம் வரலாம்... ஆனால் நாங்கள் ஒரே இடத்தில்தான் இருக்கிறோம்.... அவர்கள் தான் மாறிமாறி நிலை எடுக்கிறார்கள்... அப்போது ஜெயலலிதா மதச்சார்பின்மை கொள்கையை முன் வைத்ததால் அ.தி.மு.க கூட்டணிக்கு ஆதரவளிக்கப்பட்டது. வரும் தேர்தலுக்கு இன்னும் காலம் இருக்கிறது. இருந்தாலும் ஜாதி ஒழிப்பு - சமூகநீதி - பகுத்தறிவு ஆகியவற்றைச் செயல்படுத்துவதில் யாருக்கு உறுதி இருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோமோ அவர்களுக்குத்தான் தி.கவின் ஆதரவு. அதற்கான வாய்ப்புகளை அனைவருக்கும் இன்னமும் கொடுத்து வருகிறோம்... பார்க்கலாம்...

**இந்து - இந்தியா என்று பேசிய இந்து முன்னணி இப்பொழுது திடீரென தமிழன் - தமிழனின் கதி என்றெல்லாம் பேசி மாநாடு நடத்துகிறதே...**

இந்து என்ற முகவிலாசத்தைக் காட்டினால் இனி தமிழகத்தில் எடுபடாது என்பதால் தமிழன் என்ற முகமூடி இன்று இந்து முன்னணிக்குத் தேவைப்படுகிறது. ஆனால் அதைக் கழற்றிக் காட்ட அதற்கடுத்த வாரமே திராவிடர் எழுச்சி மாநாடு நடத்தப்பட இருக்கிறது.

**தமிழகத்தில் தலித் இயக்கங்களின் வளர்ச்சி பற்றி...?**

தலித் மக்களின் உரிமைகளுக்காகப் போராடுவதில் தவறில்லை. ஆனால் தனி நபருடைய முனைப்புக்காக ஒரு சமூகத்தைப் பலியிட வேண்டிய அவசியம் இல்லை.... இப்போது அவர்களுக்குள்ளேயே பி.எல்க்கு ஒரு கட்சி... பி.ஆர்க்கு ஒரு கட்சி என்று பிரிவுகள் இருக்கின்றன. இது நல்லதல்ல... இந்தக் கூட்டணியில் இரண்டு சீட் கிடைக்குமா அல்லது அந்தக் கூட்டணியில் அதிகம் கிடைக்குமா என்று கணக்குப் போடுவதை விட்டுவிட்டு பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி போன்ற அவமானங்களைப் போக்கப் படுபட வேண்டும்.

**திராவிடர் கழகம் இத்தனை ஆண்டுகளாகப் பிரசாரம் செய்தும் சபரிமலைக்கும் மேல்மருவத்தூருக்கும் செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறதே...**

சபரிமலைக்குப் போகிறவர்கள் பயபக்தியுடன் போகிறார்களா அல்லது பிக்னிக் மாதிரி போகிறார்களா என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். உலகம் தழுவிய அளவில் எய்ட்ஸ் விழிப்புணர்வுப் பிரசாரம் நடத்தப்பட்டு வருகிறது. ஆனாலும் நாளுக்கு நாள் எய்ட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டேதானே போகிறது. அதற்காக பிரசாரத்தை நிறுத்திவிட முடியுமா... அதுபோலத்தான் இதுவும்...



- இரா.முத்துக்குமார்

படம்: ஸ்ரீஹரி

# எங்க ஊரு ஸ்டைல்!

லதா சேகர்



சிகரெட்டைத் தூக்கிப் போட்டுப் பிடிப்பது சூப்பர் ஸ்டார் ஸ்டைல்! (அது கூட அன்புமணிக்குப் பிடிக்காததால் இப்போதெல்லாம் லகலகலக...தான்) காரோட்டுவதில்கூட பல ஸ்டைல். அதுவும் ஒவ்வொரு நாட்டினருக்கும் பிரத்யேகமான ஒரு ஸ்டைலாம் என் வழி தனி வழின்னு ஓட்டிக்கிட்டுப் போயிட்டேயிருப்பாங்களாம்.

- ஒரு கை ஸ்டியரிங்கில் இன்னொரு கை கதவுக்கு வெளியே சிட்னி
- ஒரு கை ஸ்டியரிங்கிலும் இன்னொரு கை ஹார்னிலும் - ஜப்பான்
- ஒரு கை ஸ்டியரிங், இன்னொரு கையில் பேப்பர், கால்ஆக்ஸிலேட்டரில் - பாஸ்டன்
- இரண்டு கைகளாலும் ஸ்டியரிங்வீல் பற்றிக்கொண்டு, கண்களை மூடி, இரண்டு கால்களையும் ப்ரேக்கில் அழுத்தி, ஒரு வித பயத்தில் கூச்சலிட்டு ஓட்டுவது... - நியூயார்க்
- இரண்டு கைகளையும் காற்றில் பறக்கவிட்டு, கால்களை ஆக்ஸிலேட்டரில் படரவிட்டு, தலையைத் திருப்பி பின் சீட்டில் இருப்பவருடன் ஜாலியாக அரட்டை அடிப்பது - இத்தாலி

ஒரு கையால் ஹார்ன்
ஒரு கையால் கியர்
ஒரு காதில் அதிரடி மியூசிக்
இன்னொரு காதில் செல்போன்
ஒரு கால் ஆக்ஸிலேட்டரில்
இன்னொரு கால் க்ளட்சில்
ப்ரேக்கில் எதுவுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது
கண்களோ பக்கத்து காரில் இருக்கும் பெண்களிடம்...
- வெல்கம் டு இந்தியா!

Estd. 1989 ஸ்ரீசுந்தர விநாயகர் துணை உ தேவதானப்பட்டி ஸ்ரீ காமாட்சி அம்மன் துணை

காலை காபி, 3 வேளை பிராமணாள் உணவு, தங்கும் வசதியுடன் 3 Tier இரயில் சுற்றுலாக்கள்.

23-2-06 (மகா சிவராத்திரி சுற்றுலா) & 13-3-06 & 11-4-06 & 27-4-06 & 4-5-06 & 11-5-06 & 18-5-06 முதல் 9 நாட்கள் : திரிவேணி-காசி-சாரனாத்-கயா-புத்தகயா-கல்கத்தா-பூரி-புவனேஸ்வர்-கோனார்க் ரூ. 3990

★ இத்துடன் ஆக்ரா-டெல்லி-**ஹரித்துவார்-ரிஷிகேஷ்** உள்பட 13 நாட்கள் ரூ. 5490

★ இத்துடன் பண்டரிபுரம்-மும்பை-ஜெய்பூர்-அமிர்தசரஸ்-வாகாபார்டர் உள்பட 19 நாட்கள் ரூ. 7990

4-5-06 மற்றும் 11-5-06 மற்றும் 10-6-06 முதல் 13 நாட்கள் : மதுரா-ஆக்ரா-பிருந்தாவன்-டெல்லி-ஹரித்துவார்-ரிஷிகேஷ்-**பத்ரிநாத்-கேதார்நாத்** ரூ. 5990

★ இத்துடன் திரிவேணி-காசி-கயா-கல்கத்தா-பூரி-புவனேஸ்வர்-கோனார்க் உள்பட 18 நாட்கள் ரூ. 7990

9-3-06 மற்றும் 11-4-06 மற்றும் 4-5-06 மற்றும் 11-5-06 முதல் 12 நாட்கள் மதுரா-ஆக்ரா-பிருந்தாவன் டெல்லி-குருக்ஷேத்திரம்-சண்டிகர்-**சிம்லா-குளு-மணாலி**-ரோத்தங்பாஸ்-வசிஷ்டாபாத்- உள்பட ரூ. 5990

★ இத்துடன் அமிர்தசரஸ்-வாகாபார்டர்-**ஜம்மு-வைஷ்ணவதேவி** உள்பட 15 நாட்கள் ரூ. 6990

10-3-06 & 29-3-06 & 11-4-06 & 4-5-06 & 11-5-06 முதல் 12 நாட்கள் பூரி-புவனேஸ்வர்-கோனார்க்-கல்கத்தா-**டார்ஜிலிங்-கேங்டாக் (சிக்கிம்)** சங்குலேக்-பாபாமந்திர்-மந்தாகினி வாட்டர் பால்ஸ் உள்பட ரூ. 5990

29-3-06 & 11-5-06 முதல் பண்டரிபுரம்-மும்பை-**அஷ்டவிநாயகர் யாத்திரை** உள்பட 9 நாட்கள் ரூ. 4590

**60 நாட்களுக்கு முன் முழுப் பணம் செலுத்துவோர்க்கு கட்டணத்தில் 5% சலுகை தரப்படும்.**

**நவஜோதிர்லிங்கம்-பஞ்சதுவாரகா-அந்தமான்-இலங்கை-சிங்கப்பூர்-மலேசியா சுற்றுலாக்களுக்கு அணுகவும்**

L.T.C. ரசீது தரப்படும். II Tier A/c & III Tier A/c சுற்றுலா உண்டு

# சன் டிராவல்ஸ்

Prop. K. சிதம்பரம், B.Sc., B.Ed.
செல் : 98421 - 56668

**மதுரை :** 3, தெற்கு மாசி வீதி, T.M. கோர்ட் (நாகலு காபி எதிரில்) மதுரை - 1. போன் : 2341133


**சென்னை :** 30, நடேசன் தெரு, (சிவா-விஷ்ணு ஆலயம் அருகில்) T. நகர், சென்னை-17. போன் : 24359194, செல் : 98421-59194

**கோவை :** கோமதி பில்டிங், 406, வைசு தெரு, காந்திபுரம், கோவை - 12. போன் : 2490770, செல் : 98428-96668

**கும்பகோணம் :** பிரசாத் போட்டோ ஸ்டுடியோ, 13-B, கோதண்டபாணி தெரு, கும்பகோணம். ☎ 2433550, செல் : 98421-56668

**பெங்களூர் :** S. ஜெயசுதன், 38, சிச் வேண்ட் ரோடு, Opp. : சேஷாத்திரிபுரம் கல்லூரி, பெங்களூர்-25. ☎ 25511690, செல் : 93412-10728





# வேத சாஸ்திர ரக்ஷணத்திற்கு ஓர் வேண்டுகோள்.

அத்வைத வித்யாசார்ய மஹாராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்யஸ்மரண ஸமிதி (Regd)
"ஸ்ரீ கோவிந்த தீக்ஷித கடிகாஸ்தானம்"
29-30 கிழக்கு ஜ்யபன் தெரு, கும்பகோணம் - 612 001.
E-mail : vedagdps@sancharnet.in - Website : www.geocities.com/gdpskmu

☎ Off : (0435) 5532239
Fax : 2425948
Patasala : 5532238, 2422866

"வேதாத்யயனம் செய்யும் பாக்யமில்லாதவர்கள், வேதாத்யயனம் செய்துவரும் குழந்தைகளை போஷித்து ரக்ஷிப்பதன் மூலம் ஓரளவாவது தனது கடமையை நிறைவேற்ற முடியும். ஒரு வேதக் குழந்தையின் படிப்பு பராமரிப்பு செலவை ஒரு குடும்பம் எடுத்துக்கொண்டால், பேருபகாரமாக இருக்கும்" என்று காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள் உபதேசித்துள்ளார்கள். அவரின் முதாதயர்களான ஸ்ரீ நாகாம்பா ஸமேத பகவான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் அவர்களால் கி.பி. 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து 463 ஆண்டுகளாக நடந்துவரும் ராஜ வேத காவ்ய பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய்போல் இயங்கி காப்பாற்றி வருகிறது. தற்பொழுது 200 மாணவர்களுக்கு 17 வேத, சாஸ்திர அத்யாபகர்கள் புராதனமான குருகுல முறைப்படி ரிக் வேதம், கிருஷ்ண, சுக்ல யஜுர் வேதம், ஸாம வேதத்தை போதித்து வருகிறார்கள். இப்புனித பாடசாலையை ரக்ஷிக்க கீழ்கண்ட திட்டங்களில் அனைவரும் பங்குகொண்டு ஸ்ரீ வேத மாதாவின் அனுக்ரஹத்தால் ஸகல ஸ்ரேயஸ்களையும் அடைய வேண்டுகிறோம். புதிய பாடசாலை கட்டிடம் ஸ்ரீ கோவிந்த தீக்ஷித கடிகா ஸ்தானம் என பெயரிடப்பட்டு 21-6-2004 திங்கள்கிழமை ஸ்ரீ காஞ்சி காமகோடி ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் திறந்து வைத்து வேத அபிவிருத்திக்கு அர்ப்பணித்தார்.

| தங்கள் நன்கொடைக்கு U/S 80-G பிரிவின்படி வருமான வரி விலக்கு" உண்டு<br>நன்கொடை திட்ட விபரங்கள் | நன்கொடை தொகை | நிரந்தர வைப்பு நிதி "Corpus Fund" |
|---|---|---|
| ஒரு வேளை ஸமாராதனைக்கு (முழு தொகை) | Rs. 500 | Rs. 8,000 |
| அமாவாஸ்யை (or) பௌர்ணமி (or) க்ருஷ்ண (or) சுக்ல பக்ஷ த்வாதசி ஒரு ஸமாராதனைக்கு [Please choose one specific day of a particular month in a year for Samaradhana] | Rs. 1,500 | Rs. 25,000 |
| வேதம் பயிலும் ஒரு மாணவனின் பராமரிப்பு ஒரு மாத செலவு ரூ.1000/- | Rs. 12,000 P.A | Rs. 2 Lakhs |

நன்கொடைக்கான தொகையை Cross செய்யப்பட்ட D.D/ Cheque-ஐ A.V.M.S.G.D.P.S. Samithi என்ற பெயரில் அனுப்பக் கோருகிறோம்.

# ரயிலில் ஒரு பாடம்!

"என்னங்க, இவ்வளவு கூட்டமா இருக்கு? நின்னுட்டுப் போறதுக்குக்கூட இடம் இருக்காது போலிருக்கே" என்று மலைப்புடன் சொன்னாள் சுலோசனா.

"பின்னே முகூர்த்தநாள்ல கூட்டம் இல்லாம காலியாவா இருக்கும்? உன் பிள்ளையை ஏதாவது சொன்னா மட்டும் சப்போர்ட் பண்ண ஓடி வருவியே இப்ப அனுபவி. பத்து நாளைக்கு முன்னாடியே டிக்கெட் ரிசர்வ் செய்டான்னு சொன்னேன். இதோ மத்தியானம் போறேன், நாளைக்குப் போறேன்னு நாளை கடத்திட்டு அப்புறம் வந்து வெயிட்டிங் லிஸ்ட்தான் இருக்குங்கறான். அதனாலதான் எந்த வேலையா இருந்தாலும் அவனை எதிர்பார்க்காம நானே செய்துடறது. பரீட்சை நேரமா இருந்ததால அவன்கிட்டே சொன்னேன். அது தப்பாயிடுச்சு" என்று படபடத்தார் ராமலிங்கம்.

"சரி! சரி! விடுங்க. எப்படா சந்தர்ப்பம் கிடைக்கும்னு உடனே அவனைக் குற்றம் சொல்ல ஆரம்பிச்சுடுவீங்களே? அவனும்தான் ஆபீஸ் வேலையில பிஸியா இருந்தான்" என்றாள்.

"அதானே பார்த்தேன். பிள்ளையை விட்டுக் கொடுக்கவே மாட்டியே. நான் குற்றம் சொல்றேனா? இவ்வளவு நடந்ததே, ஸ்டேஷன் வரைக்குமாவது வந்து விட்டுட்டுப் போவேமேன்னு நினைச்சானா?"

"நல்லா இருக்கு கதை. அவன் வரட்டுமான்னு கேட்டதுக்கு நீங்கதானே நாங்க ஒண்ணும் குழந்தைங்க இல்லே. போகத் தெரியும்னு எரிஞ்சு விழுந்தீங்க. இப்ப என்னடான்னா இப்படிப் பேசறீங்களே?"



ஆரணி யுவராஜ்

"அது என்ன வரட்டுமான்னு கேள்வி. என்னடா டிக்கெட்டும் ரிசர்வ் பண்ணலை. கூட்டம் இருக்குமே, எப்படிப் போவாங்க, நாம கூடப் போய் ஏதாவது செய்வோம்னு நினைச்சு இருந்தா வந்திருக்கணும். வரட்டுமான்னு கேட்டா கோபம் வந்தது. அதுதான் அப்படிச் சொன்னேன். உடனே ஐயா முறுக்கிக்கிட்டாரு."

"உங்க பிள்ளையாச்சே. அதான் உங்களுக்கு இருக்கிற அதே கோபமும் ரோஷமும் அவனுக்கும் இருக்கு. கல்யாணமாகி ஒரு குழந்தைக்கு அப்பா ஆன பின்னாடியும் அவனை எதுக்காவது திட்டிக்கிட்டே இருக்கீங்க. அவனா இருக்கவே பொறுத்துட்டுப் போறான். இதுவே வேற ஒருத்தனா இருந்தா..." என்ற சுலோசனா நிறுத்திக்கொண்டாள்.

"இருந்தா? சொல்லு, ஏன் பாதியிலே நிறுத்திட்டே? தனிக்குடித்தனம் போய்டுவானா? போகட்டுமே. அவனை நம்பிக்கிட்டா நான் இருக்கேன். வேணும்னா நீயும்கூடவே போ."

"நீங்க மட்டும் தனியா இருக்கேன்னு சொல்றீங்களா?" என்று சிரிப்புடன் அவரைப் பார்த்தாள்.

"ஏன் முடியாதுங்கறியா? முன்னாடி எல்லாம் சமையலே செய்திருக்கேன். ஞாபகம் இருக்கா?"

"அதை அப்புறம் பார்த்துக்கலாம். இப்ப ஏதாவது ஏற்பாடு பண்ணுங்க. என்னால நின்னுட்டு வர முடியாது" என்றாள் சுலோசனா.

"என்ன ஏற்பாடு பண்றது? தனி விமானம் மாதிரி தனி ரயிலைத்தான் வாங்கணும்" என்றபடி சுற்றிலும் ஒரு நோட்டமிட்டார்.



ரயில் நிலையம் மனிதத் தலைகளால் நிரம்பியிருந்தது. இவர்கள் செல்ல வேண்டிய வண்டி இன்னும் சில நிமிடங்களில் வரப் போவதாக அறிவிப்புக் குரல் தெரிவித்தது. அதற்குரிய பிளாட்பாரத்தில்தான் நின்றிருந்தார்கள். இவர்களைப் போலவே இன்னும் நிறையப் பேர்.

'இதில் பதிவு செய்யாத பெட்டியில் ஏறிப் போகிறவர்கள்

எத்தனை பேர்? இந்த மாதிரி பதிவு செய்யாத பெட்டியில் ஏறி, இடம் பிடிப்பதற்கென்றே ஒரு தனி சாமர்த்தியம் இருக்கிறது. கலை என்றும் சொல்லலாம். ராமலிங்கத்துக்கு அது இல்லை' என்பது அவருக்கே தெரியும். நான்கைந்து முறை அனுபவப்பூர்வமாக உணர்ந்தும் இருக்கிறார்.

பெட்டியில் ஏறி இந்த முனையிலிருந்து அந்த முனைவரை இரண்டொருமுறை ஓடி ஓடிப் பார்ப்பார். எல்லா இருக்கைகளுமே நிறைந்து விட்டிருக்கும். ஆனால் இவருக்குப் பின்னால் வந்தவர்கள் எல்லாம் அமர்ந்திருப்பார்கள். எப்படி என்பது புரியாது. அதனால்தான் எப்போது ஊருக்குச் செல்வதாக இருந்தாலும் பதிவு செய்துவிடுவார்.

அரசு மேனிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணி புரிகிறார். வீட்டிலும் டியூசன் எடுக்கிறார். தேர்வுகள் நெருங்குவதால் அதிக நேரம் பாடங்களை நடத்த வேண்டியிருந்தது. அதனால்தான் மகனிடம் சொல்லி இருந்தார். அது தப்பாகி விட்டது.

**“வ**ணக்கம் சார்” என்று பின்னால் குரல் கேட்டுத் திரும்பினார்.

உயரமாக ஓர் இளைஞன். வாரப்படாத தலை, முள்தாடி, சற்றே அழுக்கான சட்டை, இறுக்கமான பேண்ட் அணிந்திருந்தான். பார்த்த முகமாகத் தான் தெரிந்தது. யார் என்பதுதான் நினைவுக்கு வரவில்லை.




“என்ன சார் தெரியலையா? நான்தான் ரமேஷ். தண்டம் ரமேஷ்” என்று கூறிவிட்டுச் சிரித்தான்.

ராமலிங்கத்துக்கு 'பளிச்'சென நினைவுக்கு வந்தது. அவரிடம் படித்த மாணவன். பள்ளியில் படித்ததோடு டியூசனும் படித்தான். படித்தான் என்ற சொல்லைப் பயன்படுத்துவது தவறு. வந்து போனான் என்று கூறலாம். அப்பா பெயர் தண்டாயுதபாணி. அதனால் 'டி. ரமேஷ் என்பதை இவர்தான் 'தண்டம் ரமேஷ்' என்றாக்கினார்.

''இங்கே என்னடா செய்துட்டிருக்கே?'' என்று கேட்டார்.

''வேலை செய்துட்டு இருக்கான்'' என்றான் பக்கத்தில் இருந்த மற்றொருவன். கூடவே ஒரு சிரிப்பு.

"இங்கே என்ன வேலை?"

''ஐயாதான் எல்லா வண்டிக்கும் டிடி.ஆர்'' என்றான் அதே ஆள். அதே சிரிப்புடன்.

''டேய் சும்மா இருடா'' என்று அதட்டினான் ரமேஷ்.

குழப்பத்துடன் பார்த்த ராமலிங்கத்திடம் அதே ஆள் விவரித்தான். “சீட்டு பிடிச்சுக் கொடுப்போம் சார். ஒரு சீட்டுக்குப் பத்து ரூபாயில இருந்து ரேட். கூட்டத்துக்குத் தகுந்த மாதிரி ஏறும்'' என்றான்.

ராமலிங்கம் திடுக்கிட்டார். "இது என்னடா பிழைப்பு? ஒழுங்கா படிச்சு இருந்தா இந்த நிலைமை வந்து இருக்குமா? படிடா, படிடான்னு அடிச்சுக் கிட்டேனே கேட்டியா?"

''படிக்கக்கூடாதுன்னு எனக்கு ஆசையா சார்? மரமண்டையில ஏறலை''

“இதுல என்னடா வருமானம் வரும்?"

“இது மட்டுமில்லே சார். வேற வேற தொழிலும் இருக்கு. எதுவுமே சொல்லிக்கற மாதிரி இல்லே" என்றான் அதே ஆள்.

“இப்ப நீ வாயை மூடறியா இல்லியாடா” என்று ரமேஷ் அதட்ட... அவன் அமைதியானான்.

“கல்யாணமாச்சாடா?” என்று கேட்டார் ராமலிங்கம்.

"இன்னும் இல்லே சார். அம்மா எப்படி இருக்கீங்க? உங்க பிள்ளை என்ன பண்றாரு?" என்று அவன் கேட்டான்.

"நல்லா இருக்கேன். பையன் பேங்கில வேலை பண்றான்" என்றாள் சுலோசனா.

"பார்த்தீங்களா சார். உங்க பிள்ளைக்கு உங்களை மாதிரி மூளை. நல்லா படிச்சிருக்காரு. என் அப்பன் படிக்காதவரு. அவரு மூளைதானே எனக்கு இருக்கும். இதுல என்னைத் தப்பு சொல்லி என்ன பிரயோஜனம்?" என்றான் சிரிப்புடன்.

"இதெல்லாம் வக்கணையா பேசு. எத்தனையோ ஏழைப் பசங்க நல்லா படிச்சு பெரிய ஆளுங்களா வரலியா? உன்னைக் கண்டிக்க ஆள் இல்லை. டியூஷனுக்கும் சரியா வராம நின்னுட்டே. ஒழுங்கா வந்திருந்தா படிப்பை மண்டையில் ஏத்தியிருப்பேன்" என்றார் ராமலிங்கம்.

"சரி விடுங்க! இனிமே பேசி என்ன பிரயோஜனம்? ஏம்பா ரமேஷ், எங்களுக்கு ரெண்டு சீட் பிடிச்சுக் கொடுக்கறியா?" என்று காரியம் சாதிக்க முயன்றாள் சுலோசனா.

ராமலிங்கம் முறைத்தார். "ஏய், சும்மா இருக்கியா? இப்படி ஒரு தொழில் செய்யறானேன்னு நான் கண்டிச்சுட்டு இருக்கேன். நீ என்னடான்னா..."

"அட விடுங்க சார். இனிமே இன்னா கண்டிக்கறது? ரமேஷ் இந்தத் தொழிலை எப்படி கத்துக்கிட்டான்னும் சொல்லி இருக்கான். உங்ககிட்டே டியூசன் வந்தப்ப எல்லோரும் நடத்தின பாடத்தை எழுதுவாங்களாம். இவன் மட்டும் தெரியாம முழிப்பானாம், டேய் உனக்கு இன்னும் எப்படிடா சொல்லிக் கொடுக்கறது? சும்மா உட்கார்ந்து இருக்காதே. கடைக்குப் போய் அது வாங்கி வா, இது வாங்கி வா, இதையாவது பண்ணுன்னு அனுப்புவீங்களாம். அந்த மாதிரி ரயில் டிக்கெட் புக் பண்ணவும் அனுப்புவீங்களாம். போய்ட்டு வந்ததும் எட்டணாவோ, ஒரு ரூபாவோ தருவீங்களாமே. அப்படி வந்து போனப்பதான் வேற ஆளுங்களுக்கும் டிக்கெட் வாங்கித் தர்றது, இடம் பிடிக்கறதுன்னு கத்துக்கிட்டான்" என்று நண்பன் மீண்டும் வாய் மலர்ந்தான்.

ராமலிங்கத்துக்குச் 'சுருக்'கென தைத்தது. 'கடவுளே! நானே மறைமுகமாகக் கற்றுத் தந்துவிட்டு இப்போ நியாயம் பேசிக்கொண்டிருக்கிறேனா? நிஜம்தானே! என் மகன் உட்கார்ந்து படித்துக்கொண்டிருக்க இவனை வீட்டு வேலைகளுக்கு ஏவி விடுவேனே! அலுத்துக் கொள்ளாமல் இன்னும் கூடுதல் கவனம் செலுத்தி பாடங்களைக் கற்றுத்தர தவறி விட்டேனா?' என நினைக்க மனம் குறுகுறுத்தது.

"டேய், நீ அடி வாங்காம போவமாட்டியா?" என்று கூறி நண்பனை விரட்டிய ரமேஷ் திரும்பி "அவன் ஒரு லூசு சார். இப்படித்தான் ஏதாவது பினாத்துவான்" என்றான்.

ராமலிங்கம் அவனது கைகளைப் பற்றினார். "எ...என்னை மன்னிச்சுடுடா" என்றவர் குரல் தழுதழுத்தது.


"ஐயையோ... என்ன சார் நீங்க? நான் படிக்காத மரமண்டையானதுக்கு நீங்க என்ன சார் பண்ணுவீங்க? எதுக்கு மன்னிப்புக் கேட்கறீங்க?" என்று பதறினான்.

சற்றுத் தொலைவில் ரயிலின் முகம் தெரிந்தது. அங்கே ஒரு பரபரப்பு உண்டானது.

"நீங்க ரெண்டு பேரும் இப்படி ஓரமா



மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோயிலில் விடிய விடிய பக்திப் பாடல்கள் பாடி கச்சேரி நடத்துவதை புத்தாண்டு செண்டிமென்டாகக் கொண்டிருக்கிறார் இசையமைப்பாளர் தேவா.




நில்லுங்க சார். நான் இடம் பிடிச்சுக் கொடுக்கறேன்'' என்ற ரமேஷ் விலகி ஓடினான்.

ரயில் வந்து நின்றது. கூட்டம் முண்டியடித்து ஏறியது. அந்த பரபரப்புகள் அவரைச் சிறிதும் அசைக்கவில்லை. சலனமின்றி நின்றிருந்தார். மகன் முகம் நினைவுக்கு வந்தது. சற்று முன்பு அவனது பொறுப்பற்ற செயல்களைப் பேசியதை நினைத்தார். அதுவும் தான் கற்றுத் தந்ததுதானோ? என்ற கேள்வி எழுந்தது.

'இரண்டு பேருக்குத் தவறான ஆசானாக இருந்திருக்கிறோமே?' என நினைக்க வெட்கமாக இருந்தது.

''வாங்க சார், இடம் பிடிச்சுட்டேன். வாங்கம்மா'' என்று கூறியபடி வந்த ரமேஷ் பெட்டியை வாங்கிக்கொண்டான்.

''என்னங்க பிடிச்சு வெச்ச பிள்ளை யார் மாதிரி நிக்கறீங்க? வாங்க'' என்ற சுலோசனா அவரை இலேசாக உலுக்கி விட்டு நடந்தாள்.

ராமலிங்கம் பின்தொடர்ந்து வண்டியில் ஏறினார். ஒரு இருக்கையில் போட்டிருந்த துண்டை எடுத்த ரமேஷ் அதனாலேயே தூசு தட்டி ''உட்காருங்க'' என்றான்.

சுலோசனா அமர்ந்தவாறு ''ஏங்க, ரமேஷ்கிட்ட இருபது ரூபா கொடுங்க'' என்றாள்.

''ஐயைய! சும்மா இருங்கம்மா. நீங்க உட்காருங்க சார்'' என்றான் அவன்.

''வேண்டாம். நான் நின்னுட்டு வரேன்'' என்றார்.

''ஆறு மணி நேரம் நின்னுட்டா வருவீங்க? இடம் கிடைச்சும் யாராவது இப்படிச் செய்வாங்களா? பேசாம உட்காருங்க...'' என்று அவள் முடிக்கும்முன்பு.

''வாயை மூடுடி. நீ உட்கார்ந்தாச்சு தானே? அதோடு விடு'' என்று கத்தினார்.

சுலோசனா, ரமேஷ் இருவரும் அரண்டு அமைதியானார்கள்.

''நா... நான் வரேன் சார்'' என்று கூறிவிட்டு ரமேஷ் இறங்கிச் சென்றுவிட்டான்.

அந்தப் பயணம் முழுவதும் ராமலிங்கம் நின்ற இடத்தை விட்டு அசையவேயில்லை. ○

10

*சொந்தங்கள் வாழ்க!*

# அவரவர் வாழ்க்கையில்...





குழந்தைகளை வளர்க்கும் பெற்றோர்கள், அதிலும் இந்தக் காலப் பெற்றோர்கள், ஒன்றோ, இரண்டோ இருப்பதால், அதிகமாகப் பாசம் வைத்துவிடுகிறார்கள். பாசவலையில் சிக்கி பல பெற்றோரும் (சில சமயம்) குழந்தைகளும் தவிப்பதைப் பார்க்கிறோம்.

விசு - நிலா தம்பதிக்கு இரு குழந்தைகள் - மூத்தவன் வேணு; இளையவள் திவ்யா. இருவருமே செல்லக் குழந்தைகள்தான். வசதிபடைத்த குடும்பம் என்பதால் கேட்டது கிடைத்தது அவர்களுக்கு. அப்பா சதா தொழிலில் நேரம் செலுத்த வேண்டிய நிலை. மனைவிக்கோ, குழந்தைகளுக்கோ நேரம் ஒதுக்க முடியவில்லை. குழந்தைகள் பிறந்தவுடன் மகிழ்ச்சியில் திளைத்த நிலா, நண்பர்கள், பிறந்தவீடு எல்லாவற்றையும்

**மனநல ஆலோசகர் பிருந்தா ஜெயராமன்**

இரண்டாம்பட்சமாக நினைத்து, பார்த்துப் பார்த்து குழந்தைகளைக் கவனித்து, ஆளாக்கிவிட்டுப் பெருமையுடன் நிமிர்ந்தாள்.

தந்தையின் தொழிலில் மகன் சேர்ந்து கொண்டது அவருக்கும் அளவிலா மகிழ்ச்சி, பெருமை. கிரமப்படி இரு குழந்தைகளுக்கும் திருமணம் செய்தார்கள். மணமான முதலிலிருந்தே கணவன் ஆபீஸுக்குப் போகுமுன் மருமகள் எழுந்து கணவனுக்குக் காலை உணவு கொடுக்காமல், தூங்கிக் கொண்டிருந்ததை யாரும் குற்றம் சொல்லவில்லை. தாய் மகனுக்குப் பரிந்து, பரிந்து உணவளித்து அனுப்பி விடுவாள்.

நாளடைவில் பிரச்னை எங்கே வந்ததென்றால், நீலா வேணுவைத் தன் மகனாகப் பார்த்தாள். மருமகளின் கணவனாகப் பார்க்கத் தவறிவிட்டாள்! 'என் மகனுக்கு இது பிடிக்கும்' 'அவனுக்கு இதுதான் நல்லது.' 'அவள் தூங்கட்டும்; நானே செய்கிறேன்' என்று மொத்த உரிமையையும் தானே எடுத்துக் கொள்வதைப் பற்றிய விழிப்புணர்வே இல்லாமல் நீலா செயல்பட, கணவனுக்காகச் செய்த கொஞ்ச, நஞ்ச வேலைகளையும் மருமகள் நிறுத்திவிட்டாள்- 'உங்கள் மகன்தானே? நீங்களே செய்துகொள்ளுங்கள்' எனும் ரீதியில் கணவன் ஏதாவது கேட்டால்,'உன் அம்மாவிடமே கேட்டுக்கொள்; என்னை ஏன் கேட்கிறாய்?' என்று பட்டென்று பதில் சொல்வது வழக்கமாக, இருவரும் விலகிக் கொண்டிருப்பது நீலாவுக்குப் புரிந்தாலும், 'ஏன்?' என்று தெரியாமல் தவித்தாள். மருமகளுக்கு புத்திமதி சொல்ல முனைய, எரிமலை வெடித்தது. இரு பக்கமும் பேச முடியாமல் மாட்டிக்கொண்டது வேணுதான்.

"அந்த நடிகைக்கு நாலு லாயராமே!"


"ஆமா! சிவிலுக்கு ஒண்ணு, கிரிமினலுக்கு ஒண்ணு, டைவர்ஸுக்கு ஒண்ணு, முன்ஜாமீனுக்கு ஒண்ணு!"

- பி.ஜி.பி. இசக்கி



**ஹ**ரியின் கதை (16 வயது) வேறு. அப்பா மிகவும் கெடுபிடியானவர். ஒன்றைச் சொல்லி விட்டாரென்றால் செய்துதான் ஆக வேண்டும். கேள்வி கேட்கக்கூடாது. மனைவியிலிருந்து குழந்தைகள் வரை, அவர் கோபத்துக்குப் பயந்து கீழ்ப்படிந்து விடுவார்கள்! சின்னவயதில் நன்றாகப் படித்துக் கொண்டிருந்த ஹரி, வயது ஏற, ஏற சரியாகப் படிக்கவில்லை. மதிப்பெண் குறையும்போது, அப்பாவின் அடிக்குப் பயந்து, அம்மாவிடமே அவன் 'ரிப்போர்ட்'டைக் காட்டுவான்! தன்னிடம் சொல்லாமல் மனைவி கையெழுத்துப் போடுவது தெரிந்தவுடன் கணவன் கோபிப்பார் என்று உணர்ந்தாலும், ஹரியின் தாய் மகனைக் காப்பாற்றத் தான் இட்டு வாங்குவதைப் பொருட்படுத்த மாட்டார். விடலைப் பருவத்தில் அப்பாவின் மீது வரும் கோபங்களை அம்மா மீது காட்ட ஆரம்பித்தான் ஹரி. தனது விருப்பங்களைத் தாயை மிரட்டி, மிரட்டிப் பூர்த்தி செய்துகொள்ள அவன் ஆரம்பித்தவுடன் பெற்றோர் செய்வதறியாது தவித்தனர்!

**பா**சம் என்றால் என்னவென்றே தெரியாது வளர்ந்த அனுவுக்குக் கல்லூரியில் படிக்கும்போது 'சீனியர்' மாணவன், ராஜ் அறிமுகமாக, இருவரும் நெருங்கிப் பழகினார்கள். சதா சண்டைபோடும் அப்பா, அம்மாவைப் பற்றியும், மகிழ்ச்சியே இல்லாத வீட்டுச் சூழ்நிலையைப் பற்றியும் ராஜிடம் அவள் கூறி அழும்பொழுது, அவன் மிகவும் இரக்கப்பட்டு ஆறுதல் சொன்னான். இரக்கம் காதலாக மாறி, அனு பெற்றோரிடம் சொல்லாமலேயே வீட்டை விட்டு வெளியேறி மணம் செய்துகொண்டபோது தான் பெற்றோர் விழித்துக்கொண்டார்கள். ஆனால் சண்டை நின்றதென்று அதிகப்படியாக நினைத்துவிட வேண்டாம்! இப்போது சண்டைக்குப் பெரிய விஷயமொன்று



''சண்டைப் படம்னா ஏன் உன் மனைவியை அழைச்சிட்டுப் போக மாட்டேங்கறே?''

''புதிய யுக்திகளைத் தெரிஞ்சுக்குவாளோங்கற பயம்தான்.''

**- அஜீத்லால்**

கிடைத்துவிட்டதே! - ''உன்னால்தான் மகன் வீட்டை விட்டுப் போனான்'' என்று இருவரும் ஒருவரை ஒருவர் சாட இதை விட ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைக்குமா? முதிர்ச்சியில்லாத வயதில் துணையைத் தேர்ந்தெடுத்து, பிரச்னைகளை அதிகமாக்கிக் கொண்ட ராஜ் - அனுவை மட்டும் குறை கூறுவது நியாயமில்லைதானே?

குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகி, வெளி உலகுக்குச் செல்லும்போது தன் வாழ்க்கையைத் தனியே எதிர்கொள்ளவும், மணம் செய்துகொண்டபின், புதிய உறவுகளான கணவன்/மனைவி, புகுந்தவீடு இவர்களின் எதிர்பார்ப்புகளைப் புரிந்து கொண்டு நடந்துகொள்ளவும் முடிந்தால், பெற்றோர் நிம்மதியாக இருக்கலாம். இந்தத் திறமை இல்லாத குழந்தை, சுவரில் எறியப்பட்ட பந்தாகத் திரும்பிப் பெற்றோரிடம் வருவாள்/ வருவான்! இது அந்தக் குழந்தையின் வாழ்க்கைத் துணைக்கு எரிச்சலைக் கொடுக்கும் - 'எல்லாவற்றுக்கும் ஏன் என்னிடம் வராமல் பெற்றோரிடம் போகிறாய்?' என்று!

**குழந்தைகளை வாழ்க்கைக்குத் தயார் செய்யும்வரை வளர்ப்பதுதான்** பெற்றோருடைய பொறுப்பு. அதன்பின் 'அவரவர் வாழ்க்கை அவரவர் கையில்' என்று உணர்ந்து, 'என் குழந்தை' என்கிற உரிமையை விட்டுக் கொடுத்து, விலகப் பழக வேண்டும் பெற்றோர். அதுதான் குழந்தைக்கும் நல்லது. விலகுவது என்பது, 'எக்கேடு கெட்டுப்போ' என்கிற கண்ணோட்டத்தில் இல்லை.

மகனுக்கோ மகளுக்கோ மணம் செய்த பின், அவர்களது நெருக்கத்துக்கு வழி வகுக்க வேண்டும்; மகனிடம்/மகளிடம் எடுத்துக் கொள்ளும் உரிமைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதைத்தான் 'விலகல்' என்கிறேன். (அவர்கள் ஒருவரை ஒருவர் சரியாகப் புரிந்து கொள்ளும் வரையாவது!) பல பெற்றோரும் கவனிக்கத் தவறும் விஷயம் 'இளம் கணவன் மனைவியிடையே ஆரோக்கியமான உறவு அமைய நாம் துணை போகிறோமா? அவர்களுக்கு அந்தரங்கமான நேரம் அளிக்கிறோமா?' போன்றவை. (அவர்களது படுக்கையறையில் இரவு நேரங்களில் அமர்வது!?) முதல் ஒரு வருடம் அவர்கள் உறவுக்கு அஸ்திவாரம் போடும் நேரம். அந்தக் கட்டத்தில் பெற்றோர் திறமை வாய்ந்த கொத்தனாராக இல்லையென்றால் அஸ்திவாரமே ஆட்டம் கண்டுவிடும். அதன்பிறகு, ஒவ்வொரு நாளும் பிளவு அதிகரித்துக்கொண்டே போகும். பூகம்பம் வந்தபின்தான் பெற்றோர் விழித்துக்கொள்வார்கள். விவாகரத்துக்கள் அதிகரித்து வரும் இந்தக் கால கட்டத்தில், சில பெற்றோர்களும் காரணமாகிறார்கள் என்று தெளிவாகத் தெரிவதால்தான் இந்த விமரிசனம்!

**குழந்தை வளர்ப்பில் இன்னும் பல விஷயங்கள் இங்கு சொல்லப்படவில்லை** என்பதை ஒப்புக்கொள்கிறேன். உறவு எனும் கோணத்தை மட்டும் எடுத்துக் கொண்டேன். கவிஞர் கலீல் கிப்ரான் சொன்னார்: 'குழந்தைகள் நம்மிடமிருந்து பிறக்கவில்லை; நம் மூலமாகப் பிறக்கிறார்கள். உங்களுடன் அவர்கள் இருந்தாலும், உங்களைச் சேர்ந்தவர்கள் அல்ல.'

இந்த ஞானோதயம் இருந்தால் போதும் பெற்றோர். குழந்தை உறவு மகிழ்வைத் தரும்! சில பெற்றோர் முதியோர் இல்லத்திற்குத் தள்ளப்படும் நிலை வராது.

(பேசலாம்)

மாடலிங்: **ப்ரீதா, அருண், அஷ்னி, அர்னவ்**

படங்கள் : **யோகா, ஸ்ரீஹரி**

சுனந்தாஜி

**யா**னையின் துதிக்கைக்கே உரிய குணாதிசயம் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தேன். யானை தன்னுடைய துதிக்கையால் ஒரு பெரிய மரத்தையே வேரோடு சாய்க்கும் பலம் கொண்டது. அதே சமயம் ஒரு சிறிய ஊசியையும், லாகவமாக எடுக்கும் திறமை படைத்தது.

இப்படி இரண்டு நேரெதிர் சக்திகளை ஒருங்கே பெறுவது எவ்வளவு அபூர்வமானது?

மனிதனின் அறிவுகூட யானையின் துதிக்கையைப் போல் அபூர்வமானதுதான். மனித அறிவினால் இந்த உலகத்தில் உள்ள விஷயங்களை மட்டுமல்ல, அதற்கு அப்பாற்பட்ட விஷயங்களையும் புரிந்துகொள்ள முடியும்.

மனித அறிவின் வீரியத்தை முழுமையாகப் புரிந்துகொண்டு அதனை, அதிகபட்சமாக உபயோகிக்க வேண்டும். இருபது வயது இளைஞனைப் போல, ஐம்பது வயது மனிதரின் உடல் சுறுசுறுப்பாக இயங்குவதில்லை. காரணம் அவரது வயதும் வாழ்க்கை இயக்கமும்தான்.

எங்காவது போக வேண்டும் என்றால், நடந்து செல்லாமல் வாகனங்களைப் பயன்படுத்துகிறோம். படியேறிச் செல்வதற்கு இன்று லிஃப்ட், எஸ்கலேட்டர் என வந்துவிட்டன. பெண்களுக்கு வேலைச்சுமையைக் குறைக்க, ஏராளமான வீட்டு உபயோக சாதனங்கள் வந்துவிட்டன.



• படம் : ஸ்ரீஹரி

# தாண்டிப் போனால் என்ன?

ஆர்வமுடன் விளையாட்டுக்காக நேரம் ஒதுக்கி, விளையாடி உடலுக்கு

உரமூட்டியது போய், வீட்டில் டி.வி. முன்னால் அமர்ந்து எல்லா விளையாட்டு களையும் ரசிக்கிற காலம் வந்துவிட்டது. இப்படிப் பல்வேறு காரணங்களாலும் உடற்பயிற்சி இல்லாமல் போகிறது. சோம்பேறித்தனம் வந்துவிடுகிறது.



வெற்றி உங்கள் சாய்ஸ்! 21

உடலும் தளர்ந்து போகிறது. உங்களது ஒரு கையை, சில காலத்துக்கு எதற்குமே பயன் படுத்தாமல் வைத்திருந்து பாருங்கள். அது வலுவிழந்து போய்விடும். அதுபோலவே மனித அறிவையும் நாம் தொடர்ந்து பயன்படுத்திக் கொண்டே இருக்க வேண்டியது

மிகவும் அவசியம்.

பொதுவாகவே, அறிவை வளர்த்துக் கொள்வது என்பது பள்ளிக்கூடத்திலும் அதன்பிறகு பல்கலைக்கழகத்தில் படித்து, பட்டம் வாங்கிய கையோடு முடிந்து போய்விடுவதாகவும் பலரும் நினைக்கிறார்கள். அது மிக மிகத் தவறான எண்ணம்.

இன்னும் சிலர் தமது பணியில் தொடர்ந்து முன்னணியில் இருக்க அறிவைப் பெருக்கிக் கொள்வது அவசியம் என நினைக்கிறார்கள்.

ஆனால் உண்மையான அறிவு என்பது வாழ்க்கையின் அம்சங்களை நுணுக்கமாக அறிந்து, உண்மை என்ன என்பது குறித்து தெளிவைப் பெறுவது தான். இந்தத் தெளிவைப் பெறுகிற உண்மையை நோக்கிய அறிவுப் பயணத்தை வாழ்க்கையில் எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரமாக ஆரம்பிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது.

வாழ்க்கையில் பலரும் ஏதாவது ஒரு சமயத்தில், 'ஓ! நான் அப்படிச் செய்தது தவறு! அதைச் செய்திருக்கக் கூடாது!' என்று வருத்தமடைவது சகஜம்.

நீங்கள் ஒரு கட்டத்தில் சரி என்று நினைத்துச் செய்த விஷயத்தை இன்னொரு கட்டத்தில் உங்கள் மனது ஏற்க மறுத்துவிடுகிறது. இதனால், நமது செயல் தவறு என்கிற எண்ணம் ஏற்படுகிறது.

இதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து பார்த்தோமானால், எது சரி எது தவறு என்று அலசி, ஆராய்ந்து பார்த்து முடிவெடுக்கும் பயிற்சியை, நமது அறிவுக்கு அளிக்காமல் விட்டு விட்டோம் என்பது புலப்படும்.

தத்துவ ஞானி பிளேட்டோ சொன்ன கதை ஒன்றை எனது சொற்பொழிவுகளில் சொல்வது உண்டு.

காடும் மலையும் அடர்ந்த பகுதியில் ஒரு மலைக்குகை. மலைக்குள்ளே மிக உள்ளே செல்லும் பிரம்மாண்டமான குகை. ஒரு மலைவாசி இனத்தினர் பல தலைமுறைகளாக அந்த குகைக்குள்ளேயே வாழ்ந்து வந்தார்கள். எப்படியோ, எங்கே இருந்தோ தண்ணீர் வரும். கொஞ்சம் வெளிச்சம் வரும். மற்றபடி, அவர்கள், தலைமுறை தலைமுறையாக அந்த குகைக்குள்ளேயே பிறந்து, அங்கேயே வளர்ந்து, முதுமையடைந்து, மரணத்தையும் தழுவினார்கள்.

உலகம் என்பது அந்த மலைக் குகைக்கு வெளியிலும் இருக்கிறது என்பது அந்த மலைவாசி மக்களுக்குத் தெரியவில்லை என்பது மட்டுமில்லை. மலைக்குகைக்கு அப்பால் உலகம் இருக்கக்கூடும் என்று அவர்களால் கற்பனைகூட செய்து பார்க்க முடியவில்லை.

சூரியன் என்றால் என்ன என்பது அவர்களுக்குத் தெரியாது. சந்திரன் என்பது என்ன என்பது தெரியாது. இரவுக்கும் பகலுக்கும் வித்தியாசம் தெரியாது. தூக்கம் வரும்போது தூங்க வேண்டியது. கண் விழித்தவுடன், மற்ற செயல்களைக் கவனிப்பது என்று நாட்களைக் கடத்தினார்கள்.

ஒரு நாள் ஓர் இளைஞன் ஆதிவாசி இனத்து முதியவர் ஒருவரிடம், "நாம் இந்த இடத்திலேயே வசித்துக் கொண்டிருக்கிறோமே. இந்த இடத்தைத்

''தலைவரே! கேஸ் கம்பெனி ஆரம்பிக்க புறம்போக்கு நிலத்தை வளைக்கப் போட்டீங்களா?''

''ஆமாம்... அதுக்கென்ன இப்ப?''

''விஷயம் வெளியே 'லீக்' ஆகி நாறுது!''

- இரா. புதுப்பட்டி
ஜி.ஆர்.விஜய்



தாண்டிச் சென்றால் என்ன இருக்கும்?'' என்று கேட்டான்.

பட்டென்று முதியவரிடமிருந்து பதில் வந்தது. "அவ்வளவுதான். இதைத் தாண்டிப்போனால் வேறு ஒன்றுமே இருக்காது."

''உங்களுக்கு எப்படித் தெரியும்? போய்ப் பார்த்திருக்கிறீர்களா?''

"இல்லை. என் முன்னோர்கள் நான் இதே கேள்வியைக் கேட்டபோது, அவர்கள் சொன்ன பதில் இதுதான்."

''நான் போய்ப் பார்த்துவிட்டு வரட்டுமா?''

"பெரியவன் நான் சொல்கிறேன். நீ போய்ப் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லை''

"எனக்கு என்னவோ, ஒரு தடவை வெளியில் போய் என்ன இருக்கிறது என்று பார்த்துவிட வேண்டும் போலிருக்கிறது.

''உனக்குப் பைத்தியம் பிடித்துக் கொண்டிருக்கிறது என்று நினைக்கிறேன்."

"இல்லை... இல்லை... என் புத்தி நன்றாக இருக்கிறது. கேள்வி எழுப்புகிறது. விடையைத் தேடுகிறது."

"நீ எங்கேயும் போகக் கூடாது. மீறிப் போனால் சாபத்துக்குள்ளாவாய்!''

அப்போதைக்கு பேசாமல் இருந்துவிட்டான் அந்த இளைஞன். ஆனால் 'இந்த இடத்தைத் தாண்டிச் சென்றால், என்ன இருக்கும்?'' என்ற கேள்வி இன்னும் தீவிரமாய் அவனது மண்டையைக் குடைந்தது. அவனுக்குத் தூக்கம் வரவில்லை.

எப்படியும் இந்தக் கேள்விக்கு விடை கண்டுபிடித்தே திருவது என முடிவு செய்தான். மெதுவாக எழுந்தான். சுற்றும் முற்றும் பார்த்தான். தன்னை ஒருவரும் கவனிக்கவில்லை என்று உறுதி செய்து கொண்டான்.

தான் செய்வது சரியா? ஒரு வேளை பெரியவர்கள் தலைமுறை தலைமுறையாகச் சொல்லி வருவதுபோல, இந்த இடத்துக்கு அப்பால் ஒன்றும் இருக்காதோ என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான்.



**தே**வயானிக்கு இது ஏழாவது மாதம். வடபழனி 'க்ரீன் பார்க்' ஹோட்டலில் தடபுடலாக நடந்த வளைகாப்பில், 'கோலங்கள்' டீமே ஆஜராகி வாழ்த்தியதாம். கை நிறைய கலகலக்கும் வளையல்கள் இருப்பதால் அதை, புடைவைத் தலைப்பால் மறைத்தபடியே படமாக்கிவிட்டாராம் இயக்குநர்.

'முதிய தலைமுறை எதையோ நம்பிக் கொண்டிருக்கட்டும். அதையே நீயும் நம்ப வேண்டுமா? எதைப் பற்றியும் கவலைப்படாதே! உன் மனத்தில் எழுந்து விட்ட கேள்விக்கு விடை காணப் புறப்படு!' என்று ஊக்கம் கொடுத்தது அவனது அறிவு.

**மெ**துவாக எழுந்து நடக்க ஆரம்பித்தான். இருள் சூழ்ந்த குகைக்குள்ளே நடப்பது மிகவும் சிரமமாக இருந்தது. தட்டுத் தடுமாறி சில இடங்களில் கீழே விழுந்து, எழுந்தான். உடலில் ஆங்காங்கே சிராய்ப்புகள்.

தொடர்ந்து நடந்துகொண்டே இருந்தான். கண்ணுக்கு எட்டிய தூரமெல்லாம் இருள் சூழ்ந்திருந்தது.

தான் வந்த வழியைத் திரும்பிப் பார்த்தான். தன் இனத்து மக்கள் வசிப்பதற்கான அறிகுறிகள் எதுவுமின்றி, இருள் சூழ்ந்த அமைதியையே காண முடிந்தது. அவன் மனத்தில் சற்றே பயம் கவ்விக் கொண்டது. கைகள் இலேசாக நடுங்கின.

(வெற்றி தொடரும்)

# தமிழச்சி கவிதைகள்

# மழை

நேர்செய்து வந்திருக்கலாம்
உன்னுடனான பிணக்கை
குளிர்வித்துப் போன மழை
நனைத்திருக்குமோ -
என் சுடு சொல்லில்
அதிர்ந்த
பீங்கான் கோப்பையையும்
குழந்தையையும்

விட்டுச் சென்ற சேறாகவும்
விரும்பித் தாவும் குழந்தையாகவும்
ஒவ்வொருவருக்கும்
ஒரு துளி மழை!

தீர்மானித்தவற்றை நடைமுறைப்
படுத்தும்
நியமங்களுடன், திட்டமிட்ட
நீண்ட விவாதத்தில் நாம்.
திடீரென வெளியே சந்தித்த
நண்பனைப் போல்
யாருடனோ உரக்கச்
சிரித்துப் போகிறது மழை.

உதாசீனப்படுத்தப்பட்ட
இராப்பிச்சையின் பசியாய்க்
கதவருகே தேம்பியிருந்தது
உக்கிரமான மழையின்
ஒரு கேவல்

ஒரு யாத்ரீகனின்
கணப்படுப்பைக் கணக்கில் எடுத்துக்
கொள்ளாத பெருமழையென நீ
மலைமேயும் ஆடுகளின்
கருணையால் மறுமழைக்குமான
கதகதப்புடன் நான்.



ஓவியம்: அனந்தபத்மநாபன்

## புத்ததேவின் புதுக் காதலி!

நம்ம காம்ரேட் புத்ததேவ் பட்டாச்சார்யா, அதாங்க மேற்கு வங்க முதல்வருக்கு முதல் காதலி கிரிக்கெட்தான். ஆனா சமீபகாலமா இவங்க ரெண்டு பேருக்கும் என்ன ஊடலோ தெரியல... திடுதிப்புன்னு கோல்ஃப் பக்கம் திரும்பியிருக்கார். மாநிலத்துல முதலீடுகளை அதிகரிக்க இந்த கோல்ஃப் ரொம்ப உதவியா இருக்கும்னு அவர் நினைக்கறாராம். அதனால கோல்ஃப் போட்டிகளை நடத்த திட்டமிட்டிருக்காரு. இவங்க, நடுவே ஊடல் வராம இருந்தா சரி.

## புது கும்பிடு!

பி.ஜே.பி.யிலயிருந்து சமீபத்துல உமாபாரதிக்கு அவுட்பாஸ் கொடுத்துட்டாங்கல்ல. அந்தக் கோபத்துல போபால்ல இருந்து அயோத்திக்கு நம்ம புரட்சிப்புயல் பாணில வாக்கிங் போக ஆரம்பிச்சிருக்காங்க. எதுக்காக இப்படிக் கும்பலா நீதி கேட்டு நெடுவாக்கிங்னு கேட்டா "ராமர் கோவிலைக் கட்டணும்னு சொல்லிப் போகல... சும்மா போயி ராமரைப் பார்த்து ஒரு பெரிய கும்பிடாப் போட்டுட்டு வரலாம்னுதான் போறேன்"னு அசத்தல் டயலாக் விட்டிருக்காங்க. பெரிய கும்பிடு ராமருக்கா? இல்ல... அத்வானிக்கா?

## புது தெரபி!

சும்மா நீச்சலடிக்கறதுக்குப் பதிலா ஒரு ஃப்ரெண்ட்கூட நீச்சல் அடிச்சா ரொம்ப குஷியாத்தானே இருக்கும்? இப்போ நீச்சல் அடிக்கறதுக்காக ஒரு புது ஃப்ரெண்ட் கிடைச்சிருக்குது. அது வேற யாருமில்ல... டால்ஃபின்தான். அதுங்ககூட நீச்சலடிச்சா மன அழுத்தத்தால பாதிக்கப்பட்டவங்க மனசு ரொம்ப இலேசாயிடுதாம். இந்த டால்ஃபின் தெரபி, சைக்கோ தெரபி-டிரெக் தெரபி எல்லாத்தையும்விட ரொம்ப சீக்கிரம் நிவாரணம் தருதாம். பாத்துங்க... நம்ம ஆளுங்களோட நீச்சலடிச்சு டால்ஃபினுக்கு மன அழுத்தம் வந்துடப் போகுது...

## புதுவீடு... புது உருளை!

பீகார் மக்கள் லாலுவுக்கு சென்ட் ஆஃப் பார்ட்டி கொடுத்துட்டதால தன்னோட முதல்வர் பங்களாவை கிட்டத்தட்ட காலி பண்ணிட்டு மூட்டை முடிச்சுகளோட கிளம்பிட்டார். போற போக்குல வீட்ல, குளத்துல இருந்த எல்லா மீன்களையும் அள்ளி பையில போட்டுக்கிட்டு கிளம்பிட்டாரு... "ஏன், தோட்டத்துல இருக்



கிற உருளைச் செடிகளை மட்டும் விட்டுட்டீங்க"...ன்னு கேட்டா "பாவம் அதை எடுத்துட்டுப் போயிட்டா நிதிஷ் சிப்ஸுக்கு என்ன பண்ணுவார்... அதான் விட்டுட்டேன்"ன்னு சொல்லியிருக்கார் லாலு. அடேயப்பா எம்புட்டு பெரிய மனசு லாலுவுக்கு... இவரைப் போயி எப்படித் தோற்கடிச்சாங்க?...

## புது சிகிச்சை!

நம்ம மாம்பலம், சைதாபேட்டை ஸ்பெஷல் நோயான யானைக்கால் வியாதிக்கு புதுசா ட்ரீட் மெண்ட் டெக்னிக்கை அறிமுகப்படுத்தியிருக்காங்க. ரொம்ப இலேசுபாசா இதைக் கண்டுபிடிச்சுட்டதா நினைச்சுக்காதீங்க... கிட்டத்தட்ட 15 வருஷம் ஆராய்ச்சி பண்ணி விதவிதமான விலங்குகள் மற்றும் மனிதர்களிடையே சோதனை செஞ்சு உலக சுகாதார அமைப்பு மற்றும் இந்தியன் கவுன்சில் ஃபார் மெடிக்கல் ரிசர்ச் இரண்டு அமைப்புங்ககிட்டயும் சான்றிதழ் வாங்கி யிருக்காங்க.

## புது நாட்டாமை!

இன்னிக்கு குவிஞ்சு கிடக்குற வழக்குகளால மூச்சுத் திணறிக்கிட்டு இருக்குதுங்க நீதித்துறை. அதுக்குக் கொஞ்சம் ரிலீஃப் தர்றதுக்காக புதுசா ஒரு மையத்தை நானி பல்கிவாலா பவுண்டேஷன் உருவாக்கியிருக்காங்க. இவங்களோட வேலை என்ன தெரியுமா? அண்ணன் - தம்பி சண்டை, வாய்க்கால்-வரப்பு தகராறு, சொத்துத் தகராறு மாதிரி சின்னச் சின்ன வழக்குகளை எடுத்து சம்பந்தப்பட்டவங்களை கூப்பிட்டுப் பேசி, பிரச்னையைத் தீர்க்கப் போறாங்களாம். இதுல நாட்டாமை பண்ணப் போறது ஓய்வு பெற்ற சுப்ரீம் மற்றும் ஹைகோர்ட் நீதிபதிகள்தான். பைசாகூட அதிகம் செலவாகாதாங்க...! நல்ல திட்டம்னுதான் தோணுது! நடைமுறையில சாத்தியப்படுமா?

- கலை



# திரள் நியூஸ்!

# 11:59:59



“அக்கா...! பூ வேணு மாக்கா...?”

“பத்து ரூபாய்க்கு மூணு முழம் தர்றதாயிருந்தா கூடையை இறக்கி வை... இல்லேன்னா இடத்தைக் காலி பண்ணு...” நேத்ரா எழுந்து வந்தாள்.

“சரிக்கா! உங்களுக்கோசரம் இரண்டு முழம் தர்றேன்...” சொல்லி பூவை முழம் போட்டு நேத்ராவிடம் நீட்டியவள் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு குரலைத் தாழ்த்தினாள்.

“அக்கா... உங்கப்பா வீட்ல இருக் காரா...?”

“பின்னால தோட்ட வேலை பார்த்துட்டிருக்கார்... எதுக்காக கேக்கிறே...?”

“இந்தாக்கா... மொதல்ல... இதப் பிடிங்க...”

“என்னடி இது...?”

“ராபர்ட் அண்ணன் உங்ககிட்டே இதை கொடுக்கச் சொன்னார்” சொல்லி ஒரு கடிதத்தை நேத்ராவின் கையில் திணித்தவள் பூக்கடையை எடுத்துக் கொண்டு உடனே கிளம்பிவிட்டாள்.

நேத்ரா வியர்த்த முகத்தோடு வீட்டின் பின்கட்டைத் திரும்பிப் பார்த் தாள். அப்பா சங்கரநாராயணன் கிணற் றடியில் ஏதோ வேலையாய் இருப்பது தெரிந்தது. வேகவேகமாய் தன்னுடைய அறைக்குள் நுழைந்து படபடக்கிற இருதயத்தோடு அந்தக் கடிதத்தைப் பிரித்தாள். எழுத்து வரிகள் கண்களுக் குள் பாய்ந்தன.

நேத்ரா படபடப்பு அடங் காமல் இரண்டாவது தடவை யாய் அந்தக் கடிதத்தைப் படித் துக் கொண்டிருக்கும்போது தோளில் மெதுவாய் கை விழுந் தது.



திடுக்கிட்டுப் போய்த் திரும்பிப் பார்த்தாள்.

அவளுடைய தங்கை மித்ரா பாட்டு வகுப்பிலிருந்து திரும்பியிருந்தாள்.

“என்னக்கா! இப்படி வேர்த்து வழி யறே...? கையில என்ன காகிதம்...? லெட் டரா...?”

“மி... மித்ரா... அது... வந்து...” நேத்ரா திணறிக் கொண்டே கடிதத்தை மறைக்க முயல மித்ரா, அதைத் தட்டிப் பறித்தாள்.

“ஓ...! உன் ரோமியோவோட லெட்டரா...?”

“ஏய்... மித்ரா...! சத்தம் போடாதே....! அப்பா காதுல விழுந்துடப் போவுது...”

“பயப்படாதேக்கா...! அப்பா இன்னும் தோட்டத்துப் பக்கம்



தான் இருக்கார்'' சொன்னவன் கடிதத்தை பரபரவென்று படித்து முடித்து விட்டு தன்னுடைய இடுப்பில் இரண்டு கைகளையும் வைத்தபடி நேத்ராவை ஏறிட்டான்.

"என்ன ஒரு தைரியம்...?"

''நிறைய தமிழ் சினிமா பாக்க வேண்டாம்ன்னு சொன்னா... கேட்டாத்தானே?''

''நீ என்ன பண்ணப் போறேக்கா...?''

''என்ன பண்றதுன்னு தெரியலையே...?''

"நான் சொல்றபடி கேக்கறியா?"

"சொல்லு..."

''ராத்திரி பன்னிரண்டு மணிக்கெல்லாம் நீ சர்ச்சுக்குப் போறதைப் பத்தி நினைச்சுக்கூட பார்க்க முடியாது. அப்பாவுக்குத் தெரிஞ்சா நீ குக்கர்ல வெச்ச கோழி தான்...!''

''நான் போகலைன்னா ராபர்ட் வந்துருவாரே?''

''அதெல்லாம் உதார்...! நம்ம தெருப் பக்கம்கூட உன்னோட ரோமியோ எட்டிப் பார்க்கமாட்டார்... பயப்படாதே!''

''அப்படிச் சொல்லாதே மித்ரா...! ராபர்ட்டைப் பற்றி உனக்குத்... தெரிஞ்சது... அவ்வளவுதான். சில விஷயங்களில் அவர் பிடிவாதம் பிடிச்சா பிடிச்சது தான்...''

''அப்படீன்னா... நீ சர்ச்சுக்குப் போய்

ராஜேஷ்குமார்

ராத்திரி பன்னிரண்டு மணிக்கு ஹேப்பி நியூ இயர் சொல்லப் போறே... அப்படித் தானே...?"

"எனக்கு வேற வழி தெரியலையே மித்ரா.."

"சரி... சரி... இப்ப ஒண்ணும் பேசாதே! அப்பா வர்ற சத்தம் கேட்குது.." மித்ரா சொல்லிக் கொண்டிருக்கும்போதே சங்கர நாராயணன் அறைக்குள் நுழைந்தார்.

"என்னம்மா... ரெண்டு பேரும் உலகப் போர் அது இதுன்னு பேசிட்டிருக்கீங்க...?"

"அது... அது ஒண்ணும் இல்லேப்பா.. மூன்றாவது உலகப் போர் கூடிய சீக்கிரமே வந்துடும்னு நேத்ரா சொல்றா. நான் வராதுன்னு எதிர்வாதம் பண்ணிட்டிருந்தேன்."

சங்கரநாராயணன் சிரித்தார். "போர் வர்றதும் வராததும்... மனுஷங்களோட கையில் இல்லேம்மா. கிரகங்களோட கையில்தான் இருக்கு. மூன்றாவது உலகப் போர் எப்ப வரும் தெரியுமா? சனி வீட்ல செவ்வாயும், செவ்வாய் வீட்ல சனியும் இருந்து, மூணு பாபக்கிரகங்களோட பார்வைகள் அந்த கிரகங்கள் மேல் பட்டா... நிச்சயம் மூன்றாவது உலகப் போர்தான். அப்படி ஒரு சூழ்நிலை வர்றதுக்கு இன்னும் பதினைந்து வருஷம் இருக்கு. அதைப் பத்தி இப்ப என்ன கவலை...? சுவாமி ரூம்ல போய் விளக்கை ஏத்தும்மா நேத்ரா. ஆறு மணியாயிடுச்சே..."

"இதோ போறேம்பா." நேத்ரா பூஜையறையை நோக்கிப் போனாள்.

''இந்த இடம் ஏதோ ஒரு அரசியல்வாதியோடது போல!''

"எப்படிச் சொல்றே?"

"போர்டைப் பாரு... 'பொறம் போக்கு நகர்'னு எழுதியிருக்குதே!"

- யமுனா ரங்கநாதன்




ராத்திரி மணி 11.30.

நேத்ராவின் அறைக்குள் பூனை போல் நுழைந்தாள் மித்ரா. மெல்ல குரல் கொடுத்தாள்.

"அக்கா..."

"காலைல கோயில் பஜனைக்குப் போகணும்னு இப்பல்லாம் அப்பா சீக்கிரமா தூங்கிப் போயிடறாரே. நீ போய் உன்னோட ரோமியோவுக்கு ஹேப்பி நியூ இயர் சொல்லிட்டு ஒரு பத்து நிமிஷம் பேசிட்டு வந்துடு."

"மித்ரா! அப்பா திடீர்னு கண் விழிச்சுட்டார்ன்னா...? சர்ச்சல யாராவது பார்த்துட்டு நாளைக்குக் காலையில் அப்பாகிட்டே சொல்லிட்டாங்கன்னா..."

"அக்கா... சர்ச்சல இப்போ கூட்டம் அதிகமாயிருக்கும். கூட்டத்தோடு கூட்டமா நின்னு உன்னோட ரோமியோவுக்கு 'ஹேப்பி நியூ இயர்' சொல்லிட்டு உடனே புறப்பட்டு வந்துடு. வேணும்னா அடையாளம் தெரியாமே இருக்கறதுக்காக தலைக்கு ஸ்கார்ப் கட்டிக்கோ. நீ போய்ட்டு திரும்பற வரைக்கும் நான் வீட்டுப் பின்பக்க கதவைத் திறந்து வெச்சுகிட்டு வெயிட் பண்றேன். மித்ரா இருக்க பயமேன்? நீ புறப்படக்கா. அப்படியே என்னோட புத்தாண்டு வாழ்த்துகளையும் உன்னோட ரோமியோகிட்டே சொல்லிடு.."

நேத்ரா எழுந்தாள் துணிச்சலோடு.

புத்தாண்டு பிறக்க இன்னும் பத்து நிமிஷம் பாக்கியிருந்தபோது, நேத்ரா அந்தோணியார் சர்ச்சுக்குள் நுழைந்தாள். சர்ச் முழுவதும் மெழுகு வத்திகள் ஒளிர்ந்து கொண்டிருக்க, மக்கள் வெள்ளம் வண்ண பலூன்களை உயர்த்திப் பிடித்துக்கொண்டு உற்சாகத்தில் இருந்தது. கதம்பமாய் பேச்சுக் குரல்கள்.

நேரம் 11.51. நேத்ரா இந்தக் கும்பலில் ராபர்ட்டைத் தேடிய விநாடி அவளுடைய தோளின் மேல் கை விழுந்தது.

திரும்பினாள்.

ராபர்ட் சிரித்தபடி நின்றிருந்தான். "என் அழைப்பை ஏற்று வந்தமைக்கு நன்றி தேவதையே...!"

நேத்ரா அவனை முறைத்தாள்.

"இதெல்லாம் சரியில்லை. நான் உயிரைக் கையில் புடிச்சுட்டு வந்திருக்கேன். என்னோட அப்பாவுக்குத் தெரிஞ்சா என்னாகும் தெரியுமா?

"ஒண்ணும் ஆகாது..."

"அப்படீன்னு நீங்க நினைக்கறீங்க. அது தப்பு. இதோ பாருங்க ராபர்ட். எங்க அப்பாவுக்கு ஜாதி, மதம், குலம், கோத்திரம் இதிலெல்லாம் கொஞ்சம்கூட நம்பிக்கை கிடையாது. ஆனா ஜாதகம், ஜோதிடத்துல அபார நம்பிக்கை. நீங்களும் நானும் காதலிக்கறோம்னு தெரிஞ்சவுடனேயே உங்க அப்பா அம்மாகிட்டே பேசி உடனே கல்யாணத்தைப் பண்ணி வெச்சார். ஒரு வருஷம் சந்தோஷமா வாழ்க்கை நடத்தினோம். போன மாசம் எங்கப்பா உங்க ஜாதகத்தையும் என்னோட ஜாதகத்தையும் பார்த்துட்டு ஏதோ களத்திர தோஷம் இருக்குன்னு சொல்லி ஏப்ரல் மாசம் வரைக்கும் நாம பிரிஞ்சு இருந்தா நல்லதுன்னு சொன்னார். நீங்களும் 'சரி மாமா'ன்னு சொன்னீங்க. ஆனா... இன்னிக்கு... பூக்காரி மூலமா கூரியர் சர்வீஸ் நடத்தறீங்க... ராத்திரியில வீட்டை விட்டு வெளியே வரச் சொல்றீங்க. இது நியாயமா...?"

"இதோ பார் நேத்ரா. நீயும் நானும் நல்லாயிருக்கணும்னு உங்கப்பா ஜோதிடத்தைக் காரணம் காட்டி ஏதோ சொல்லியிருக்கார். அது சரியா தப்பான்னு எனக்குத் தெரியாது. ஆனா உங்கப்பாவோட வார்த்தைகளுக்கு நான் மதிப்புக் கொடுத்தாகணும். புது வருஷம் பிறக்கறப்போ நீ என் பக்கத்துல இருக்கணும்னு நினைச்சேன். பரஸ்பரம் 'ஹேப்பி நியூ இயர்' சொல்லிக்கணும்னு ஆசைப்பட்டேன். அவ்வளவுதான். இனி ஏப்ரல் மாசம் வரைக்கும் இந்த ராபர்ட் உனக்குத் தொந்தரவு கொடுக்கமாட்டான்"

நேத்ரா கண்களில் மின்னும் நீரோடு ராபர்ட்டையே பார்த்துக் கொண்டிருக்க -



**"இந்த வருஷமாவது ஒழுங்கா டயட்ல இருக்கணும்னு வருஷா வருஷம் சபதம் எடுப்பேன். ஹூம்...! அதெல்லாம் எங்க முடியுது?" என்று பெருமூச்சு விடுகிறார் நயன்தாரா.**

சர்ச் முழுவதும் எரிந்து கொண்டிருந்த மின் விளக்குகள் அணைந்தன. மணிக்கூண்டு கடிகாரத்தில் நேரம் 11.59. ஜனங்களின் ஆர்ப்பரிப்பில் விநாடிகள் வேகமாய் விழுந்து -

மணி பன்னிரண்டைத் தொட, விளக்குகள் பளிச்சிட்டன. சர்ச் மணி ஒலித்தது.

"ஹேப்பி நியூ இயர்... நேத்ரா!"

"ஹேப்பி நியூ இயர்... ராபர்ட்!"

கண்களால் வாழ்த்துகளைப் பரிமாறிக் கொண்ட ராபர்ட்டும் நேத்ராவும் சரியாய் 12.01க்கு சர்ச்சைவிட்டு வெளியே வந்தார்கள். போன நிமிடம் கிடைத்த சின்ன சந்தோஷங்களோடு எதிரெதிர் திசைகளில் நடக்க ஆரம்பித்தார்கள்.

**வே**கமாக நடந்த நேத்ராவை ஒரு பத்தடி விட்டு ரகசியமாகவும் பாதுகாப்பாகவும் தொடர்ந்து கொண்டிருந்த சங்கர நாராயணன் நேத்ரா கொல்லைப்புற வழியாக வீட்டுக்குள் நுழைந்ததும், மெல்லிய சிரிப்போடு தன் அறைக்குள் போய் ஓசைப்படாமல் படுத்துக் கொண்டார்.

○

# அனிதா ரத்னத்தின் 'ஆர்ய தாரா'!

"பௌத்தர்கள் வணங்கும் அம்பாள், திபெத்திய அம்பாள் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அவர்கள் 'தாரா' என்கிறார்கள்!" என்று விளக்க ஆரம்பிக்கிறார் அனிதா ரத்னம். பரதநாட்டியம், மாடர்ன் டான்ஸ் என இரண்டு வகைகளிலும் தமக்கென ரசிகர்களை உருவாக்கிக் கொண்டவர் அனிதா.

'ஆர்ய தாரா' என்ற இவரது புதிய படைப்பு இரண்டு பகுதிகளில் அமைந்திருக்கிறது.

முதல் பகுதி 'ஆர்யா'. ஆர்ய சதகம் என்ற, தேவியின் மீது படைக்கப்பட்ட லலிதா சஹஸ்ர நாமம், காளி கவுத்துவம் தவிர, சியாமா சாஸ்திரியின் ஆகிரி ராகப் பாடலான 'மாயம்மா' எல்லாம் ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டது. "இதில் மொத்தம் ஐந்து ஐட்டங்கள். முதல் பகுதியில் என் குழுவினர் செய்திருக்கிறார்கள்" என்கிறார் அனிதா ரத்னம்.

"இரண்டாவது பகுதிதான் தாரா. திபெத்திய அம்பாள். நம் லட்சுமி, சரசுவதி, அம்பாள் எல்லாம் சேர்ந்த வடிவம்தான் தாரா. இது கொஞ்சம் மாடர்ன். புதிதாக ஒன்றுமில்லை என்றாலும், இந்த காம்பினேஷனில் யாரும் பார்த்ததில்லை. ஞானி அரவிந்தர் 'மதர்' என்ற தன்னுடைய கட்டுரையில் மகாலட்சுமி, சரசுவதி, மகாகாளி சேர்ந்து அன்னை வடிவம் பெற்றதாக எழுதியிருக்கிறார். இதைத்



தான் 'தாரா'வுக்கு அடிப்படையாக எடுத்துக் கொண்டேன்."

"இந்த திபேத்திய 'தாரா'வுக்குத் தேவையான விஷயங்கள் எங்கேயிருந்து உங்களுக்குக் கிடைத்தன?"

"மைசூர் அருகே, குஷால்நகரில் உள்ள பைலகுப்பே என்ற திபேத்தியர்கள் வசிக்கும் இடத்திற்குப் போய்த்தான் திரட்டினேன். அவர்களின் ஆசியோடுதான் இந்த 'தாரா'வைப் படைத்திருக்கிறேன்!" என்கிறார் அனிதா.

முதல் பகுதி 'ஆர்யா'வில் கர்நாடக இசையை அடிப்படையாகக் கொண்ட நடன அமைப்பு இருக்கும். இரண்டாம் பகுதியில் பௌத்த இசையை அடிப்படையாகக் கொண்ட நடனம் இருக்குமாம். அதே போல, முதல் பகுதியில் பரதநாட்டியம் சார்ந்த கோரியோகிராஃபி இருக்கும். இரண்டாம் பகுதியில் மாடர்ன் டான்ஸ் வகை இருக்கும்.

இந்த 'ஆர்ய தாரா' நடன நிகழ்ச்சி நியூயார்க், சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து என பல நாடுகளில் நடைபெறவிருக்கிறது.

"இதில் சம்பிரதாயமான நாட்டிய அமைப்பும் வித்தியாசமான ட்ரீட்மெண்ட்டும் என்னுடைய வழியில் அமைத்திருக்கிறேன். என்னுடைய உழைப்புக்கு ஒரு சுதந்திரம் உண்டு. அதாவது நான் நினைத்தபடி இந்த நிகழ்ச்சியை அமைத்திருக்கிறேன். சென்னை ஆடியன்சுக்கும் அதேபோல எழுந்து போவதற்குச் சுதந்திரம் இருக்கிறது!" என்கிறார் அனிதா ரத்னம்.

- சாருகேசி

# நடக்குமென்பார்; நடக்கும்!

25.12.2005 முதல்
31.12.2005 வரை

தஞ்சை பரத்வாஜ்





### மேஷம் :

நற்பலன் மிகுந்த வாரம். வெற்றிக் கனியை எட்டிப் பிடிப்பீர்கள். தனம், குடும்பம், வாக்கு மேன்மை பெறும். சுபகாரிய பேச்சு வார்த்தை நடக்கும். உத்தியோகத்தில் முற்போக்கான சூழ்நிலை ஏற்படும். கணவர் / மனைவி உறவு மேல் ஓங்கும். சிலருக்கு புத்திரபாக்கியம் ஏற்படும். ஆஞ்சநேயர் வழி பாடு செய்து வருதல் நலம் தரும்.

### ரிஷபம் :

ராசிநாதன் சுக்ரன் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சாரம். ரொம்பவும் நற்பலன் தரும் வாரம். வழக்கு, வியாஜ்ஜியம் வெற்றி அளிக்கும். தீர்க்க முடியாத பிரச்னைகளுக்குத் தீர்வு கிடைக்கும். இருக்கும் இடம், தொழில் ஸ்தானம் போன்றவற்றில் இருந்து வந்த குழப்பம் போகும். குழந்தைகளைப் பற்றிய மனக்கவலை விலகும். நெருங்கிய உறவினர், நண்பர், குழந்தைகளை விட்டு இடம் மாறிச் செல்லும் படியான சூழ்நிலை வரும். கணவர் / மனைவி விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. ராகு/கேது/குரு/சனி பகவானுக்குத் தீபம் ஏற்றவும்.

### மிதுனம் :

ராசிநாதன் ராசிக்கு 7-ல் சூரியனுடன் சேர்க்கை பெற்று ராசியைப் பார்ப்பது விசேஷ யோகம். எந்தக் காரி யத்திலும் வெற்றி ஏற்படும். சுபகாரியம் கைகூடும். தனம், வாக்கு, மேன்மை பெறும். கணவர் / மனைவி உறவு நன்றாக இருக்கும். உத்தியோகத்தில் நல்ல வேலை வாய்ப்புத் தேடி வரும். பன்னாட்டு நிறுவனத்தில் வேலை கிடைக்கும். கேது/ ராகு வழிபாடு நல்லது.

### கடகம் :

வித்தையில் மேன்மை பெறும் வாரம். பாராட்டும் பரிசுகளும் கிடைக்கும். கல்வியில் அதிக மதிப்பெண்கள் பெறுவீர்கள். கணவர்/மனைவி உறவு நற்பலனைத் தரும். முயற்சி செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். அண்டை நாட்டு அழைப்பு கிட்டும். இடமாற்றும் ஏற்படும். ஊதிய உயர்வு கிடைக்கும். வீடு

வாகனம் வாங்கலாம். உல்லாசப் பிரயாணம் ஏற்படும். குழந்தைகள் வழியில் சுபகாரியம் கைகூடும். குரு, சனி வழிபாடு அவசியம். குரு, சனிக்குரிய தினங்களில் தீபம் ஏற்றி வரவும் நற்பலன் கிடைக்கும்.

### சிம்மம் :

ராசிநாதன் ராசிக்கு 5ம் இடத்தில் புதனுடன் சஞ்சாரம் செய்வதால் திட்டங்கள் யாவும் எண்ணியபடி நடைபெறும். குழந்தைகள் வழியில் சுபச்செலவுகள் ஏற்படும். வேலைப்பளு அதிகரிக்கும். நெருங்கிய உறவினர்/நண்பரை விட்டுத் தொலைதூரம் போகும் வாய்ப்பு ஏற்படும். கணவர் / மனைவி விட்டுக் கொடுத்துப் போவது நற்பலனைத் தரும். கைப்பொருள் மீது கவனம் செலுத்தவும். சனி, ராகு, கேது, குரு வழிபாடு அவசியம்.

### கன்னி :

மகிழ்ச்சிகரமான வாரம். மனக்குழப்பம் போகும். சுபகாரியங்கள் கைகூடும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். உடல் ஆரோக்கியம் பாதிக்காது. புதிய வீடு வாசல் வாங்கலாம். திருமணம் கைகூடும். உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றம் கிட்டும். வியாபாரிகள் தொழிலில் அதிகப் பலனை அடைவார்கள். கணவர் / மனைவி உறவு நன்றாக இருக்கும். ராகு / கேதுவை வழிபட்டு தீபம் ஏற்றவும்.

### துலாம் :

சிறப்பான வாரம். தொட்டது துலங்கும். தனம், குடும்பம், வாக்கு மேல் ஓங்கும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். திருமண காரியம் கை கூடும். செலவுகள் கட்டுக்கடங்கி இருக்கும். நோய் நொடி பாதிக்காது. கல்வியில் மேன்மை கிட்டும். தொழில் வழியில் நல்ல முன்னேற்றம் பெறுவீர்கள். ஆஞ்சநேயர் நாமாவளி படித்து வரவும். குருவுக்கு தீபம் போடவும்.

### விருச்சிகம் :

வழக்கு, வியாபாரம் வெற்றி தரும். வாக்கு, தனம் மேன்மை பெறும். நீண்ட தூர பிரயாணம் ஏற்படும். பொருளாதாரம் பாதிக்காது. புதிய வீடு, வாசல் வாங்கலாம். புதிய தொழில் துவங்கலாம். குடும்பத்தில் திருமண காரியம் கைகூடும். மதிப்பு, மரியாதை பெருகும். குரு/ராகு/கேது வழிபட்டு வருதல் நலம்.

### தனுசு :

அற்புத வாரம். எண்ணிய காரியங்கள் யாவும் வெற்றியை அளிக்கும். தடைவிலகி திருமணம் கைகூடும். நண்பர் உறவினர் மூலம் பாராட்டுக் கிடைக்கும். மனத்தில் தைரியமும், தன்னம்பிக்கையும் பெறுவீர்கள். குழந்தைகளால் சந்தோஷம் கிட்டும். பொருளாதார முன்னேற்றம் கிட்டும். ராகு/கேதுவுக்குத் தீபம் ஏற்றவும். நற்பலன் கிடைக்கும்.

### மகரம் :

ராசிநாதன் ராசிக்கு 7ல் சஞ்சாரம். நன்மையான வாரம். தொட்டது துலங்கும். நினைத்தது நடக்கும். கொடுக்கல் வாங்கல் நற்பலனை அளிக்கும். குடும்பத்தில் சுபச்செலவு ஏற்படும். குழந்தைகளால் சந்தோஷம் கிட்டும். பொருளாதாரப் பற்றாக்குறை இருக்காது. சிலருக்கு புத்திர பாக்கியம் ஏற்படும். தெய்வபலன் கிட்டும். ஆரோக்கியம் பாதிக்காது. செலவுகள் சுபசெலவுகள் ஆக இருக்கும். திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம்

**என் மகளுக்கு எப்பொழுது திருமணம் நடக்கும்?**

**- என். நிர்மலா, பெங்களூர்**

23 வயதில் திருமணம் கைகூடும். வெளிநாட்டில் சம்பாதிக்கும் பையன் அமைவான். நல்ல படித்த, பண்புள்ள, இசை ஆர்வமுள்ள வரன் அமையும். உறவில் திருமணம் முடியாது. தோஷம் எதுவுமில்லை. 2006-ல் திருமணம் நடக்கும்.

**என் பெண்ணின் திருமணம் ஐந்து வருடங்களாகத்**

## பரத்வாஜ் பதில்கள்

தடைபட்டு வருகிறதே!

- வி.வி. நாகநாதன், பெங்களூர்

உங்கள் பெண்ணுக்கு 33 வயதில் திருமணம் நடக்கும். உறவில் கிடையாது. நான்கு இடம் பார்த்தால், மூன்று இடம் தட்டிப் போகும். வெளிநாட்டில் சம்பாதிக்கும் பையன் அமைவான். பரிகாரம் தேவையில்லை.

**என் சகோதரனின் மகளின் ஜாதகம் அனுப்பியுள்ளேன். அவளது திருமணம் எப்பொழுது?**

**- சி.எச். சுப்ரமணியன், திருச்சி**

உங்கள் சகோதரர் மகளுக்கு 28 வயதில் திருமணம் முடியும். தூரதேசத்தில் வேலை செய்யும் பையன் அமைவான்.

**என் பையனுக்கு எப்பொழுது திருமணம் நடக்கும்?**

**- சி.சங்கரநாராயணன், மேற்கு மாம்பலம்**

உங்கள் பையனுக்கு குருதசை நடைபெறுகிறது. வரக்கூடிய மனைவி அதிகம் படித்தவளாகவும் வேலையில் உள்ள பெண்ணாகவும் அமைவாள். உடன்பிறப்பு ஒருவர் உள்ள இடத்தில் பெண் அமையும். 2006-ல் திருமணம் முடியும்.

**எனது மூன்றாவது மகள் திருமணம் எப்பொழுது நடக்கும்?**

**- வி. கிருஷ்ணமூர்த்தி, சென்னை**

தங்கள் பெண்ணுக்கு 24 வயதில் திருமணம் முடியும். நல்ல படித்த, பண்புள்ள நல்ல வேலையிலுள்ள பையன் அமைவான். உடன்பிறப்பு ஒருவர் உள்ள வரன் அமையும். பரிகாரம் வேண்டாம்.

**எனது இளையமகளின் ஜாதகம் அனுப்பியுள்ளேன். அவளது படிப்பு, எதிர்காலம் பற்றிக் கூறுங்களேன்.**

**- பெயர் வெளியிட விரும்பாத திருச்சி வாசகர்**

உங்கள் பையன் ஜாதகப்படி 19 வயது வரை ராகு தசை நடக்கும். 27.5.2007க்கு மேலே குருதசை ஆரம்பம். ராகு தசை விளையாட்டுப் பித்தாக இருக்கும். அதன்பிறகு வரும் குரு தசையில் படிப்பில் நல்ல முன்னேற்றத்துடன், பொறுப்புள்ள பையனாக வருவான். ராகு பகவானுக்கு வெள்ளிக்கிழமை தீபம் போடவும். குருதசை நல்ல மாற்றத்தை அளிக்கும். 2.3.2006க்குப் பிறகு புதன் தசை ஆரம்பம். அது உங்களுக்கு நற்பலனை அளிக்கும். கஷ்டங்கள் விலகும்.

கைகூடும்.

## கும்பம் :

நல்லது நடக்கும் வாரம். புகழ், கீர்த்தி, பணம் வந்து சேரும். முயற்சி செய்யும் காரியம் வெற்றி பெறும். குடும்பத்தில் சுப காரிய பேச்சுவார்த்தை நடக்கும். உடல்நிலையில் கவனம் தேவை. வாக்குவாதம் தவிர்க்கவும். தைரியமும் தன்னம்பிக்கையும் ஏற்படும். கொடுக்கல் வாங்கல் நற்பலனைத் தரும். சிலருக்கு இட மாற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். குடும்ப வாழ்வு நன்றாக இருக்கும். சத்ரு தொல்லை போகும். ராகு/ கேது வழிபாடு உத்தமம்.

## மீனம் :

சோதனைகளைக் கடந்து சாதனை படைக்கும் வாரம். பண வரவு காத்

திருக்கிறது. மதிப்பு, மரியாதை கிடைக்கும். கொடுக்கல் வாங்கலில் சிக்கல் தீரும். கணவர் / மனைவிக்குள் அனுசரணை தேவை. குழந்தைகளால் சந்தோஷம் ஏற்படும். சுபச்செலவு ரெடி. உடல் ஆரோக்கியம் பாதிக்காது. நண்பர்களால் அனுகூலம் ஏற்படும். ராகு / கேது / குரு வழிபாடு சிறந்தது.



# கேத்தரின் மோஸ்
## –சில குறிப்புகள்...

★ சாதனைகள் : போட்டோகிராப், சிலைகள், விளம்பரம் இப்படி எதுக்குன்னாலும் ஒயிலா போஸ் கொடுக்க எல்லோருடைய முதல் சாய்ஸ் மோஸ்தான். சர்வதேச முக்கிய பத்திரிகைகள் எல்லாவற்றிலும் முன் அட்டையில் இடம் பிடித்தது.

★ பிற சாதனைகள் : 2002-ல் ஒரு பெண் குழந்தைக்கு அம்மா ஆனது.

★ பிறந்தது : இங்கிலாந்தில். மறைக்கப்படாத வயது 31.

★ அடையாளம் : முன்னணி பூனை நடைக்காரி... அதாங்க கேட்வாக் மாடல்.

★ சர்ச்சைகள் : போதைக்கு அடிமை, பெரியகுடிகாரி, கேத் எய்ட்ஸால் பாதிக்கப்பட்டுள்ளார்.

# 'ஐஸ்' நாட்டு ஐஸ்!

**2005**-ன் 'மிஸ் வேர்ல்ட்' ஐஸ்லாந்து நாட்டு ஐஸ்வர்யாராய் (சில கோணங்களில் பார்க்கும்போது ஐஸ் மாதிரிதான் இருக்காங்க இவங்க!) உன்னுர் பிர்னா (வயது 21) சொன்ன வார்த்தைகள் சில...

**உலக அழகி ஆன நொடியில் :** போட்டியோட முடிவுல என் பெயரை அவங்க வாசிக்கறப்போ என் காதுல அது விழவே இல்ல. அதுக்கப்புறம் ஒலித்த 'எக்கோ'லதான் நான்தான் உலக அழகின்னு என்னால உணர முடிஞ்சுது. அடுத்த சில நொடிகளுக்கு உலகமே உறைந்து போய் நின்ன மாதிரி தோணுச்சு எனக்கு. உணர்ச்சிவசப்பட்டு என்ன பண்ணணும்னே தெரியாம சில நிமிஷங்கள் நின்னேன்.

**குடும்பம் :** தெரியுமா, எங்க வீட்டுல நான் ரெண்டாவது அழகி! ஆமா, 1983ல உலக அழகி யார் தெரியுமா? எங்க அம்மா

இவைபோக பல்வேறு பாலியல் குற்றச்சாட்டுகள் இந்த வருடம் கேத் மோஸ் மீது எழுந்தன. பல பெரிய நிறுவனங்கள் கேத் உடன் ஏற்படுத்திக் கொண்ட விளம்பர ஒப் பந்தங்களை ரத்து செய்தன.

★ இப்போது எல்லாவற்றையும் தாண்டி 2005ன் மிகச் சிறந்த பேஷன் ஐகான் ஆக கேத் தேர்ந்தெடுக்கப்பட்டுள் ளார். 'கேத் மாதிரி வருமா! கேட்வாக்னா அது கேத்தான். கேத் போட்டா அந்த டிரெஸ்ஸுக்கே தனி லுக் வந்துரும்' என முன்னணி பேஷன் விமர்சகர்கள் வாய்ஸ் கொடுக்க, அம்மணி இப் பொழுது மீண்டும் பிஸியோ பிஸி!

- ஷிவ்

# இளமை கல்கி

வளவு முடியுமோ அவ்வளவு உதவி பண்ணுவேன். முக் கியமா வறுமையில வாடுற குழந்தைகளுக்கும் புற்று நோய்க்கு எதிராகவும்.
(என்னதான் சொல்லுங்க... இந்த டயலாக்கை எந்த உலக அழகியும் தவறாம ஒப்பிச்சுடுறாங்க. செஞ்சா சரிதான்!)

- முகில்


உன்னூர் ஸ்டெய்ன்ஸன்! அந்த உலக அழகி கொடுத்த பயிற்சி யாலதான் இந்த உலக அழகியே உருவாகியிருக்கா!

**படிப்பு :** நான் லா படிக்கிற பொண்ணு. போட்டியில கலந் துக்க வந்தப்ப கூட கையில லா புக்ஸோடதான் வந்தேன். எப்பல்லாம் நேரம் கிடைக் குதோ அப்பல்லாம் படிச்சேன். என் ரூம்மேட் மிஸ். டென் மார்க் கூட என்னைப் பார்த்து கேலியா சிரிப்பா. இன் னொன்னு தெரியுமா! நான் பார்ட் டைமா ஏர்ஃபோர்ஸ்ல போலீஸ் ஆபிஸரா இருக்கேன்.

**பிற சாதனைகள் :** இந்த வருடமே மூணு அழகிப் பட்டங்கள். முதல்ல மிஸ். ஐஸ் லாந்து, ரெண்டாவதா மிஸ் நார்த் ஐரோப்பா, இப்ப உலக அழகி! ஹேட்ரிக்!

**லட்சியம் :** என்னால எவ்





# புதிய வரவேற்பாளினி!

**ஹோ**ண்டா ஒரு புதிய ரோபோவைக் கண்டுபிடித்திருக்கிறது. பெயர் அசிமோ. உயரம் 130 சென்டிமீட்டர். சரியான சுறுசுறுப்பு. கடுமையான உழைப்பாளி. சமர்த்து. முட்டியைப் பிடித்துக் கொண்டு உட்காராமல் ஒரே மூச்சில் மாடி ஏறும். ஜாகிங் போகும். ஆபிஸுக்குப் போகும்போது டாட்டா காட்டும். சொல்லிக் கொடுத்தால் ஃப்ளையிங் கிஸ் கொடுக்கும். விருந்தாளிகளுக்கு காபி, டீ கொடுக்கும். அது மட்டுமா?

விரைவில், அசிமோ வரவேற்பாளினியாக மாறப் போகிறது. பயிற்சிகள் முடிந்துவிட்டன. அடுத்த வருடம் முதல், ஹோண்டா அலுவலகத்தில் தனது பணியைத் தொடங்கவிருக்கிறது. ஒரு சுழல் நாற்காலியைப் போட்டு அதில் உட்காரவைக்கப் போகிறார்கள். சுற்றிச் சுற்றி விளையாடிக் கொண்டே வருவோர், போவோர் அனைவரையும் 'காலை வணக்கம், தங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும்?' என்று வசீகரமாக விளிக்கப்போகிறது.

கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டேயிருக்கும். பத்து ஒன்றுக்கு வந்தால்கூட, ''ஐயா, இன்று ஏன் இத்தனை காலதாமதம் ஆகிவிட்டது?'' என்று பெயர் சொல்லிக் கேட்கும். சென்சார் உண்டு. வேலை செய்பவர்களின் ஜாதகமே பதிவாகியிருக்கும். 'ஓ... ச்சோ பாவம் பா... குட்டி கண்டு விரலாச்சே, அதுலயா அடி பட்டுருச்சு... ச்சொ ச்சொ?' என்று காலை ஆட்டிக்கொண்டே காதலியிடம் நீட்டி முழக்கி கொஞ்ச முடியாது. 'ஐயா, தாங்கள் அலுவலகப் பணி புரியாமல் வேறு ஏதோ முக்கிய வேலையில் ஈடுபடுவது போல் தெரிகிறதே' என்று ஊரைக் கூட்டி அறிவிக்கும். சூது, வாது தெரியாது.

காக்காய் பிடித்துக்கொள்ள முயலலாம். 'பட்டுக்குட்டி' 'வெல்லக்கட்டி' 'அசிமோ செல்லம்' என்று அடிக்கடி கொஞ்சி பிரெண்ட் ஆக்கிக் கொண்டால் நல்லது. கடலை மிட்டாய் அல்லது காட்பரீஸ் கொடுத்துப் பார்க்கலாம். அல்லது என்ன பிடிக்கும் என்று கேட்டு வாங்கிக் கொடுக்கலாம். சினிமாவுக்குக் கூட்டிப் போகலாம். 'வாவ்.. இன்னிக்கு நீ சூப்பராயிருக்கே' என்று வழியலாம்.

எப்படியோ அசிமோவுக்கு உங்களைப் பிடித்துப்போனால் சரிதான். நிறைய உதவும். 'அன்பரே, தங்கள் காதலிக்கு நாளை மறுநாள் பிறந்தநாள். பரிசு வாங்கிப் போகவும்' என்று காதருகே வந்து கிசுகிசுக்கும்.

- மருதன்

இளமை கல்கி

# தலைமகள்!

"என் தந்தை மிகவும் ஸீரியஸாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோதும், அவர் அறையில் நுழைந்தால் 'காற்றினிலே வரும் கீதம்' என்று எம்.எஸ்ஸின் குரல் சி.டி.யில் ஒலித்துக்கொண்டிருக்கும். எம்.எஸ்ஸின் பரம ரசிகர் அவர். என் தந்தை மட்டுமல்ல, உலகெங்கிலும் லட்சக்கணக்கான மக்களைத் தன் தேனினும் இனிய குரலால் வசப்படுத்தியவர். அத்தகைய இசையரசிக்கு அஞ்சல் தலை வெளியிட வேண்டுமென்பது கலைஞரின் கட்டளை. அது, இன்று நிறைவேறுகிறது" என்றார் தயாநிதி மாறன்.

விழாவுக்கு முன்னர் ஒரு மணி நேரம் தன் கான மழையில் அனைவரையும் மூழ்கடித்துவிட்டார் நித்யஸ்ரீ மகாதேவன். 'காற்றினிலே' மற்றும் 'குறையொன்றும் இல்லை' பாடத் துவங்கியபோதும், முடித்தபோதும் எழுந்து கைதட்டல்...!

"எனக்கு அஞ்சல் தலை வெளியிட வேண்டாமென்று ராஜாஜி சொல்வார். காரணம் 'தபால்காரர் தன் கோபத்தையெல்லாம் காட்டும்விதமாக ஓங்கி, ஓங்கி அதன் மீது முத்திரை குத்துவாரே' என்று நகைச் சுவையாகச் சொல்வார் அவர்" என முன்னிலை வகித்த 'கல்கி' ராஜேந்திரன் சொன்னதும் அரங்கத்தில் சிரிப்பலை. தொடர்ந்த அவர், "ஆனால் எம்.எஸ்ஸின் முகத்தைப் பார்க்கும்போது, படு கோபக்காரர்கூட சாந்த ஸ்வரூபியாக மாறிப் போவார்" என்றார்.




'அஞ்சல் தலையை வெளியிட்டுப் பேசிய கலைஞர், அண்ணா, பெரியார் பிறந்த தினங்களுக்கிடையே எம்.எஸ் செப்டம்பர் 16 அன்று பிறந்ததைச் சுட்டிக் காட்டினார். நாடகத் தமிழுக்கும் இயற்றமிழுக்கும் இடையே இசைத்தமிழின் பிரதிநிதியாகப் பிறந்த எம்.எஸ்ஸை, 'தமிழிசை இயக்கத்தின் பெண் தளபதி' என்று வர்ணித்தார்.

அஞ்சல் துறை, ஐந்து ரூபாய் மதிப்புள்ள ஆறு லட்சம் எம்.எஸ். தபால் தலைகளை அச்சடித்திருக்கிறது.

'யோகா'வால் எடுக்கப்பட்ட எம்.எஸ் வண்ணப்படத்துடன் கறுப்பு வெள்ளை படமொன்றையும் சேர்த்து, தபால் தலையை வடிவமைத்தவர் சங்கா சமந்தா.



• வெளியீட்டு விழாவில்...

- ப்ரியன்
படம்: வெங்கட்

● ஆர். ராஜதுரை, சீர்காழி.

? *நடிகர் கார்த்திக் வரவால் தமிழ்நாட்டில் ஃபார்வர்ட் பிளாக் கட்சி காலூன்றுமா?*

! அதன் ஃபார்வர்ட் முயற்சி 'பிளாக்' ஆகாது என நம்பலாம்.

● ஷோபனாதாசன், நாட்டரசன்கோட்டை.

? *2005ல் தராசை மிகவும் நெருடிய சம்பவம் எது?*

! பெங்களூர் BPO பெண் பணியாளரின் குரூர முடிவு. இத்தகைய மனித மிருகங்கள் இருக்கிறார்களே என்ற வருத்தம் ஒருபுறம். மாறி வரும் சமுதாய அமைப்பு பெண்களுக்குத் தற்காப்பு உணர்வைத் தராமல் அசட்டுத் துணிச்சலைத் தருகிறதே என்கிற நெருடல், வருத்தம் மறுபுறம்.

● ஆர். கோபாலன், சென்னை - 33.

? *'வசிஷ்டர் வாயால் பிரும்மரிஷி' பட்டம் பெறுவது போல் கலைஞருக்கு ராஜாஜி விருது கிடைத்துவிட்டதே?*

! ராஜாஜி பெயரைத் தாங்கிய விருது என்பதால் பிரும்மரிஷி பட்டத்தை யொத்த மரியாதைக்குரியதாகக் கருதப்படலாம். ஆனால், வழங்கியவர் வசிஷ்டரும் அல்ல; பெற்றுக்கொண்டவர் விசுவாமித்ரரும் அல்ல!

● அ.ப. ஜெயபால், பரங்கிப்பேட்டை.

? *சௌரவ் கங்குலியை நீக்கியது சரியா?*

! அவர் நீக்கப்பட்டது சரி; மறுபடி ஒரு வாய்ப்பு தரப்பட்டது தவறு. இதனால் அவர் மறுபடி ஒதுக்கப்படும்போது கிரிக்கெட்டில் அரசியல் ஆவேசமாக நுழைய தாராளமாக இடம் அளித்ததாக ஆகிவிட்டது. தேர்வுக் கமிட்டி எண்ணித் துணிய வேண்டும். முடிவு எடுத்த பிறகு அதில் உறுதியாக நிற்க வேண்டும். கிரிக்கெட் வீரர்களும், ஓர் உயர்நிலைக்குப் பிறகு சரிவு உண்டாகும் என்ற பக்குவத்தை அடைந்து, கௌரவமாகவும் சந்தோஷமாகவும் விடைபெறப் பழக வேண்டும்.

● யமுனா ரெங்கநாதன், பெங்களூர் - 40.

? *பில்கேட்ஸின் இந்திய வருகையால் தீரப் போகிற பிரச்னைகள் என்னென்ன?*

! பிரச்னைகள் எதுவும் தீர்ந்து விடமாட்டா. ஆனால், புதிய தொழில் முயற்சிகளுக்கும் முதலீடுக்கும் பாதை போடப்பட்டிருக்கிறது. பல சமூக நலத்திட்டங்களுக்கு மைக்ரோஸாஃப்ட் அறக்கட்டளை உதவ உறுதி அளித்து, பணிகளைத் தொடங்கியும் விட்டது.



# சந்திப்பு; சந்திப்பு...

# வேறுபா

● ரேவதிப்ரியன், ஈரோடு - 1.

? *எம்.பி, எம்.எல்.ஏக்கள் தொகுதி மக்களுக்குப் பயப்படாவிட்டாலும் மீடியாவைக் கண்டு பயப்பட வேண்டிய நிலைமை வந்துவிட்டதே!*

! அதெல்லாம் ஒன்றுமில்லை. ரகசிய காமெரா, படம் பிடிக்காமலிருக்கவும், ரகசிய மைக் குரலைப் பதிவு செய்யாதிருக்கவும் என்னென்ன நவீன விஞ்ஞான



• சபாஷ்!


• ரிஸ்க்!




உபகரணங்கள் உள்ளன என்று ஷாப்பிங் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். கட்சிகள், நல்லவர்களை மட்டுமே வேட்பாளர்களாக்கவும்; வாக்காளர்கள், நல்லவர்களுக்கு மட்டுமே வோட்டுப் போடவும் முடிவு செய்தால்தான் விமோசனம்.

● அ. சுஹைல் ரஹ்மான்,
திருச்சி - 21.

? "பெரியார் - ராஜாஜி போல் அரசியலுக்கு அப்பாற்பட்ட நட்பு இருக்க வேண்டும்'' என்று கருணாநிதி கூறியுள்ளாரே?



• ஐ வாஷ்!



• என்ட்ரி!

# என்ன?

! ரொம்ப சரி. ஆனால் அன்று நிலவியது அரசியல் கருத்து மாறுபாடு. இன்று நிலவுவது பழிவாங்கல் உணர்வு. எனவே தி.மு.க - அ.தி.மு.க இடையே அரசியலுக்கு அப்பாற்பட்ட நட்பு உருவாக வழியில்லை. கொஞ்சம் சிரமப்பட்டால், கூட்டணி கட்சியினரிடையே உருவாகலாம்.

● அ. அப்துல் காதர்,
வினாத்திருனம் ★

? 'நமது நாட்டில் 18.4 கோடி குடும்பங்கள் உள்ளன. ஆனால் 22.8 கோடி ரேஷன் கார்டுகள் வினியோகிக்கப்பட்டுள்ளன' என்று மத்திய அரசு அறிவித்துள்ளதே?

! ஊழலின் ஊற்றுக்கண் ரேஷன்கார்டில் தொடங்குகிறது என்பது தெளிவாகிறது. ரேஷனை ஒழித்துக் கட்டிய ராஜாஜியின் தீர்க்க தரிசனம் புரி

• எக்ஸிட்!



கிறது. அந்த அளவுக்கு இன்றைய தலைவர்களுக்குத் தைரியம் கிடையாது என்பது தெரிகிறது.

● சித்ரா கிருஷ்ணமூர்த்தி,
கும்பகோணம்.

*? பில்கேட்ஸ் - முதல்வர் சந்திப்பு; பில் கேட்ஸ்- கலைஞர் சந்திப்பு - என்ன வேறுபாடு?*

! முதல்வர் சந்திப்பில் தயாநிதி இல்லை; கலைஞர் சந்திப்பில் தயாநிதி இருந்தார் என்பதுதான் வித்தியாசம். முதல்வர் சந்திப்பின்போது தயாநிதி இல்லாததற்குக் காரணம் முதல்வரின் முட்டுக் கட்டையா அல்லது தயாநிதியின் தயக்கமா என்பது தெரியாது... ஆனால், தவிர்த்திருக்கப்பட வேண்டும் என்பது நிச்சயம் தெரியும்.

● எஸ். கௌரிலக்ஷ்மி,
திருச்சி - 6 ❐

*? உளவுத்துறை தகவலை நம்பி ஈராக் மீது போர் தொடுத்த தவறுக்கு நான் பொறுப்பேற்கிறேன் என புஷ் கூறியுள்ளது பற்றி?*

! இரண்டாவது முறையாகத் தேர்தலில் வென்று ஜனாதிபதி பதவியைப் பெற்று விட்ட துணிவில், இனியும் உண்மைகளை மறைக்க முடியாது என்ற நிலையில், ஒப்புதல் வாக்குமூலங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வெளிப்படுகின்றன. யுத்த செலவு முழுவதையும் ஈராக்கிலிருந்து உறிஞ்சி எடுத்த பிறகுதான் ஈராக்கின் மீது அமெரிக்க மேலாதிக்கம் முடிவுக்கு வரும்.

● தேவந்தி துரைராஜ்,
திருவண்ணாமலை.

*? தே.மு.தி.க தமிழக தேர்தலில் தனித்தே அனைத்துத் தொகுதிகளிலும் போட்டியிடுகிறதாமே?*

! வீண் முயற்சி. நாலு தொகுதிகளில் மட்டுமே ஜெயித்தால்கூட நல்ல ஆரம்பமாகத்தான் இருக்கும். அனைத்து தொகுதிகளிலும் போட்டியிட முயன்று சக்தியை, உழைப்பை விரயமாக்கினால் நான்கில் கூட ஜெயிக்க முடியாது.

● வீ. முத்தையா, நெல்லை டவுன்.

*? சமையல் எரிவாயு விலையை உயர்த்தி விட்டால் அதன் தட்டுப்பாடு நீங்கி விடும் என்று மணிசங்கர் அய்யர் கூறியிருக்கிறாரே...?*

! ஒரு சர்வாதிகாரி கூட இத்தனை கேவலமாக ஓர் அறிக்கை விட முடியாது. கேஸ் விலை உயர்ந்தால் தட்டுப்பாடு எப்படித் தீரும்? சமைக்காத சோறா தின்ன முடியும்? மிகுந்த கஷ்டத்துக்கிடையில் கேஸ் விலையைக் கொடுத்து அழத்தான் வேண்டும். உற்பத்தி பெருக வழி தேட வகையில்லாவிட்டாலும் அபத்த அறிக்கைகளையாவது தவிர்க்கலாம்.



* ரவுசு!

● க.நா. இராஜேஸ்வரன்,
மொரட்டுப்பாளையம்.

*? உலக வர்த்தக அமைப்பு மாநாட்டில் ஏழை நாடுகளின் முன்னேற்றத்திற்குச் சலுகை திட்டங்கள் அறிவித்துள்ளார்களே, அந்தத் திட்டங்கள் எந்த மாதிரியாக இருக்கும்?*

! முக்கியமாகப் போராடிப் பெற்ற மாற்றம், வளர்ந்த நாடுகள் தங்கள் விவசாயப் பொருட்கள் மீதான மானியத்தை மெள்ள ரத்து செய்து 2010க்குள் முற்றிலும் நீக்கிவிட வேண்டும் என்பதே. இதன் விளைவாக, வளர்ந்து வரும் நாடுகளின் விவசாயப் பொருட்களுக்கு ஏற்றுமதி வாய்ப்பு பெருகும். இந்தியா போல் விவசாய உற்பத்தி அதிகரித்து வரும் நாடுகள் பயன்பெறும். இதற்குப் போராடிய கமல்நாத் பாராட்டுக்குரியவர்! ○

❐ ரூ 100 பரிசு பெறுபவர்:
எஸ். கௌரிலக்ஷ்மி,
12, 'அகிலா',
2, வி.எஸ். ஐயர் தெரு,
ரங்கநகர், ஸ்ரீரங்கம்
620 006


★ ரூ 50 பரிசு பெறுபவர்:
அ. அப்துல் காதர்,
37B, சாலையம் தெரு,
விளாத்திகுளம் அஞ்சல்,
தூத்துக்குடி மா.வ
628 907

# நனவாகும் கம்ப்யூட்டர் கனவுகள்!





• சகாயமேரி கில்பர்ட்



• ப. மீனாட்சி

"முதலில் கொஞ்சம் பயமாதான் இருந்தது- ஒரு முனையில் பில்கேட்ஸும், தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் இருக்க, அவர்கள் முன்பு வீடியோ கான்ஃபரன்ஸிங்கில் என்ன பேசப் போகிறோமோ என ஒரே தவிப்பாக இருந்தது. 'கணிப்பொறிப் பயிற்சியை பள்ளியில் எப்படிப் பயன்படுத்துவீர்கள்?' என தமிழக முதல்வர் கேட்டார். "கம்ப்யூட்டரில் பவர் பாயிண்ட், அனிமேஷன் போன்றவற்றைப் பயன்படுத்தி விரிவாகப் பாடம் நடத்தலாம். இதனால் வகுப்பறையே குதூகலமாக இருக்கும்னு பதில் சொன்னேன். என் பதிலைக் கேட்டதும், பில்கேட்ஸ் மற்றும் நம் தமிழக முதல்வர் இருவரது முகத்திலும் மெல்லிய புன்னகை படர்ந்தது. அதைக் கண்டதும் எனக்கு நிம்மதி வந்தது. உலகெங்கும் மூன்று நிமிடம் ஒளிபரப்பாகிய இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்றது புதிய அனுபவம்!" என்று கண்கள் அகலக் கூறுகிறார் மதுரை, மாத்தூர் அரசு உயர்நிலைப்பள்ளி இடைநிலை ஆசிரியை ப. மீனாட்சி.

"மைக்ரோசாஃப்ட் பவர் பாயிண்ட் ப்ரசன்டேஷன் ப்ரோக்ராம்' என்கிற செயல்பாடு ஒன்றை கம்ப்யூட்டரில் பொருத்தியுள்ளது. இதன்மூலம் ஆசிரியர்கள், தாங்கள் நடத்த வேண்டிய பாடப் பொருளை தக்க படங்களுடன் சேகரித்து, காட்சிகளாகவே காட்டிவிட முடியும். கம்ப்யூட்டரைத் தொட்டுப் பார்க்கக்கூட வாய்ப்பே இல்லாத எத்தனையோ மாணவர்களுக்கு இது வரப்பிரசாதம் தான்" என்கிறார் மதுரை, தல்லாகுளம் ஜெய்கோபால் கரோடியா மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியின் இடைநிலை ஆசிரியை சகாயமேரி கில்பர்ட்.


ப. மீனாட்சி, சகாயமேரி கில்பர்ட் இருவரும், அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் கணிப்பொறி பயிற்சி பெறும் ஆசிரியைகள். இத்திட்டத்தின் துவக்க நாளில் வீடியோ கான்ஃபரன்ஸிங்கில் இடம் பெற்ற சந்தோஷத் துடிப்பு மாறாமல் பேசுகிறார்கள்.

சமீபத்தில் தமிழக முதல்வர் ஜெயலலிதா முன்னிலையில் தமிழக அரசுக்கும் மைக்ரோசாஃப்ட் நிறுவனத்துக்கும் இடையே புதிய திட்டத்துக்கான ஒப்பந்தம் கையெழுத்தானது. 'சர்வ சிக்ஷா அபிக்ஞான்' கல்வித் திட்டத்தின் கீழ், பள்ளி ஆசிரியர்களுக்கு கணிப்பொறி தொழில்நுட்பத்தை எம்.எஸ். நிறுவனம் இலவசமாகச் சொல்லித் தருகிறது. மத்திய - மாநில அரசுகளின் கூட்டு நிதியுதவியுடன் செயல்படும் இத்திட்டத்தால், ஆசிரிய - மாணவர்களின் கணிப்பொறி அறிவு மேலும் சிறக்கும் என்பதால், பலத்த வரவேற்பு கிடைத்துள்ளது.

"துவக்கப்பள்ளி முதல் இடைநிலை ஆசிரியர்கள் வரை தற்போது கிடைத்து வரும் கணிப்பொறிப் பயிற்சியே புதிது எனக் கூறி வருகிறோம். இன்னும் சில மாதங்களில் எஜுசாட் எனப்படும் செயற்கைக்கோள் கல்வி முறைப் பயிற்சியும் எங்களுக்குக் கிடைக்கப் போகிறது என்று நினைத்தாலே உற்சாகமாக இருக்கிறது" என்கின்றனர் மீனாட்சியும் சகாயமேரி கில்பர்ட்டும்.

**- ஸ்ரீரங்கம் திருநாவு**

*என் நாம மந்திரம்*
*என் பாதம் சேர்க்கும்*
*என் கிருஷ்ண தந்திரம்*
*பாதகம் தீர்க்கும்!*
**- ஸ்ரீ கிருஷ்ணன்**



அந்த அறையின் வாசலில் தெரிந்த உருவமும், அதன் கம்பீரமும் முதலில் அனுராதாவைத் தான் ஒரு புரட்டு புரட்டியது. 'எது அழகு?' என்று ஒரு வாசகர் அவள் பணியாற்றும் பத்திரிகையில் கேள்வி பதில் பகுதியில் கேட்டிருந்தார். அது அவரவர்கள் ரசனையைப் பொருத்தது என்றுதான் அப்போது பதில் சொல்லப்பட்டிருந்தது. அந்தப் பதில் இப்போது அனுராதாவின் மனத்தில் ஞாபகத்தில் வந்து, சற்றுமுன் வந்தவர் எதிரில் நொறுங்கிப் போனது போலத்தான் உணர்ந்தாள். கமலக்கண்ணன் என்கிற பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறாள். இப்போது அதன் பொழிப்புரையாக நிற்பவன் கண்களைப் பார்க்கிறாள். ஒரு வித பிரமிப்பு. ஒரு வித ஸ்தம்பிப்பு. ஒருவித மௌனம்.. இல்லையில்லை நிசப்தம். மௌனம் என்பது மனத்துக்குள் பேசிக் கொள்வது. நிசப்தம் என்பது அதுகூட இல்லாதது..

அவனோ சிரித்தான்.

"இதுதானே கணேஷ் இருக்கற இடம்?" என்று மென் குரலில் கேட்டான். அட, அந்தக் குரல்... அது ஒலித்தவிதம் கூடவா அதற்குமுன் கேட்டிராத ஒன்றாக இருக்க வேண்டும்? அனுராதா அதிலும் மயங்கிக் கரைந்தாள்.

"மேடம்..."


"உம்."

"மிஸ்டர் கணேஷ்."

"உள்ளதான் இருக்கார்... நீங்க?"

"நான் கண்ணன்...!" அவன் தன் பெயரைத்தான் சொன்னான். அவனுக்கோ நடு முதுகில் ஒரு

**இந்திரா சௌந்தர்ராஜன்**



# 22

மின்னல் மையமிட்டு தெளிவெடுத்த மாதிரி இருந்தது.

அவன் கைகளில் ஒரு துணிப்பை! மிக மிக நேர்த்தியான வேலைப்பாடுகளுடன் யாரோ தயாரித்தது போல இருந்தது. அதில் ஒரே ஒரு மயிலின் தோகை பொறிக்கப்பட்டிருந்தது. பையின் மறுபுறத்தில் ஆசீர்வதிப்பது போல ஒரு கரம். அந்தக் கரத்தின் உள் பாகத்தில் ஓம் என்கிற எழுத்துபோல ரேகை ஓட்டம்...!

அவன் சற்றுக் குனிந்து உள்ளே நுழைந்து வந்தான்.

"சரியான நேரத்துக்குத் தான் வந்திருக்கேன் போல இருக்கு.." என்றான்.

"நீ... நீ.. நீங்க?" - ஏனோ கணேஷிடம் திணறல்.

"நான் கண்ணன்!" - திரும்பவும் முன் சொன்ன அதே பதில்.

"எந்தக் கண்ணன்?"

"அட.... என்னை நீங்க எதிர்பார்க்கலையா?"

"உங்களை நான் எதுக்கு எதிர்பார்க்கணும்...?"

"சரிதான். நான் இப்ப உங்களுக்கு உதவி செய்ய வந்துருக்கேன். உங்களுக்கு என்ன உங்களுக்கு... உனக்கு... என்ன உனக்கு இருபத்தி ஏழு, இருபத்தி எட்டு வயசு இருக்குமா? நான் பெரியவன்..."

- அவன் பெரியவன் என்று தன்னை கையைக்காட்டி சொல்லும் விதமே அலாதியாக இருந்தது. "ஓ... ஆடிட்டர் அனுப்பறேன்னு சொன்ன நபரா நீ... நீங்க..." - கணேஷால் ஏனோ அவனை ஒருமையில் விளிக்க முடியவில்லை. அவனது கம்பீரம் கணேஷ் நாவில் மரியாதையாக மாறிவிட்டது.

"ஆடிட்டர்னா கணக்கா இருக்கறவர் தானே?" அவன் கேள்வியில் ஒரு உட்பொறி. கணேஷ் பதிலுக்கு வெறித்தான்.

"அப்ப சரிதான்.. உனக்கும் கணக்கு தானே எல்லாம்... ஐ திங் காலேஜிலேயே நீ ஒரு பேச்சுப் போட்டியில கணக்குதான் கடவுள்னு பேசியிருக்கேல்ல?" அந்தக் கேள்வி கணேஷை நெம்பி நிமிர்த்தியது.

"அது எப்படி உங்களுக்குத்



# எங்கே என் கண்ணன்?

தெரியும்?"

"அதுமட்டுமா?" - பதிலுக்கு அவன் கேட்டவிதம், அப்படியே அந்த துணிப்பையை ஒரு ஓரமாக வைத்த விதம் மெல்ல கணேஷின் காலடியில் அமர்ந்து அதைப் பார்த்த விதம் என்று எல்லாவற்றிலும் ஒரு லயம்.

"ஆமா சுளுக்கா... இல்லை முறிவா?"

கேட்டபடியே கால்மேல் அவன் கைவைக்க கணேஷுக்குள் ஒரு புது பரவசம் தள்ளு தள்ளு என்று கூட்டத்தை விலக்கிக் கொண்டு வேகமாக உள் புகுந்த மாதிரி இருந்தது.

"எதுவா இருந்தாலும் இனி சரியாயிடும். கணக்குத் தீர்க்க ஒரு கணக்கர் அனுப்பில்ல வந்திருக்கேன்." என்று அப்படியே கழுத்தை வளைத்து அனுராதாவைப் பார்த்து கண்களைச் சிமிட்டி ஒரு சிரிப்பு சிரித்தான்.

ஜன்னல் குருவிகளும் மற்ற பட்சிகளும் ஒரேயடியாக சப்தமிட்டன. அனுராதா அந்த நிலையில் அவற்றை இடைஞ்சலாகக் கருதி "ஸ்கூ..." என்று கையை ஓங்கிக்கொண்டு ஜன்னல் அருகே சென்றாள். உடனே சிதறிப் பறந்தன. அப்படியே திரும்பி வந்தாள். திரும்பவும் அவை படபடவென்று ஜன்னலில் அடைந்தன. திரும்பவும் அந்த கோலாகல குதூகலச் சப்தம். அந்தக் கண்ணனும் உடனே திரும்பிப் பார்த்தான். திரும்பவும் விரட்டப் போன அனுராதாவைப் பார்வையாலேயே தடுத்தவன், மெல்ல ஒரு தளிர்நடை நடந்து ஜன்னல் அருகே சென்று தன் வலக்கையை மெல்ல நீட்டினான். அப்படியே உதட்டைக் குவித்து விசிலடித்தான். அது கிட்டதட்ட குழலோசை போலவே இருந்தது. நீட்டிய அவன் கரத்தின் மேல் எல்லா பட்சிகளும் வந்து அமர்ந்து கொண்டன. ஒரு கிளி அவன் தலையை என்னவோ தனது கூடு போலக் கருதி அமர்ந்து கொண்டது.

அப்படியே திரும்பியவன் கண்களைச் சுழற்றி பட்சிகளைப் பார்த்தபடியே சிரித்தான். அப்படியே "நான் என்ன மரமா.. என் தலை என்ன உங்களுக்கெல்லாம் கூடா... எப்படா வருவேன்னு காத்துக்கிட்டிருந்தீங்களோ?" - என்று நெடு நாள் பழகினவன்போல அவற்றிடம் பேசினான். அவை அப்படியே அமைதியாகிவிட்டன.

"என்ன... சத்தமெல்லாம் அடங்கிப் போச்சு? அவ்வளவுதானா? என்கிட்ட வந்த உடனே உங்களுக்கும் அமைதி ஏற்பட்டாச்சா... என்ன சுக மகரிஷி..?

என்று தலைமேல் உள்ள கிளியை பிடித்து அப்படியே கண்முன் வைத்துக் கொண்டு பார்த்துச் சிரித்தான்.

அனுராதாவுக்கும்சரி, கணேஷுக்கும் சரி அந்தக் காட்சி, அந்தப் பேச்சு எல்லாமே புதிது. அனு சட்டென்று கேமராவை வேகமாகத் தேடி எடுத்து பட்சிகளோடு அவனைப் படம் எடுக்கத் தயாரானாள். அவனும் சிரித்துக் கொண்டே போஸ் கொடுத்தான். தோள்மேல் இரு குருவி. சட்டைப் பாக்கெட்டில் சரிந்து விழுந்து விடுவதுபோல் ஒரு குயில், மறு பக்கத் தோளில் ஒரு வாலாட்டி, அவன் கைகளில் ஒரு கிளி.

'க்ளிக்... க்ளிக்...' - என்று அவளிடம் நல்ல வேகம். கணேஷ் உடம்பை ஒரு சிலிர்ப்பு சிலிர்த்துக் கொண்டான். அவனும் "சரி... ச்ரி... என்மீது உட்கார்ந்தது போதும். இனி நீங்க மேல போகலாம்" என்று ஜன்னல் அருகே சென்று ஒவ்வொன்றாக வீசி எறிய அவை படபடவென்று உச்சிவானம் நோக்கியே சென்றதுதான் விந்தை.


"போங்க... போங்க... ஆகாயம்தான் இனி உங்க உலகம்..." என்றபடியே திரும்பியவன் முகத்தில் மீண்டும் ஒரு மாயச் சிரிப்பு.

"பூ விக்கிறவரோட பொண்ணைக் கட்டிக்கிட்டது தப்பாப் போச்சு!"

"ஏன்டா அப்படிச் சொல்றே?"

"காலையிலே என்னை தண்ணி தெளிச்சு எழுப்புறாடா!"

- ஜி.வி.சுபாஷ்



"மிஸ்டர் கண்ணன்... உங்களை நான் என் ஆடிட்டர்கிட்ட பார்த்ததே இல்லையே..."

"அதனால?"

"இல்ல.. அவர் என்ன சொல்லி அனுப்பினார்?"

"உன் வேலை எல்லாம் இனி என் வேலை. நீ ஓய்வெடுத்துக்கோ. எல்லா கணக்குகளையும் சரி பார்த்து கூட்ட வேண்டியதைக் கூட்டி, பெருக்க வேண்டியதைப் பெருக்கி, கழிக்க வேண்டியதைக் கழிச்சு, வகுக்க வேண்டியதை வகுத்துக் கொடுத்துட்டு போகத்தான் வந்துருக்கேன்..."

"அதுசரி, எப்படி இவ்வளவு சீக்கிரம் சென்னைல இருந்து வர முடிஞ்சுது...?"

"பறந்துதான்..."

"ஓ... ஃப்ளைட்லயா? அட ஆமாம்ல... ஆடிட்டர் எவ்வளவு வேகமா அனுப்ப முடியுமோ அனுப்பறேன்னார். எனிவே தேங்க்யூ..."

"அட, எதுக்கு இந்த அவசரம். நான் என் வேலையை இன்னும் ஆரம்பிக்கவே இல்லையே..."

"ஆமா... இது என்ன துணிப்பை? இந்த பையோடயா ஃப்ளைட்ல?"

அந்தக் கேள்விக்கு அவன் பதில் கூறவில்லை. பதிலுக்கு ஒரு சிரிப்புதான். கணேஷும் அதை அதற்கு மேல் நோண்டவில்லை. அவன் உற்றுப் பார்த்த விதத்தில் மனதுக்குள் இனம் புரியாத மாற்றம்...

அப்போது கணேஷின் செல்போன் அவன் கவனத்தைத் தன் பக்கமாகத் திருப்பியது. எடுத்துப் பேசினான்.

"ஹலோ..."

"பத்ரி நாத்ல இருந்து நான் டாக்டர் பேசறேன். அந்த பூஜையை முடிச்சுட்டீங்களா?"

"முடிச்சுட்டேன் டாக்டர் சார்... எனக்குத் தெரிஞ்ச விதத்துல செய்துருக்கேன். ஆனா மிஸ்டர் சீனு என்னென்னவோ மந்திரம் சொல்வார்.. ஸ்பூன்ல தண்ணி எடுத்துக் காட்டுவார். அப்புறம் கையை ஆட்டி ஆட்டி ஏதோ செய்வார். எனக்கு அதெல்லாம் தெரியாது. புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே பாட்டோட ராகம் எனக்கு ரொம்ப பிடிக்கும். அதைத்தான் நானும் பாடினேன்..."

"நோ பிராப்ளம்.. நீங்க இவ்வளவு செய்ததே பெருசு. அந்தக் கண்ணனும் பக்தியைத்தான் பெருசா நினைக்கறவன். அதுக்கு உதாரணமா ஒரு கதையே உண்டு. பாமாவும் ருக்மணியும் கண்ணன்கிட்ட போட்டி போடுவாங்க. பாமா, தன் பக்திதான் பெருசுன்னு நினைப்பா. ஆனா ஒரே ஒரு துளசி இலையை வெச்சு ருக்மணி பாமாவை ஓவர்டேக் பண்ணிடுவா. இந்தக் கதை எனக்கு முழுசா தெரியல. நான் சொல்றது தப்பா கூட இருக்கலாம். ஆனா ஒண்ணு மட்டும் தெரியும். ஒரே ஒரு துளசியை கிள்ளி 'ஓம் கிருஷ்ணாய நம'ன்னு சொல்லி போட்டா போதும், அந்த கிருஷ்ணன் அதுக்கு மகிழ்ந்து அனுக்ரகம் பண்றவன்... எனிவே, நாளைக்கும் திருவாராதனையை ஐ மீன் பூஜையை மறந்துடாம பண்ணிடுங்க. இங்க நீங்க பேசறத ஸ்பீக்கர் போன்ல மிஸ்டர் சீனுவும் கேட்டுக்கிட்டிருக்கார். அவர் முகத்துல இப்பதான் நிம்மதி தெரியுது..."

டாக்டர் பேசியதைத் தொடர்ந்து கணேஷும் "அப்பாடா... எப்படியோ அவருக்கு நல்லது நடந்தா சரி..." - என்றான். அப்போது தன் சட்டைப் பாக்கெட்டில் இருந்து ஒரு துளசி இலையை எடுத்தபடி இருந்தான் கண்ணன்.

(தொடரும்)



'வேட்டையாடு விளையாடு' படத்துக்காக அமெரிக்காவின் 'பேண்ட் ப்ளேயர்ஸ்' பாட ஆங்கில ராப் பாடல் ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த டைட்டில் பாடல், புத்தாண்டு அன்று கமல் பாட, ஹாரீஸ் இசையில் ஒலிப்பதிவாகிறது.



# போட்டுத் தாக்கு!

## கார்த்திக்கிடம் கேட்கக்கூடாத 10 கேள்விகள் :

1 பழைய தேவர் ஃபிலிம்ஸை நீங்கதான் இனிமே நடத்தப் போறீங்களாமே... உண்மையா?

2 ஃபார்வர்டு பிளாக்ல சேர்த்துக்கலைன்னா ரிவைண்டு பிளாக்னு ஒரு கட்சியை ஆரம்பிச்சுடுவீங்களாமே...?

3 சொல்லி வச்சா மாதிரி, நீங்க பேச ஆரம்பிக்கறதுக்கு முன்னாலேயே எப்படிங்க கூட்டம் கலையுது?

4 குஷ்பூவைத்தான் உங்க கட்சிக்கு கொ.ப.செ.வா ஆக்கப் போறதா சொல்றாங்களே... சரிப்பட்டு வருமா...?

5 அவைத்தலைவர் போஸ்ட்டுக்கு ரிட்டயர்டு அரசியல்வாதிகள் தேவைன்னு விளம்பரம் கொடுக்கப் போறீங்களாமே...

6 போயஸ்தோட்டத்தைச் சரணாலயமா மாத்த முயற்சி பண்ணி தோத்துட்டீங்களாமே...

7 மீட்டிங்குக்குப் போறப்போ தமிழ் டு தமிழ் டிரான்ஸ்லேட்டர் ஒருத்தரைக் கூடவே அழைச்சுக்கிட்டுப் போறதா சொல்றாங்களே... நெசந்தானா பொன்னுரங்கம்?

8 விவேக்கும் செந்திலும் உங்ககிட்டயிருந்து சைக்கிள் கேப்ல எஸ்கேப் ஆயிட்டாங்களாமே... என்ன காரணம்னு விசாரிச்சீங்களா...?

9 உங்க பேருக்குப் பதிலா அப்பா பேரோட லிங்கத்தைச் சேர்த்து முத்துராமலிங்கம்னு மாத்தி வச்சுகிட்டா வோட்டுகளை ஒரு அள்ளு அள்ளிடலாம்ல...

10 வெத்தல போட்ட ஷோக்குல தான் மேடையிலயும் பேசுவீங்களா...

—பாமு

இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



# VEDIC LINKS

## Vedas on CD

ஆஸ்திக அன்பர்கள் பலரின் விருப்பத்தின்படி
ஸ்ரீ கிருஷ்ண யஜுர்வேதம் முழுவதும்
MP3 யில் (12 CD's) வெளியிட்டுள்ளோம்.
(ரூ. 1,600 மட்டும்)

வேதோ ரக்ஷிதி ரக்ஷித:

நமது பாரத புண்ணிய பூமியின் பொக்கிஷமானது வேத மந்திரங்கள் இந்த வேத மந்திர சப்தத்தினால் இயற்க்கையின் இடர் பாடுகளில் இருந்து மீண்டு வேத மாதாவின் அருளால் நாட்டிலும், இல்லத்திலும் சுபிக்ஷம் உண்டாகி அனைவரும் பரம ஸ்ரேயஸை பெருவோம்.

கிருத்திகா மண்டல வேத பாராயணம் என்று கார்த்திகை மாதம் முதல் மார்கழி மாதம் வரை இல்லங்களிலும், ஆலயங்களிலும் வேத பாராயணம் நமது தேசம் முழுவதும் தொடர்ந்து நடைபெற்று வருவது யாவரும் அறிவோம். இந்த கார்த்திகை மாதத்தில் அனைவரது இல்லத்திலும், ஆலயங்கள், தர்ம ஸ்தாபனங்கள் போன்றவற்றில் தினந்தோறும் மாலை வேலைகளில் வேத பாராயணம் கேட்கும் வகையில் 'ஸ்ரீ கிருஷ்ண யஜுர்வேதத்தை (7 காண்டம், 3 அஷ்டகம், அருணம், காடகம்) முழுவதும் 46 CDகளில் வேத பண்டிதர்களை கொண்டு டிஜிட்டல் முறையில் பதிவு செய்து உள்ளோம்.

அன்பர்கள் அனைவரும் இதனை பயன்படுத்தி பரம ஸ்ரேயஸை பெற வேண்டுமாக பிராத்தித்துக்கொள்கிறோம்.



| Description | No's | Cost per set in Rs. | |
|---|---|---|---|
| | | CD | Cassettes |
| Sri Krishna Yajur Vedam Saakai | 24 | 2000.00 | 900.00 |
| Sri Krishna Yajur Vedam Samhitha | 22 | 1850.00 | 850.00 |
| Rudram / Sukthams | 1 | 50.00 | 40.00 |
| Suryanamaskaram | 2 | 100.00 | 80.00 |
| Upanishad | 2 | 100.00 | 80.00 |
| Achidra - Aswamedham | 3 | 150.00 | 120.00 |
| Bhuvaneswari Suprabhatham | 1 | 50.00 | 40.00 |
| Abissravana Manthram | 2 | 100.00 | - |
| Panchayathana Manthram | 2 | 100.00 | - |

**Postal Charges Extra, D.D. / Cheque in favour of "Vedic Links"**

For Requirements Contact : VEDIC LINKS
Sri Krishna, 353/1, Dr. Lakshmanaswamy Road,
K.K.Nagar, Chennai - 600 078. India
Phone : +91-44-2474 4188 / 5203 1302
e-mail : vedam4@vediclinks.net website : www.vediclinks.net

இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / CC (S) DN / 144 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 70 / 06 - 08* Registered as a Newspaper in Srilanka.



## மாதங்களில்



# மார்கழி நான்.

பகவான் கூறுகிறார்:

சூரியோதயத்துக்குச் சற்று முன்புள்ள நேரம் பிரம்ம முகூர்த்தம் எனப்படுகிறது. ஆத்ம சாதனத்துக்கு அது சிறந்த வேளையாகும். மனிதர்களுடைய ஒரு வருஷம் தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். தை மாதமாகிய உத்தராய புண்ணிய காலம் அவர்களுக்கு சூரியோதயம். அதிலிருந்து உத்தராயணம் ஆறு மாதம் அவர்களுக்கு பகல். ஆடியிலிருந்து மார்கழி வரையில் தக்ஷிணாயணம் அவர்களுக்கு இரவு. அதில் மார்கழி மாதம் விடியற்காலம் தேவர்களது நாளில் பிரம்ம முகூர்த்தமாகிறது. அப்பொழுது செய்யும் தேவாராதனை, வந்தனை, வழிபாடு முதலியன மனதை நன்கு பண்படுத்த வல்லவைகளாம். இங்ஙனம் மார்கழி மாதம் புலனடக்கம், கடவுள் வழிபாடு ஆகியவைகளோடு முழுவதும் இணைக்கப்பட்டிருக்கிறபடியால் மாதங்களுள் தாம் மார்கழி மாதம் என்கிறார்.

பகவான்

## ஸ்வீட்களில் சிறந்தது கிராண்ட் ஸ்வீட்ஸ்

**இனிப்புகள்:-** மங்களூர் போளி, ரஸமலாய், ஸோன்பப்டி, இனிப்பு சோமாஸ், பொரிவிளங்காய் உருண்டை, தேங்காய் கோவா, குங்குமப்பூ ஹல்வா.

**காரவகைகள்:-** தட்டை, தேன்குழல், கைமுறுக்கு, சீடை, ஸ்பெஷல் மிக்ஸர், சீப்புச்சீடை, இரயில் கட்டிடம், வறுபயறு, விஜிடபிள் சமோசா.

**பொடி வகைகள்:-** கருவேப்பிலைபொடி, பருப்புப் பொடி, இட்லி பொடி, ரசப்பொடி, சாம்பார் பொடி, ஊறுகாய் பொடி.

**திருமண வைபவங்களுக்கு:-** சீர்முறுக்கு, சீர்அதிரசம், முள்ளுத்தேன் குழல், பருப்புத் தேங்காய் வகைகள், திரட்டுப் பால், அப்பம் முதலியன.

### தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

எண்.24, 2வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு, சென்னை - 600 020.
போன்: 24915662, 24914213
1/1, G பிளாக், 8வது குறுக்குத் தெரு,
7வது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை. போன்: 52634433